


"தோழர் **வே.ஆனைமுத்து** வழியில்"

**சுவடி : 2** **ஏடு : 9**

**செப்டம்பர்-அக்டோபர் 2023**

**ஆசிரியர்**

வாலாசா வல்லவன்

**ஆசிரியர் குழு**

க. முகிலன்

சா. குப்பன்

தி. துரை சித்தார்த்தன்

முனைவர் முத்தமிழ்

சி. நடராசன்

ந. கருணாகரன்

இரா. திருநாவுக்கரசு

**இதழ் வடிவமைப்பு :**

**சன் நகலகம்**

சென்னை - 600 005.

பேசி : 98400 15179

**அனைத்துத் தொடர்புகளுக்கும்**

ஆசிரியர் **'புதிய சிந்தனையாளன்'**

2/12, சி.என்.கே.சந்து,

சேப்பாக்கம், சென்னை – 600 005.

தொடர்புக்கு :

**86681 09047, 98947 28032**

**94885 34225**

மின்னஞ்சல் :

sinthanaiyalantamilmonthly@gmail.com

*

இணையத்தில் படிக்க

www.keetru.com


**ஆசிரியவுரை**

# ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டம் தீய நோக்கம் கொண்டது

வரலாற்றில் இந்தியா என்பது என்றைக்கும் ஒரே நாடாக இருந்தது இல்லை. இங்கிலாந்தின் கிழக்கிந்திய வணிகக் குழுமம்தான் கி.பி.1700 களில் கல்கத்தாவை தலைநகராகக் கொண்டு மையப்படுத்தப்பட்ட ஆட்சி முறையை உருவாக்கியது. பெரிய நிலப்பரப்பு என்பதால் நிர்வாக வசதிக்காக முதலில் மூன்று மாகாணங்களை உருவாக்கியது. படிப்படியாக 1947-க்குள் 11 மாகாணங்களாக விரிவடைந்தது. மாகாணங்களை ஆளுநர்கள் மூலம் ஆட்சி செய்தது.

1857இல் ஏற்பட்ட சிப்பாய்க் கலகம் எனப்படும் முதல் சுதந்திரப் போராட்டத்தின் விளைவாக 1858இல் இந்தியாவை பிரித்தானிய அரசு தன் நேரடி ஆட்சியின்கீழ் கொண்டு வந்தது.

1919இல் மாண்டேகு-செம்ஸ்போர்டு சட்டத்தின்படி மாகாணங்களுக்கும் ஒன்றிய அரசுக்கும் சட்டசபைகள் ஏற்படுத்தப்பட்டன. இரட்டை ஆட்சி முறையில் படித்தவர்களும், பணக்காரர்களும் வாக்களித்து வேட்பாளர் களைத் தேர்வு செய்தனர். சில துறைகளின் பொறுப்புகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களுக்கும் பிற முதன்மையான துறைகளின் பொறுப்பை ஆளுநர் நியமனம் செய்பவர்களுக்கும் அளிக்கப்பட்டது.

1935இல் இயற்றப்பட்ட இந்திய அரசியல் சட்டத்தின்படி இரட்டை ஆட்சி முறை நீக்கப்பட்டு ஒற்றை ஆட்சி முறை உருவாக்கப்பட்டது. மாகாணங் களுக்கு அதிக அதிகாரமும் அமைச்சர்கள் எண்ணிக்கையும் உயர்த்தப் பட்டன. மாகாணங்களில் கீழவை, மேலவை என்று உருவாக்கப்பட்டன.

இரண்டாம் உலகப் போரின் (1939-1945) முடிவிற்குப் பிறகு 1946இல் இந்தியாவிற்கு சுதந்திரம் அளிப்பதாக ஆங்கிலேய அரசு அறிவித்தது. 1946இல் சட்டமன்றங்களுக்கும் நாடாளுமன்றத்திற்கும் தேர்தல்கள் நடத்தப் பட்டன. அந்தத் தேர்தலில் வெற்றி பெற்றவர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப் பட்டவர்களைக் கொண்ட அரசியல் நிர்ணய சபை உருவாக்கப்பட்டது.

1946 திசம்பர் ஒன்பதாம் நாள் அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டம் நடைபெற்றது. 1949 நவம்பர் 26இல் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் அண்ணல் அம்பேத்கர் அவர்களை வரைவுக் குழுவின் தலைவராகக் கொண்டு எழுதி முடிக்கப்பட்டது.

1947 ஆகத்து பதினைந்தாம் நாள் இங்கிலாந்து அரசு இந்தியாவிற்கு சுதந்தரம் வழங்கியது. இந்தியா-பாக்கித்தான் என இரு நாடுகளாகப் பிரித்து அளித்தனர். அக்காலக்கட்டத்தில் இந்தியாவில் 562 சிற்றரசர்கள் ஆட்சி செய்து வந்தனர்.

மூன்றில் இரண்டு பங்கு நிலப்பரப்பு இங்கிலாந்து அரசின் நேரடி ஆட்சியிலும் மூன்றில் ஒரு பங்கு நிலப்பரப்பு சிற்றரசர்களின் ஆட்சியின் கீழும் இருந்தன. இந்தியா என்பது ஒரு துணைக் கண்டம் பல்வேறு மொழிகளை பேசக்கூடிய, பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட பரந்த நிலப்பரப்பாகும்.

1950 சனவரி 26இல் நடைமுறைக்கு வந்த அரசியல் அமைப்புச் சட்டத்தில் இந்தியா அதாவது பாரதம் என்பது மாநிலங்களின் ஒன்றியம் என்று குறிப்பிட்டிருந்தபோதிலும் ஒற்றை அதிகாரம் படைத்த அரசாகவே இது கட்டி அமைக்கப்பட்டது.

1956இல் மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. இன்று இந்தியாவில் 28 மாநிலங்களும் எட்டு யூனியன் பிரதேசங்களும் உள்ளன.

1967 வரை மாநிலங்களுக்கும் நாடாளுமன்றத் திற்கும் ஒரே நேரத்தில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. மாநில அரசுகளைக் கலைக்கின்ற அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவு 356இன்படி 1969இல் சில மாநில அரசுகளை ஒன்றிய அரசு கலைத்தது. 1972இல் நடைபெற வேண்டிய தேர்தலை 1971இல் ஒன்றிய அரசு நடத்தியது.

அதன்பிறகு பல்வேறு மாநில அரசுகளை ஒன்றிய அரசு கலைத்தது. மாநில அரசுகள் கலைக்கப்பட்டால் ஆறு மாதத்திற்குள் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் (நெருக்கடி நிலை காலம் தவிர). அதனால் பல மாநிலங் களில், பல காலகட்டங்களில் தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன.

ஒரே நாடு, ஒரே தேர்தல் நடத்தினால் செலவினம் குறையும்; தேர்தல்களில் ஈடுபடுத்தப்படும் அலுவலர்களின் பணிநேரம் வீணாவது தடுக்கப்படும். தேர்தல் நடைமுறை விதிகள் காரணமாக மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஏற்படும் சுணக்கம் தவிர்க்கப்படும் என்பன ஒன்றிய அரசு முன்வைக்கும் கருத்தாகும். ஆனால் அதன் உள்நோக்கம் வேறாக உள்ளது.

நாடாளுமன்றத்திற்கும் மாநிலங்களுக்கும் ஒரே நேரத்தில் பொதுத் தேர்தல் நடத்தும்போது மாநிலங் களுக்கே உரித்தான தேவைகள், சிக்கல்கள் புறக் கணிக்கப்படும். மாநிலங்களின் உரிமைகள் பின்னுக் குத் தள்ளப்படும். மாநிலக் கட்சிகள் செல்வாக்குப் படிப்படியாகக் குறையும். ஒன்றிய அரசில் அதிகாரங்கள் மேலும் குவிக்கப்படும் நிலை ஏற்படும். ஒரே தேர்தல் என்பது கூட்டாட்சிக் கோட்பாட்டுக்கு முற்றிலும் எதிரான தாகும்.

ஒரே நேரத்தில் நாடாளுமன்றத்திற்கும் சட்டமன்றங் களுக்கும் தேர்தலை நடத்த வேண்டும் என்று 1982இல் தேர்தல் ஆணையம் அறிவித்தது. நீதிபதி ஜீவன்ரெட்டி தலைமையிலான சட்ட ஆணையம் 1999இல் இதே கருத்தை அறிவித்தது. தலைமை அமைச்சர் வாஜ்பேயி 2003இல் இதை அறிவித்தார். எல்.கே.அத்வானி 2010இல் இதே கருத்தைத் தெரிவித்தார். 2014இல் பா.ச.க. தேர்தல் அறிக்கையில் ஒரே நாடு, ஒரே தேர்தல் முறை கொண்டு வரப்படும் என்பதை அறிவித்தது.

2018இல் நீதிபதி சௌகான் தலைமையிலான சட்ட ஆணையம் ஒரே தேர்தல் முறையைப் பரிந் துரை செய்தது. ஆனால் இது உடனடியாக செயல் படுத்தக்கூடியது அல்ல என்றும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் கூறுகள் 83, 85, 172, 174, 356 ஆகியவற்றில் அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் கொண்டுவரவேண்டும் என்றும் அறிவுறுத்தியது.

இந்த ஆண்டு செப்டம்பர் இரண்டாம் நாள் பா.ச.க. அரசு முன்னாள் குடிஅரசுத் தலைவர் இராம்நாத் கோவிந் தலைமையில் எட்டு பேர் கொண்ட குழுவை அமைத்தது.

1. இராம்நாத் கோவிந் (தலைவர்), 2. நிதின் சந்திரா (செயலாளர்), 3. ஆதிர் ரஞ்சன் சௌதிரி, 4. குலாம்நபி ஆசாத், 5. என்.கே. சிங், 6. டாக்டர் மகபாஷ் கஸ்யாப், 7. அரிஸ் சால்வே, 8. சன்ஜெய் கோத்தாரி.

இந்தக் குழு ஆய்வு செய்து இரண்டு மாதத்திற்குள் அறிக்கை அளிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளது. காங்கிரசு கட்சியைச் சேர்ந்த ஆதிர் ரஞ்சன் சௌதிரி அக்குழுவில் இருந்து விலகி உள்ளார்.

ஆர்.எஸ்.எஸ். கொள்கைகளைத் தான் மோடி நிறைவேற்றுகிறார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் குரு கோல்வல்கர் அவர்கள் கூட்டாட்சி முறைக் கூடாது; இது ஒரே நாடு என்று கூறியுள்ளார். கோல்வால்கர் கூறுகிறார் :

“நமது நாடு ஒரே நாடு, நாம் அனைவரும் ஒரே சமுதாயத்தினர். இது ஒரே ராஷ்ட்டிரம். இன்றைய கூட்டாட்சி (Federal System) அமைப்பு பிரிவினைப் போக்குகளை ஊட்டி வளர்க்கிறது. ஒரு விதத்தில் பார்த்தால் இன்றையக் கூட்டாட்சி முறை நாம் ஒரே ராஷ்ட்ரம் என்ற சாத்தியத்திற்கே முரணானது. கூட்டாட்சியின் அமைப்பே பிரிவினைப் போக்குள்ளது தான். இந்தத் தவறை திருத்த வேண்டும். ஏகாத்மா அரசை (Unitary Form of Government) நிலைநாட்டக் கூடிய விதத்தில் நமது நாட்டு அரசியல் சாசனத்தை மாற்றி அமைக்க வேண்டும்” (ஞானகங்கை, பக்கம். 245 முதல் பதிப்பு 2017).


மாநில அரசுகளே இருக்கக்கூடாது என்பதுதான் ஆர்.எஸ்.எஸ்.இன் கொள்கை. அதை நோக்கித்தான் மோடி அரசு செல்கிறது. ஒரே நாடு, ஒரே ரேசன் கார்டு, ஒரு நாடு ஒரு சட்டம் (பொது சிவில் சட்டம்), ஒரே நாடு ஒரே கல்வி முறை, (தேசியக் கல்விக் கொள்கை இந்த வரிசையில்தான்) ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பதும் ஆகும். இந்தியாவிற்கு மாற்றாக பாரதம் என்பதும் இதில் அடங்கும். இந்து ராஷ்டிரம் அமைப்பதற்கான அடிப்படை வேலைகளை மோடி அரசு திட்டமிட்டுச் செய்கிறது. தி.மு.க., காங்கிரசு, பொதுவுடைமைக் கட்சிகள் இது மாநில நலன்களுக்கு எதிரானது என்று கண்டிக் கின்றன.



பா.ச.க.வின் ஆதரவு கட்சி களான அ.இ.அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் இதை ஆதரிக்கின்றன. பா.ச.க. காவி பாசிச ஒன்றிய அரசின் தீய உள்நோக்கம் கொண்ட மாநில நலன்களுக்கு எதிரான ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பதை முறியடிக்க வேண்டும்.

● - **வாலாசா வல்லவன்**

# மானிட உரிமைக் காவலர்



- வே.ஆனைமுத்து

உலக மானிடத்தை முன்வைத்துப் பல கருத்துகளை வழங்கியுள்ள பெரியார் அவர்கள் 'சாதி ஒழிய வேண்டும்' என்றும்-அதேநேரத்தில், 'வகுப்புவாரியாக உரிமை வேண்டும்' என்றும் கோரியுள்ளார்.

'பேதநிலை ஒழியவேண்டும்' எனவும்-அதேசமயம், 'பார்ப் பனர்-பார்ப்பனரல்லாதார்' என்ற கண்ணோட்டத்துடன் பிரச்சினை களை அணுகவேண்டும் எனவும்; 'தமிழ்நாடு தமிழருக்கே!' எனவும்-அதேபோன்று, 'உலக மானிடம் ஒன்றாக வேண்டும்' எனவும் முழக்கியுள்ளார்.

இவை ஒன்றுக்கொன்று முரண்பாடு கொண்டவை எனத் தோற்றமளிக்கலாம்.

முதலாவதாக, சாதி ஒழிய வேண்டும் என்பது குறித்துக் காண்போம்.



இங்கு, சாதி அமைப்புக்கு இந்துமதம், சாஸ்திரம், ஆகமம் ஆகியவை அங்கீகாரம் அளித்துள்ளன; சாதி வழக்கம், பிரதேச வழக்கம் என்ற பேரால் இவை நிலைப்படுத் தப்பட்டுள்ளன. அம்மட்டோடு நில்லாமல், இந்த ஏற்பாட்டுக்கு இந்துச் சட்டம், இந்திய அரசியல் சட்டம் என்பவையும், இச்சட்டங்களை அமுல்படுத்தும் எல்லாக் கோர்ட்டுகளும் இன்றுவரை ஆதரவும் ஆக்கமும் அளித்துவருகின்றன. இந்துச் சட்டம், அரசியல் சட்டம் இவற்றில் 'சூத்திரன்' என்ற சொல் இன்று இல்லையே எனச் சட்ட நிபுணர்கள் கூறுவர். உச்சநீதி மன்றம் 'பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற வேறுபாடு உண்டு' என 1972 மார்ச்சில் தீர்ப்பு அளித்துள்ளது. எனவே, இதிலுள்ள தத்துவத்திற்கு இச்சட்டங்கள் இன்றும் பாதுகாப்பு அளிக்கின்றன என்பதை அன்னார் உணர்தல் நன்றாகும்.

இந்த இழிநிலை பிற மதத்தினருக்கோ, பிற நாட்டின ருக்கோ இல்லை. அதாவது, பிற மதத்தினர் இடையே தங்கள் மதத்தைச் சார்ந்தவர்களை 'இழி சாதி', 'கீழ்ச் சாதி என்றும்; 'உயர் சாதி', 'மேல் சாதி' என்றும் பிறவி அடிப்படை யில் பிரித்து வைக்கும் தன்மை இல்லை; அப்படிப்பட்ட தன்மைக்கு அவர்களின் மதநூல்களும், சாஸ்திரங்களும் வழிவகுக்கவும் இல்லை; ஆதலின், அங்கெல்லாம் அவ் அடிப்படையில் உரிமைகள் வழங்கப் பெறவும் இல்லை.

சான்றாக, நீக்ரோக்கள் வாழும் அமெரிக்க நாட்டிலும், ஆப்பிரிக்க நாட்டிலும் 'சமூகப் பழக்கம்' என்ற பெயரால் நிலைத்திருந்த 'இன ஒதுக்கல்' (Apartheid) கொள்கைக்கு கிறிஸ்துவ மதமோ, பைபிள் நூலோ அங்கீகாரம் அளிக்க வில்லை; அதனால், அங்குள்ள கோர்ட்டுகளும் 'சமூகப் பழக்கம்' என்ற பேரால் அங்கிருந்த அந்த இழிவுக்குத் தொடர்ந்து ஆக்கம் தர இயலவில்லை. இக்காரணங்களால் அங்கு கறுப்பர்-வெள்ளையர் என்ற இன வேறுபாடு கடந்த ஒரு நூற்றாண்டுக் காலத்திலேயே அடியற்றுப்போக வாய்ப்பு நேரிட்டது.

இங்குள்ள சாதி அமைப்பு அத் தன்மையில் இல்லை. மிகச் சிறுபான்மையினராக உள்ள (Microscopic Minority) பார்ப்பனர்-மிகப் பெரும்பான்மையினராக உள்ள திராவிடரை மத அங்கீகாரம் - சாஸ்திர அனுமதி கொண்டு இழிசாதியினராய் ஆக்கிவைத்திருப்பதே இங்குள்ள மனிதத் தன்மைக்கு எதிரான நிலையாகும்.

இவ்வகையால், 'சமுதாய உயர்வு' பெற்ற பார்ப்பனர், இதே காரணத்தால் 'அரசியல் ஆதிக்கம்' 'பொருளுடைமை ஆதிக்கம்' பெற்றவர்களாகவும் ஆயிரக்கணக்கான ஆண்டு களாகத் திகழ்கின்றனர்.

ஆனால், மிகப்பெரும்பான்மையினரான திராவிட மக்கள் மேற்குறித்த எல்லாத் துறைகளிலும் கீழ்நிலையிலேயே நெடுங்காலமாக வைக்கப்பட்டுவிட்டனர்.

ஆதலின், இங்கு சாதி ஒழிக்கப்படும் வரையில் மிகச்சிறுபான்மை மக்கள் மிகப்பெரும்பான்மையினர் பேரில் ஆதிக்கம் செலுத்துவது நிற்காது என, அதை அழிக்க




வேண்டியே - பெரியார் 55 ஆண்டு காலம் வகுப்புரிமைக்குப் போராடலானார்.

சமுதாயக் கொள்கைகளைப் பொறுத்துத் தீவிரவாதம் பேசுவதாகக் கருதுகின்ற சிலர், வகுப்புரிமை கோருவது என்பது, 'சாதி எண்ணத்தை வளர்ப்பது ஆகும்' என உரத்துக் கூறுவர். இங்கு இந்துச் சட்டபூர்வமாகவும், இந்திய அரசியல் சட்ட பூர்வமாகவும், 'சாதி அகற்றப்பட்டுவிட்டது' என்ற நிலை இனித் தோன்றி விட்டாலுங்கூட, அதற்குப் பின்னரும் நீண்ட காலம் சிறுபான்மையினர் ஆதிக்கமே நீடிக்கக் கூடிய அந்த அளவுக்கு பெரும்பான்மையினர் என்போர் உரிமை அற்ற வர்களாக நெடுங்காலம் வைக்கப்பட்டுவிட்டனர் என்பதை அன்னார் அறிதல் வேண்டும்.

இங்கு சமூக அந்தஸ்து-உரிமை, வசதி-உடைமை, வசதி-அனுபவிப்பு வாய்ப்பு இவை அனைத்தும் 1974ஆம் ஆண்டிலும் சாதி அமைப்பின்படியே அமைந்துள்ளன என்பதையும் பிரத்தியட்ச உணர்வோடு நோக்கும் எவரும் அறிதல் கூடும்.

இங்கு, சமூகத்தில் பெரும்பான்மை கருதி நீதியும், உரிமையும் வழங்கப்படாமல் - சிறுபான்மையினரின் பாது காப்பையும், உயர்வையும் மையமாகவும் இலட்சியமாகவும் கொண்டு நீதியும் உரிமையும் அரண் செய்யப்பட்டிருப்ப தானது, 'மானிட உரிமைகள்' (human rights) கோட்பாட்டுக்கு முற்றிலும் விரோதமானதாகும்; அதுவும், 'ஜனநாயகக் குடிஅரசு' அமைப்பில் அது இரட்டிப்புக் கேடுள்ளதாகவே அமையும் என்பது உணரத்தக்கது.

இவற்றை நடுநிலையிலிருந்து காண்போர், பெரியாரின் வகுப்புரிமைக் கொள்கையிலுள்ள மானிட உரிமைக் கோட்பாட்டை நன்கு உணர இயலும்.

அடுத்து, 'பேத நிலை ஒழியவேண்டும்' எனக் கோரிய அவர், 'பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார்' எனப் பிரித்துக் காட்டியுள்ளது பற்றியும் காண்போம்.

இங்கு, பேதநிலை என்பது பிறவியோடு பிணைக்கப் பட்டுள்ளது; பிறந்தது முதல் சாகும் வரை ஒருவர் பிறக்க நேர்ந்த இடத்தை அல்லது பிறப்பு வழியை (Womb) ஆதாரமாக வைத்துப் பேதம் நிலைக்க எல்லா வகைகளிலும் வழி செய்யப்பட்டுள்ளது; அதாவது, பார்ப்பனத்தியின் வயிற்றில் பிறந்தாலன்றி-வேறு எக்காரணங்கொண்டும் எவரும் பார்ப்பனராக ஆக இயலாது என்பதே அதுவாகும்.

இது, 2000 ஆண்டு காலத்திற்கு முற்பட்ட மனுநீதியில் விதிக்கப்பட்டவாறு, 'பிராமண சாதி ஸ்திரீயினிடத்தில் பிறந்தவனே பிராமணன் ஆவான்' (மனுநீதி, அத்தியாயம் 10, சுலோகம் 74) என்ற தத்துவம் இன்றும் சட்டங்களின் படியும், கோர்ட்டு நீதிப்படியும் நிலைப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும், நமக்கு வாழ்க்கை நியதியாகவே அது ஆக்கப்பட்டு விட்டது என்பதையும் உணர்த்தும். இத்தன்மை உலகின் வேறு எப்பகுதியிலும் என்றும் இருந்திராத இழி தன்மையதாகும்.

இவ்வாறு உள்ள இப்போதைய நிலையினை இங்குக் கற்பித்தவர் பார்ப்பனர்; இதனை இன்றும் காத்து நிலைக்கச் செய்ய இமாலய முயற்சி செய்பவரும் பார்ப்பனர். இத்தன் மையுடைய இவர்கள் தங்களை மாற்றிக்கொண்டு பேதம் பாராட்டாத மனிதராகக் கூடி வாழ விரும்பினால்-அதை என்றும் வெறுத்தவரல்லர் பெரியார்; அத்தன்மையை விருப்புடன் வரவேற்றுள்ளவரே அவர் என்பது அறியத்தகும்.

ஆயினும், வரலாற்றுக்குட்பட்ட கடந்த 2000 ஆண்டு களில் அவ்வாறு முன்வந்த பார்ப்பனர் ஒருவருமிலர்.

எனவே, பார்ப்பனரின் சூழ்ச்சிக்கு ஆட்பட்டுப் பேதநிலை யைச் சுமந்து வாழும் திராவிடர் அச்சூழ்ச்சிப் பிடியினின்றும் தங்களை விடுவித்துக்கொள்ள வேண்டும் என்பதால் பார்ப் பனரை ஒதுக்கி, பேத நிலையை அகற்றிக்கொள்ள விரும்பு கின்றனர்.

**எத்துறையிலும் பேதநிலை இல்லாத இடமே மனித சமூகம் இன்பமாக வாழ ஏற்ற இடமாகும் என்பதே பெரியார்தம் உறுதியான கொள்கையாகும்.**

எனவேதான், இங்கு பிறவி காரணமாக உள்ள பேதநிலையை அகற்ற அருந்தொண்டாற்றி, அதற்கெனவே இறுதி மூச்சுவரை உழைத்த அவர், பார்ப்பனர்-பார்ப்பனரல் லாதார் என்ற உணர்வை வளர்த்து, பேதநிலை ஒழிய வழிவகுத்தார்.

பார்ப்பனருக்கு உள்ள இனஉணர்வு திராவிடர்க்கும் உண்டாவதற்குத் தடையாக நிற்பது அவரிடையே உள்ள உட்சாதிப் பிரிவுகளாகும் (Sub-castes); 1946க்குப் பின்னர், சட்டத்தின் முன்னால் இவை இல்லை எனினும், கொள் வினை கொடுப்பினையில் இன்றும் நிலைபெற்றுள்ளவை யாம். அன்றியும், திராவிடர், தம் சொந்த வாழ்வின் முன்னேற் றங்கருதி மட்டும் தத்தம் உட்சாதி உணர்வுள்ளவராக விளங்குகின்றனர்; பார்ப்பனரைப்போல் சமூக முன்னேற்றங் கருதி உட்சாதி உணர்வை உதறிவிட்டு, இன உணர்வு கொள்ள முன் வந்தாரிலர். இதனை (A Non-brahmin is individually communal and a Brahmin is communally communal) என இன்னொரு வகையிலும், ஆங்கிலத்தில்

எடுத்துக் கூறுவார், பெரியார். மேலும், அரசியல் காரணம் கொண்டும் பிரிந்து கிடப்பவராவர், திராவிடர்.

இத்தன்மைகளை மறந்து திராவிடர் ஒன்றுபட வேண்டு மென அய்யா அவர்கள் அயராது பணியாற்றினார். அரசியல் தலைவர்களும், மக்கள் தலைவர்களும் இவற்றுக்கு ஆவன செய்யக் கடமைப்பட்டவராவர்.

அடுத்தது 'நாட்டுப் பிரிவினை' பற்றிய அவர்தம் கருத்தாகும்.

பெரியாரவர்களின் நாட்டுப் பிரிவினைக் கோரிக்கை, எவரையும் அடிமை கொண்டு ஆளவேண்டும் என்ற கருத்தைக் கொண்டதன்று.

இங்கு வாழும் நான்கு கோடித் திராவிடர்களும் தங்களுக்கு எத்துறையிலும் சிறிதும் உரிமை அளிக்காத நிலையில், நெடுந்தொலைவிலுள்ள மக்களுக்கு ஆட்பட்டு, 'ஒருமைப்பாடு காப்பதற்காக' உரிமைகளை இழந்து வாழ்வது, மனித சுதந்தரத்துக்கு நேர்மாறானது என்பதனாலேயே பெரியார் தனிநாடு கோரினார்.

**சமுதாய உரிமையிலும், அரசியல் உரிமையிலும், அனுபவிப்பு வாய்ப்பிலும் சம சந்தர்ப்பம் பெற்றவர்களாக இருந்து பல்வேறு மொழியினரும், நாட்டினரும் ஓர் குடைக்கீழ் வாழ வகையில்லாதபோது-உரிமை வேட்கை யுடையோர் நாட்டுப் பிரிவினை கோருவது தவிர்க்க இயலாத ஒன்றாகும்.**

ஒற்றுமை அல்லது ஒருமைப்பாடு என்பது எல்லா வகையிலும் சம நிலையிலுள்ள - தன்னாதிபதியம் கொண்ட இரண்டு அல்லது பல அமைப்புக்களிடையேதான் அமைய முடியும்; சமநிலை பெற்றிராத-தன்னாதிபதியம் (sovereignity) இழந்த அமைப்புக்களிடையே ஒருமைப்பாடு தோன்றாது, வளராது; அதற்கு மாறாக வேறுபாடும் பகையுமே வளரும்.

'மானிட உரிமை நாள்' (Human Rights Day), 'உலக ஒருமைப்பாடு' இவை பற்றி நாள்தோறும் முயற்சி மேற்கொண்டு செயல்பட்டுவரும் அய்க்கிய நாடுகள் பெரு மன்றம் (United Nations Organisation) - சில இலட்சக்கணக்கான மக்கள் தொகை உள்ள சின்னஞ்சிறு நாடுகளை, நூற்றுக்கணக்கில் உள்ளவற்றை - தன்னாதிபதிய தனிச்சுதந்தர நாடுகளாக (Sovereign Independent Countries) ஏற்று மதித்து வருவது அனைவரும் உன்னற்பாலது.

ஏதேனும் ஒருவகையில் சுதந்தரம் பறிக்கப்படுவதை ஒருப்படாத நிலையில்தான் தத்தம் சுதந்தரத்தைக் காத்துக் கொள்ள வேண்டி, அத்துணைச் சின்னஞ்சிறு நாடுகளும் சுதந்தரம் கோரிப் பெற்றனவேயன்றி, இன்னொரு சாராரின் சுதந்தரத்தைப் பறிப்பதற்கன்று. இது உலகம் அறிந்த உண்மை.

சின்னஞ்சிறு நாடுகளாயினும் சுதந்தர நாடுகளாக நின்று நிலவுவதனால்தான் நெடுங்காலத்துக்கு முன்னரே மூன்றாம் உலகப் பெரும் போர் தோன்றி உலகம் அழிக்கப் படுவதினின்றும் தடுத்து நிறுத்த-சம நிலையுள்ளவராக உலக நாட்டினர் ஒன்றுகூடி உலக அமைதியைக் காத்திட இயன்றது. இது உலக ஒருமைப்பாட்டுக்கு ஒரு படிக்கட்டாக அமைந் துள்ளது காணத்தக்கது.

எனவே, பெரியார் அவர்கள் கிளத்திய தனி நாடு கோரிக்கை திராவிடரின் சுதந்தரத்தைக் காப்பதை-இங்கு மனித சுதந்தரம் காக்கப்பட வேண்டும் என்பதை இலட்சியமாகக் கொண்டதேயன்றி, உலக மானிட ஒருமைப்பாட்டுக்கு எதிரானதன்று.

*(01.07.1974இல் வெளியிடப்பட்ட "பெரியார் ஈ.வெ.ரா.சிந்தனைகள்" நூலுக்கான முன்னுரைப் பகுதியில் பதிப்பாசிரியர் வே.ஆனைமுத்து அவர்களின் பதிவு)*

## மாநிலத் தன்னாட்சி அதிகாரங்களே பாசிசத்தையும் வீழ்த்தும் - பா.ச.க.வையும் வீழ்த்தும்

மேடவாக்கம், தமிழ்க்களத்தில் நடந்த மாநிலத் தன்னாட்சி அதிகாரங்களே பாசிசத்தையும் வீழ்த்தும்-பா.ச.க.வையும் வீழ்த்தும் என்ற தலைப்பிலான கருத் தரங்கம் 19.8.2023 அன்று ஏ.தெய்வமணி தலைமைத் தாங்கினார். தோழர்கள் நிலவழகன், வாலாசா வல்லவன், பொழிலன், பேராசிரியர் த.செயராமன் ஆகியோர் உரையாற்றினர். தமிழக மக்கள் முன்னணி இக்கருத்த ரங்கை ஏற்பாடு செய்திருந்தது.

## புதிய சிந்தனையாளன் இதழ் விலை உயர்த்தப்படுகிறது

**தாள் விலையேற்றம், அச்சுக்கூலி உயர்வு காரணமாக புதிய சிந்தனையாளன் இதழ் செப்டம்பர் 2023 முதல் விலை உயர்த்தப்படுகிறது.**

| | |
|---|---|
| தனி இதழ் | ரூ. 25 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 300 |
| மூன்றாண்டுக் கட்டணம் | ரூ. 800 |
| அய்ந்தாண்டுக் கட்டணம் | ரூ. 1200 |

**(குறிப்பு : ஆண்டுக் கட்டணம் என்பது 12 இதழ்களுக்கு)**

**- ஆசிரியர்குழு**
**புதிய சிந்தனையாளன்**

பெரியாரின் 145ஆம் பிறந்த நாள்!

# நாம் நினைவில் ஏந்த வேண்டிய இலக்கு!



- **பேராசிரியர் த.செயராமன்**
நெறியாளர், தமிழ்மண் தன்னுரிமை இயக்கம்

மனிதகுலத்திற்கு மட்டுமே உரித்தான பண்பு ஒன்று உண்டு. தான் கண்டறிந்த, தன்னுடைய பட்டறிவை அடுத்தத் தலைமுறைக்குக் கையளித்துவிட்டுக் கண்ணை மூடும். முந்தையத் தலைமுறை விட்ட இடத்திலிருந்து, மேலும் தொடர்ந்து முன்னோக்கிச் செல்லுகிறது அடுத்தத் தலைமுறை. இது ஒரு தொடர் ஓட்டம். மனித வர்க்கத்தின் வியக்கத் தக்க மேம்பாட்டுக்கு இதுவே காரணம்.

காட்டுமிராண்டியாகப் பயணத்தைத் தொடங்கிய மனிதவர்க்கம் பல்வேறு விடுதலை பெற்ற தேசங்களாகப் பரிணமித்து, ஓர் ஒடுக்குமுறையற்ற பொதுமைச் சமூகம் நோக்கிப் பயணிக்கிறது. ஒடுக்குமுறை எந்த வடிவில் இருந்தாலும், அதிலிருந்து விடபட ஒவ்வொரு தேசிய இனமும், ஒவ்வொரு சமூகமும் போராடுகிறது.

உலகெங்கும் தேசிய இனங்கள் தங்களுக்கான விடுதலை பெற்ற தேசங்களை அமைதி வழியிலோ அல்லது ஆயுதம் ஏந்தியோ உருவாக்கிக் கொள்கின்றன. தேச விடுதலை என்பது ஆசைக்குப் படைத்துக் கொள்வதன்று. மற்றொரு தேசம் ஒடுக்கி மேலாண்மை செய்ய முற்படும் போது, தேசவிடுதலைப் போராட்டம் தவிர்க்கவியலாதகிறது.

இந்தியத் துணைக் கண்டத்தில் வந்தேரிகளான ஆரிய பார்ப்பனர்களால் நிறுவப்பட்ட நுட்பமான ஒடுக்குமுறைக் கருத்தியலும், கட்டமைப்பும் சனாதனம் ஆகும். வைக்கம் போராட்டம், சேரன்மாதேவி குருகுல மாணவர்களிடையே ஏற்றத்தாழ்வு எதிர்ப்பு, திருவிதாங்கூர் சுசீந்திரம் சத்யாகிரகம், இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம், இரயில் நிலையங் களில் இந்திப் பெயர் அழிப்புப் போராட்டம், வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கோரிக்கை, பிள்ளையார் சிலை உடைப்புப் போராட்டம், குலக்கல்வி எதிர்ப்பு, தமிழ்நாடு நீங்கிய இந்திய நாட்டுக் கொடி எரிப்புப் போராட்டம், இராமன் பட எரிப்பு, பிராமணாள் கபே பெயர் அழிப்புப் போராட்டம், அரசியல் சட்ட ளிப்புப் போராட்டம், காந்தி பட எரிப்புப் போராட்டம், தமிழ்நாடு பிரிவினைக் கோரிக்கை, கருவறை நுழைவு அறிவிப்பு ஆகியவற்றின் உள்ளீடு ஆரிய எதிர்ப்பு, சனாதன எதிர்ப்பு மற்றும் அதன் அரசியல் வடிவமான இந்திய தேசிய எதிர்ப்பு ஆகியவையே ஆகும். பெரியார் தமிழ்நாட்டை இந்தியா விலிருந்து விடுவிக்காமல், தமிழ் மக்களை சமூக அடிமைத்தனத் திலிருந்தும், சாதி இழிவிலிருந்தும், சனாதனத்திலிருந்தும், இந்து மதத் திலிருந்தும், பார்ப்பனியத்திலிருந்தும் விடுவிக்க முடியாது என்பதை உணர்ந்து இருந்தார். பெரியாரின் வாழ்நாள் போராட்டம் முழுவதும் சனாதன ஒழிப்பு மற்றும் இந்தியா விலிருந்து தமிழ்நாடு விடுதலை என்ற இரண்டு முனைகளைக் கொண்டது.

### சமூக விடுதலைக்கான வழியாக தமிழ்நாடு பிரிவினை

இந்தியத் துணைக்கண்டத்தில் நீண்டகால சமூக மேலாதிக்கமும், ஒடுக்குமுறையும் செய்துவந்த பார்ப்பனீயம் இந்திய தேசியமாக அரசியல் வடிவெடுத்தபோது, சமூக விடுதலை கோரிய சக்திகள், பார்ப்பனீயத்துக்கு எதிராகவும், இந்து மதத்துக்கு, வருணாசிரமத்துக்கு எதிராகவும், பின்னர் இந்தியாவுக்கு, இந்திய தேசியத்துக்கு எதிராகவும் குரல் எழுப்பின. அதில் முக்கியமானதும் முதற்குரலும் தந்தை பெரியாருடையது. சமூக விடுதலையைப் பெற, நாட்டுப் பிரிவினையைத் தவிர வேறொரு வழியில்லை என்ற முடிவின் அடிப்படையிலேயே தமிழ்நாட்டின் விடுதலைக் கோரிக்கையை முன்னெடுத்தார்.

### தமிழ்நாட்டின் விடுதலைக் கோரிக்கையின் முதற் குரல்

தான் ஒரு தனித் தேசிய இனம் என்று தெளிவாக அறிந்து கொண்ட பிறகும், தன் தேச விடுதலையைக் கோராமல், ஒடுக்கும் தேசியத்துக்கு உடன்பட்டு, ஒடுக்கு முறைக் கட்டமைப்புக்குள் அரசியல் நடத்துவது என்பது பிழைப்புவாத அரசியலே ஆகும். தமிழகத்தைப் பொறுத்த வரை, சென்னை மாகாணத்தை, அல்லது தமிழகத்தைந் தனிநாடாக பிரிக்கக் கோரிய முதற்குரல் பெரியாருடையது.

### இந்திய வரைபடத்தை அனைத்து மாநிலங்களும் எரிக்க கோரினார்!

1928லிருந்தே இந்தியா ஒரு நேஷனா? என்ற கேள்வியை எழுப்பி வந்திருக்கிறார். "இந்தியா" என்பது தமிழர்களுக்குப் பகை சக்தி என்பதை முதன்முதலாகப் புரிய வைத்தவர் பெரியார். இந்தியாவிலிருந்து, அவர் குறிப்பிடும் திராவிட நாடு என்ற சென்னை மாகாணம், 1956க்குப் பின்னர் தமிழ்நாடு, பிரிந்தே ஆக வேண்டும்; அதைத் தவிர வேறு வழியில்லை என்பதைத் தம் இறப்பு வரைத் திரும்பத் திரும்ப வலியுறுத்தினார். இந்தியா என்ற கட்டமைப்பு இருக்கும் வரை எந்த சமத்துவமும் சாத்தியமில்லை என்பதைத் தெளிவாக உணர்ந்திருந்தார். தமிழ்நாடு நீங்கிய இந்திய வரைபடத்தை எரிக்கும் போராட்டத்தை அறிவித்த பெரியார், உத்தரப் பிரதேசத்துக்குச் சென்று, இந்திய வரைபடத்தில் உத்தரபிரதேசத்தை மட்டும் கத்தரித்து எடுத்துவிட்டு, எரிக்கும்படி பிரச்சாரம் செய்தார். உத்திரப் பிரதேச மாநிலத்தில், 1959ஆம் ஆண்டு ஒரு பிரச்சாரப் பயணத்தை மேற்கெண்ட பெரியார், கான்பூரில் நடைபெற்ற விழாவில்,

''இந்த ஆட்சியில் நாம் இருந்துகெண்டு சாதியை ஒழிக்க முடியாது. எனவே இந்திய தேசப்படத்தில் தமிழ்நாட்டை மட்டும் கத்தரித்து எடுத்துவிட்டு மற்ற பாகத்தை நெருப்பு வைத்து எரிப்பது என்று தீர்மானித்து உள்ளோம். இப்படி எரிப்பதன் மூலம் உங்களின் உ.பி.யும் கூடத்தான் சேர்த்து எரிக்கப்படும். இதனால் மற்ற நாட்டை வெறுத்து எரிப்பது என்பதாகாது. நீங்களும் கூட சாதி ஒழிப்பிற்காக-பார்ப்பனர்களின் ஆதிக்க ஒழிப்பிற்காக நேரு ஆட்சியிலிருந்து விடுபட உங்கள் உத்திரப்பிரதேசத்தை மட்டும் கத்தரித்து எடுத்து விட்டு பாக்கிப் பகுதிகளைக் கொளுத்தலாம்'' (விடுதலை, 21.02.1959). பெரியாரின் சாரம் விடுதலை என்பதுதான்.

**இந்தியா நேஷன் அல்ல; தமிழ்நாடு ஒரு நேஷன்!**

இந்தியா ஒரு நேஷன் என்பதை மறுக்கும் பெரியார், ஆந்திரா, திராவிடநாடு, வங்காளம் ஆகியவற்றை நேஷன்கள் என்று அழைக்கிறார். அதுதான் உண்மையும் கூட. ஆந்திராவை, தனியாகவும் திராவிட நாட்டைத் தனியாகவும் அவர் கூறுவதால், தமிழ்நாட்டைக் குறிக்கும் சொல்லாக திராவிடநாடு என்ற சொல்லை இவ்விடத்தில் அவர் பயன்படுத்தி இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

''இந்தியா ஒரு நேஷன் என்று செல்வதைவிட, திராவிட நாடு ஒரு நேஷன், ஆந்திரநாடு ஒரு நேஷன், வங்காளநாடு ஒரு நேஷன் என்று சொன்னாலும் பெருந்தும். உதாரணமாக திராவிட நாட்டை எடுத்துக் கெண்டால் திராவிடநாடு தனிக்கலை, தனிமொழி, தனி நாகரிகம், தனி ஆட்சியின்கீழ் ஆயிரக்கணக்கான வருஷங்கள் இருந்து வந்ததென்று சரித்திரம் சாற்றுகிறதென்பதை யாராலும் மறைக்க முடியாது.''

''56 வித்தியாசமான ஆட்சிகளின்கீழ் இருந்துவரும் ஒரு நாட்டை ஒரு நேஷன் என்று செல்லி எல்லா மக்களையும் ஒன்றுபடுத்தி, அன்னியனிடமிருந்து விடுதலையடைந்து கொண்டு, ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாரை சவாரி செய்யலாம் என்றால், இதை யார் ஒப்புக்கொள்வார்கள் என்று கேட்கிறோம்'' (குடிஅரசு, தலையங்கம்-28.01.1940).

''இதில் பெரியார் ''திராவிட நாடு'' என்று சொல்லியிருக்கும் சொல்லை ஒருவர் ஏற்க வேண்டிய தேவையில்லை. ஆனால் அவர் பேசுகிற விடுதலைக் கருத்தியலை ஏற்க வேண்டு மல்லவா? பெரியார் திராவிட நாடு என்று கூறுவதை ஏற்க முடியாது என்றால், அதைத் தமிழ்நாடு என்று மாற்றி, விடுதலைக் கோரிக்கையின் சாரத்தை இழந்து விடாமல், இறையாண்மை அரசியலைக் கைக்கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

**சூத்திரப் பட்டத்தைப் போக்கிக்கொள்ள எஞ்சியிருக்கும் ஒரே வழி பிரிவினை!**

மாலேகான் குண்டு வெடிப்பை நிகழ்த்திய இந்து மதவெறி பெண் சாமியார் பிரக்யா சிங் சமீபத்தில் ''சூத்திரர் கள் என்று கூறினால், அது தவறல்ல; சூத்திரர்கள் அதை ஏற்கவேண்டும்'' என்று பேசியிருக்கிறார். ஒருவன் தன்னை இந்து என்று ஏற்றுக்கொள்ளும்போது, இயல்பாகவே, ஒரு பிரிவுக்காரன் தன்னை பிராமணனாக அறிவிக்கிறான். தவிர்க்கவியலாதபடி இன்னொரு பிரிவினர் தங்களை சூத்திரர்களாக ஏற்கவேண்டியுள்ளது. இது நடைமுறையில் இருப்பது மட்டுமின்றி, சட்டப்பூர்வமாகவும் நிலைநிறுத்தப் பட்டிருக்கிறது. இந்நிலையில் சூத்திரப் பட்டத்தையும், பஞ்சமர் பட்டத்தையும் ஒழித்துக்கட்ட, இந்தியாவில் இருந்தே நாம் ஒழிந்தாக வேண்டும்; தமிழ்நாடு பிரிவினைத் தவிர வேறு வழியில்லை என்ற பார்வையை பெரியார் இறக்கும்வரை கொண்டிருந்தார்.

தவிர்க்கவியலாதபடி, சமூக சமத்துவத்தைப் பெறுவதற்குப் பிரிவினை தவிர வேறு வழியில்லை என்பதையும், தமிழ்நாடு விடுதலை பெற்றுத்தான் ஆகவேண்டும் என்பதையும் பெரியார் இவ்வாறு பதிவு செய்தார் :

''நான் முதலில், நான் இந்து அல்ல என்று சொல்லி விட்டால் இழிவு நீங்கிவிடும் என்று தான் கருதினேன். பிறகு சட்டங்களைப் பார்க்க ஆரம்பித்த பிறகு கிறிஸ்துவர்கள், முஸ்லீம்கள் தவிர்த்த, இந்தியாவில் உள்ள மக்கள் அனை வரும் இந்துக்கள்-இந்துக்கள் என்றால் சூத்திரர்கள், வேசி மக்கள் என்று பல இடங்களில் காணப்படுகின்றன. ஆதலா லேயே தீவிர முயற்சி எடுக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

இன்று நம் நாட்டில் இந்துக்கள் எல்லோருக்குமே அரசியலில்தான் முக்கியக் கவனம் இருக்கிறது. அன்றியும் நாட்டுப் பிரிவினை என்றால், எல்லா மக்களுமே பயப்படு கிறார்கள். காரணம் பதவி கிடைக்காதே என்கின்ற காரணம் மாத்திரமல்லாமல், சிறைக்குச் செல்ல வேண்டுமே என்று பயப்படுகிறார்கள். 50 வருட காலமாக சுயமரியாதை இயக்கம் சாதித்தது என்ன என்று பார்த்தால், சிறிது படிப்பு, பல பதவி உத்தியோகம் பெற நேர்ந்ததோடு அரசியலில் பார்ப்பனர் கொட்டத்தை நல்ல அளவுக்கு அடக்கிற்று என்பதல்லாமல், சமுதாயத் துறையில் உள்ள அடிப்படை இழிவு நல்ல அளவுக்கு பலம் பெற்றுவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்''

எனவே, நாம் சட்டத்தைப் பற்றி பயப்படாமலும், பதவி கிடைக்காதே என்று கவலைப்படாமலும், சுதந்திரத் தமிழ்நாடு பெற ஒவ்வொருவரும் முடிவு செய்துகொண்டு முன்வர வேண்டியது ஒவ்வொரு தமிழனுக்கும் அவசியமான காரியம் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

வெள்ளையன் ஒழிந்ததுபோல் வடநாட்டானும் ஒழிய வேண்டாமா இந்நாட்டைவிட்டு? இந்நாட்டிற்கு சுதந்திரம் வந்துள்ளது உண்மையாயின் எதற்காக ஒரு இமயமலைப் பார்ப்பான், ஒரு வடநாட்டவன் எங்கள் நாட்டிற்கு பிரதம மந்திரியாக இருக்க வேண்டும்? எதற்காக வடநாட்டவர்கள் இங்கிருந்து நம்மைச் சுரண்டி வரவேண்டும்? கேட்பாரில் லையோ? இத்தமிழ்நாட்டில் எதற்காக இந்நாட்டை வட நாட்டவன் ஆதிக்கத்திற்கு ஒப்படைத்துவிட்டு இந்நாட்டவர்கள் அவர்களின் சிப்பந்திகளாக, ஏவலாட்களாக பணியாற்றி வரவேண்டும்? வேறு சுதந்திரம் பெற்ற நாடுகளைப் பார்த்தா யினும் உங்களுக்கு புத்திவரக்கூடாதா? - பெரியார், விடுதலை (19.10.1948).

### 1938இல் பெரியாரின் பார்வை இது

"பாழும் தேசியத்தால் தமிழர்களாகிய நாம் 50 ஆண்டுகளைப் பாழாக்கி விட்டோம். நாட்டையும் மக்கள் சமூகத்தையும் உண்மையாய் மேன்மையடையச் செய்ய முயற்சித்த ஒப்பற்ற பெரியார்களை நாஸ்திகன், தேசத் துரோகி, மக்கள் துரேகி, சுயநலக்காரன் என்றெல்லாம் வைது அவர்கள் பாடு பயன்படாத முறையில் செய்துவிட்டோம்.

உதைக்கும் காலுக்கும் முத்தமிட்டுப் பூசை செய்கிறோம்! மலத்தை மனமார முகருகிறோம். மானமிழந்தோம். பஞ்சேந்திரியங்களின் உணர்ச்சியை இழந்தோம். மாற்றா னுக்கு அடிமையாகி வணங்குகிறோம். இதற்குத்தானா தமிழன் உயிர் வாழ வேண்டும்? எழுங்கள்! நம்மை ஏய்த்து அழுத்தி நம் தலைமேல் கால் வைத்து ஏறி மேலே போக வடநாட்டானுக்கும் தமிழரல்லாதவனுக்கும் படிக்கல் ஆகி விட்டோம்.

இனியாவது 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று ஆரவாரம் செய்யுங்கள். உங்கள் கைகளில் தமிழ்நாடு தமிழருக்கே என்று பச்சை குத்திக் கொள்ளுங்கள். உங்கள் வீடுகள் தேறும் தமிழ்நாடு தமிழருக்கே என்ற வாசகத்தை எழுதிப் பதியுங்கள். நம் வீட்டுக்குள் அன்னியன் புகுந்து கொண்ட தோடல்லாது அவன் நம் எஜமானன் என்றால் நமக்கு இதைவிட மானமற்ற தன்மை இழிதன்மை வேறு என்ன என சிந்தியுங்கள். "புறப்படுங்கள்! தமிழ்நாட்டுக்கு பூட்டப்பட்ட விலங்கை உடைத்து சின்னாபின்னமாக்குங்கள்!! 'தமிழ்நாடு தமிழருக்கே!'" (பெரியார், குடிஅரசு தலையங்கம், 23.10.1938).

### 1950இல் பெரியாரின் பார்வை

"இன்று பிரிவினை கேட்கும் நான் கிழவனாக இருக்க லாம். அதன் காரணமாக பலாத்காரத்தில் நம்பிக்கையற்ற வனாக இருக்கலாம். நாளை நம் இளைஞர்களும் இப்படியே இருந்துவிடமாட்டார்கள். இரத்த வெள்ளத்தின் மத்தியில் பிரிவினைக் கேட்பார்கள்; கத்தி முனையில் பிரிவினைக் கேட்பார்கள். ஆட்சியாளர்கள் இப்படி எல்லாம் நடக்கவிடாமல் நம் நாட்டை ஒழுங்காக நமக்குப் பிரித்துக் கொடுத்து விடவேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறேன்" (பெரியார், சென்னை சைதாப்பேட்டை சொற்பொழிவு, 27.11.1950).

அடுத்த தலைமுறையை அவர் அதிகம் நம்பிவிட்டார் என்று தோன்றுகிறது. கிழவனாகிய தான் வாயளவில் கேட்பதை, இளைஞர்களாகிய அடுத்த தலைமுறை கையில் கருவிகளோடு களத்தில் நின்று கேட்கும் என்று நம்பினார். ஆனால் அடுத்த தலைமுறை பின்னோக்கி தலைதெறிக்க ஓடும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

### 1973இல் இறப்புக்கு முன்பும் பெரியார் பார்வை இதுதான்

"நாம் உடனடியாக விடுதலை பெற்று, அதாவது இந்தியக் கூட்டாட்சியிலிருந்து விலகி சுதந்தரத் தமிழ்நாட்டை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டாக வேண்டியவர்களாக இருக்கிறோம். இம்முயற்சியில் இன்றைய திமுக ஆட்சி இணங்கும் என்று கூறமுடியாது. ஏனெனில் அது இந்தியக் கூட்டாட்சி ஆதிக்கத்துக்கு உட்பட்ட மாகாண சுயாட்சியை விரும்புகிறது. மாகாண சுயாட்சி என்றால், அரசியலில்தான் ஏதோ சில மாறுதல்களைச் செய்து கொள்ளமுடியுமே தவிர, சமுதாயத் துறையில் அரசியல் சட்டத்துக்கு விரோதமாக எதுவும் செய்ய முடியாது" - (95வது பிறந்தநாள் மலரில் பெரியார்).

"எங்களை ஆள எங்கள் நாட்டில் அறிவாளிகள் உண்டு. எங்கள் நாட்டில் எங்களைப் பாதுகாக்கும் வல்லமை படைத்த போர்வீரர்கள் உண்டு. நாங்கள் ஆண்ட இனத் தைச் சேர்ந்தவர்கள். ஆதலால், எங்களுக்குத் தனித்திருக்கச் சகல வசதிகளும் உண்டு.

ஆகவே, 'ஆடு நனைகிறதே என்று ஓநாய் கூப்பாடு போடுகிறதாம்' என்பதுபோல, நீங்கள் எங்களுக்காகப் பரிதாபப்படாமல் பிரித்துக் கொடுத்துப் பாருங்கள்! (பெரியார், ஆழியூர் சொற்பொழிவு, 10.1.1948).

### நிர்ணயிக்கப்பட்டிருக்கும் தமிழ்த்தேசிய இலக்கு

தமிழ்நாட்டுக்கும் தமிழக மக்களுக்கும் பகை சக்தி என்பது இந்தியமும், இந்தியாவும் தான் என்பதை பெரியார் மிகத் தெளிவாகக் கூறினார். நம்மை இந்து என்றும் இந்தியர் என்றும் கூறிக்கொள்ளும்வரை நம்முடைய இழிவு நீங்கப் போவதில்லை என்று தெளிவுபடுத்தினார்.

பெரியார் மட்டுமின்றி, தமிழ்நாட்டின் விடுதலைக் கருத்தியலை பாவலரேறு பெருஞ்சித்திரனார் முழுமையாகப் பேசினார். அவரே விடுதலைக்கான களப் போராட்டத்திற்கும் வழிவகுத்தார்.

1970களில் நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறைக்கு எதிராகக் களமாடிய புலவர் கலியபெருமாள், தோழர் தமிழரசன் உள்ளிட்டோர், 1980களில் தமிழ்த் தேசிய விடுதலைக்கான கருவிப்போரைத் தொடங்கினர்.

இவ்வாறு கருத்தியல் ரீதியாகவும், களப் போராட்ட மாகவும், கருவி போராகவும் முன்னமே தமிழ்த்தேசிய இனத்தின் அரசியல் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு, முன்னெடுக்கப்பட்டுவிட்ட நிலையில், இப்போது அவற்றை யெல்லாம் புறந்தள்ளிவிட்டு இந்தியத்துக்கு இணக்கமாக, இந்திய அரசியல் சட்டத்துக்குள் தம்மை ஒடுக்கிக்கொண்டு, மாநில அளவில் கங்காணி அரசுகளை அமைத்தாலே போதும் என்று நம்முடைய வேலைத்திட்டத்தைக் குறுக்கிக் கொள்ளும் அரசியல் என்பது ஒரு பின்னோக்கிய பயணம் ஆகும்.

பெரியாரிடத்தில் ஏற்கமுடியாத பிற்போக்குத்தனமான கருத்துகள் இருக்குமானால், அவற்றைப் புறந்தள்ளிவிட்டு, ஏற்க வேண்டியவற்றை ஏற்றுக்கொண்டு, தோழர் தமிழரசன் உள்ளிட்டோரின் பாதையில் செப்பம் செய்ய வேண்டியவை இருந்தால் அவற்றை செப்பம் செய்து, தவிர்க்க வேண்டியவை

இருந்தால் தவிர்த்துவிட்டு, தமிழ்த் தேசிய விடுதலைப் போரை முன்னோக்கிச் செலுத்துவது என்பதே சரியான பார்வையாகும்.

அவ்வாறின்றி, ஏனைய தேர்தல் கட்சிகளைப் போலவே முளைவிடும் கட்சிகளும் இந்தியத்துக்குள் இணக்க அரசியல் செய்ய முனைவது என்பது தமிழ்த்தேசிய இனத்தின் அடிமைத்தனத்தை மேலும் உறுதிப்படுத்தும் முயற்சியே ஆகும். தமிழ்த்தேச விடுதலைக்காகப் பலர் தங்கள் வாழ் நாள் முழுவதையும் செலவிட்டிருக்கும் நிலையில், அவர்கள் நிர்ணயித்த இலக்கை விடவும் சிறியதாக ஒன்றைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு ஆர்ப்பரிப்பது அவமானகர மானதாகும்.

**கட்சிகளின் பின்னோக்கியப் பயணம்**

பெரியார், அறிஞர் அண்ணா வாழ்ந்த காலத்தை விட, இந்திய அரசின் இந்தி சமஸ்கிருத மொழிவெறியும், இந்துத்துவ-பார்ப்பனீய மேலாண்மை வெறியும், வருண தர்மத்தை நிலைப்படுத்தும் இந்து ராஷ்டிரா படைப்பதற்கான வேகமும், தமிழ் மொழி அழிப்பு வேகமும், தமிழ்நாட்டின் தொழில் - வணிக வாய்ப்புகள் பறிப்பும், தமிழ்நாட்டின் இயற்கை வளங்கள் மற்றும் கனிம வளங்கள் சூறையின் வேகமும், பல நூறு மடங்கு அதிகரித்துள்ளன. பெரியார், அறிஞர் அண்ணா காலத்திலேயே தனிநாடு கோரிக்கைக்கான காரணங்கள் மறுக்கவியலாதபடி வலுவாக இருந்ததாக அவர்கள் கருதினார்கள் என்றால், இப்போது அதற்கான காரணங்கள் மேலும் வலுவடைந்து உள்ளன. இந்நிலையில் பெரியார், பாவலரேறு பெருஞ்சித்திரனார், புலவர் கலிய பெருமாள், தோழர் தமிழரசன் உள்ளிட்டோர் உயர்த்திப் பிடித்த இலக்குகளிலிருந்து பின்னோக்கித் தலைதெறிக்க ஓடுவது என்றால், அதற்கான காரணத்தை இப்படிப் புரிந்து கொள்ளலாம். விடுதலை அரசியல் நடத்துவது ஆபத்தானது; இளைஞர்களுக்கு உணர்ச்சியை ஊட்டி அதேசமயம் இந்தியத் துக்கு இணக்கமாக, நோகாமல் அரசியல் நடத்துவது கொஞ்சம் எளிதானது மற்றும் வசதியானது என்ற பார்வையும், வாழும் காலம் வரை கொஞ்சம் வெளிச்சத்தில் மற்றும் வசதியோடு வாழ்ந்து விட்டுப் போகலாம் என்கிற பிழைப்புவாத அரசியலில் உள்ள ஈடுபாடும் மட்டுமே என்று எளிதாகக் கூறி விடலாம்.

**பரிணாம வளர்ச்சியைப் புரட்டுவதா?**
**மனிதனை மீண்டும் குரங்கு ஆக்க முயற்சிக்கலாமா?**

ஒன்றை உணர வேண்டும். குரங்கிலிருந்து மனிதன் பிறந்துவிட்டான். பிறந்த மனிதனை மீண்டும் குரங்காக்க முயற்சிக்கக்கூடாது. கடந்த தலைமுறை தலைவர்கள் நிர்ணயித்த இலக்கை அடுத்தக் கட்டத்திற்குக் கொண்டு செல்வதுதான் தமிழ்த் தேசியத்தின் அரசியலாக இருக்க வேண்டும். அவ்வாறின்றி ஆரியத்தின் அரசியல் வடிவமான இந்தியத்தின் கீழ்நிலைப் பங்காளியாக அரசியல் நடத்த முயற்சிக்கக் கூடாது.

தந்தை பெரியாரின் பிறந்த நாளில், அவர் பேசிய விடுதலைச் சிந்தனைகள் தமிழ் மக்களின் சிந்தையைத் தொடட்டும்! ❖

---

**சூலூர் புலவர் செந்தலை ந. கவுதமன் துணைவியார்**

## சூ.அர. உலகநாயகி மறைவு



சூலூர் பாவேந்தர் பேரவை புலவர் செந்தலை ந.கவுதமன் துணைவியாரும், பல்லடம் அரசு மேல்நிலைப் பள்ளி முன்னாள் தலைமையாசிரியரும், சூ.ப.அரங்கசாமி (எஸ்.பி.ஆர்.) - பள்ளபாளையம் சானகி இணையரின் மகளுமான சூ.அர.உலகநாயகி பி.ஏ., பி.எட்., தம் 62ஆம் அகவையில் 23.8.2023 அன்று இயற்கை எய்தினார்.

செகதாம்பாள் எனும் இயற்பெயரைத் தமிழுணர்வால் உலகநாயகி எனச் சட்டப்படி மாற்றிக் கொண்டவர். தாலி விலக்கிய சுயமரியாதைத் திருமணம் ஏற்று, உறுதியான பகுத்தறிவு நெறியில் வாழ்ந்தவர். மகள் க. தாய்மொழி-மருமகன் மரு. கு. இளந்தமிழன், பெயர்த்தி தா.இ. அவனி இளமொழி முதலான அனைவரின் வளர்ச்சிக்கும் அடித் தளமாகத் தம்வாழ்வை அமைத்துக் கொண்டவர். உடல்நலிவால் இயற்கை எய்தினார்.

புதிய சிந்தனையாளன் மனம் கசிந்த இரங்கலை உரித்தாக்குகிறது. புலவர் செந்தலை ந. கவுதமன், மகள், மருமகன், பெயர்த்தி ஆகியோர் ஆறுதல் அடைக.

**- மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி**

---

## சனாதனம் என்றால் என்ன? வேலூரில் கருத்தரங்கம்

சனாதனம் என்றால் என்ன? என்ற தலைப்பில் கருத்தரங்கம் 10.9.23 அன்று வேலூர், சத்துவாச்சாரி, அம்பேத்கர் சமுதாயக் கூடத்தில் ம.க.இ.க. சார்பில் இராவணன் தலைமையில் நடைபெற்றது. பல அமைப்பினர் பங்கேற்றனர். தோழர் தமிழ்மணி சனாதனம் எனப்படுவது எது என்பது பற்றி விளக்க வுரையாற்றினார். முன்னதாக மா.பெ.பொ.க. சார்பில் சா.குப்பன் சுருக்கவுரையாற்றினார்.

# வெடித்துக் கிளம்பும் நரேந்திர அரசின் மாபெரும் ஊழல்கள்



பேராசிரியர் **மு.நாகநாதன்**

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு (குறள் 436)

என்ற குறளுக்கு தன்னுடைய குற்றத்தை முதலில் கண்டு நீக்கிக்கொண்டு பிறருடைய குற்றத்தினைப் பின்னர் காண முற்படுவராயின் அரசன் ஒருவனுக்கு என்ன குற்றம் உண்டாக முடியும்? ஒன்றுமில்லை என்று நாவலர் பகுத்திறவுக் கண்ணோட்டத்தோடு அளித்த விளக்கம் இன்றைய பிரதமர் நரேந்திரரின் ஊழலுக்குப் பொருத்தமாகவே அமைகிறது.

இன்று நடப்பதோ மக்களாட்சி. மன்னராட்சிக் காலத்தி லேயே பல நல் மரபுகள் அரசனுக்கு இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார் வள்ளுவர். ஆனால் இன்றைய மக்களாட்சி முறைமையில் எல்லா உயரிய மரபுகளையும் நெறிகளையும் சிதைத்து, பெரும் ஊழல்களுக்கு வழிவகுத்து, எதிர்க்கட்சிகள் செய்வதுதான் ஊழல் எனப் பெரிதுபடுத்தி ஜனநாயகக் கூறுகளைக் கடந்த 9 ஆண்டுகளாக பிரதமர் நரேந்திரர் தலைமையிலான பாஜக ஒன்றிய அரசு குலைத்து வருகிறது.

பாஜக ஒன்றிய ஆட்சிப்பொறுப்பு ஏற்ற 2014ஆவது ஆண்டிலிருந்து பாஜக தலைவர்களும் பாஜக மாநில முதல்வர்களும் செய்த ஊழல்களைப் படுமோசமான பாலியல் செயல்களைப் பாதுகாப்பதே ஒன்றிய அரசின் முழுநேரப் பணியாக மாறிவிட்டது. உண்மைகள் வெளிவந்துவிடக் கூடாது என்பதால், என்றும் இல்லாத அளவிற்கு இந்திய நாட்டில் செய்தி, ஒளி, ஒலி, சமூக ஊடகங்களை நேர்முக மாகவும் மறைமுகமாகவும் பாஜக அரசு அச்சுறுத்தி வருகிறது. எனவேதான் உலக அளவில் ஊடகச் சுதந்திர தரவரிசைப் பட்டியலில் இந்தியா கடைசி இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. ஜனநாயகம் பள்ளத்தில் வீழ்ந்துவிட்டது என்பதற்கு இதுவே ஒரு அடையாளமாகும்.

**ஊழலில் ஊறித்திளைக்கும் பா.ஜ.க.**

கர்நாடக மாநிலத்தில் பாஜக ஆட்சியில் அரசின் கட்டமைப்புப் பணிகளை மேற்கொண்ட போது ஒப்பந்தக்காரர்களிடம் 40 விழுக்காடு இலஞ்சத்தை வெளிப்படையாகக் கேட்டார்கள் என்பதை ஒப்பந்தக்காரர்கள் சங்கம் மாநிலம் முழுவதும் சுவரொட்டிகளாக ஒட்டியது. பிரதமர் நரேந்திரருக்கு இச்சங்கம் ஊழல் செய்த கர்நாடக முதல்வர் மீதும் அமைச்சர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஒரு வேண்டுகோள் மடலையும் அளித்தது. பிரதமரோ, பிரதமர் அலுவலகமோ இதுபற்றி சிறிதும் கவலைக் கொள்ளவில்லை. தொகை தொகையான, வகை வகையான, அடுக்கடுக்கான ஊழல்களை பாஜக சங்கிகள் செய்த காரணத்தினால்தான் தனது கட்சியின் மாநிலத் தலைமையைத் தட்டிக்கேட்கும் தார்மீக உரிமையை இழந்துவிட்டார் பிரதமர். ஊழல்களின் பல்வேறு வடிவங் களை இந்தியத் தலைமைக் கணக்கு உயர் அலுவலர் அறிக்கை வழியாக இப்போதுதான் நம்மால் அறிய முடிகிறது.

கணக்கில் காட்டாமல் பதுக்கிய கோடிக்கணக்கான கள்ளப்பணம் வெளிநாட்டு வங்கிகளிலும் வெளிநாடுகளில் உள்ள போலி நிறுவனங்களிலும் பல இலட்சம் கோடி ரூபாய் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. இதுதொடர்பாக 2014 ஏப்ரல் திங்களில் 26 பெயர்கள் அடங்கிய பதுக்கல் பணக்காரர்கள் ஜெர்மன் வங்கியில் தங்கள் கள்ளப் பணத்தைப் பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்ற தகவலை ஒன்றிய அரசு அறிவித்தது. மீண்டும் 2014 அக்டோபர் 24 அன்று 24 பெயர்கள் அடங்கிய பட்டியலில் 3 பெயர்களை மட்டும் உச்சநீதிமன்றத்தில் தெரிவித்தார்கள். மீதமுள்ள 21 நபர்கள் யார்? என்ற கேள்வி எழுகிறது. இதன் தொடர்ச்சியாக அக்டோபர் 28ஆம் தேதி உச்சநீதிமன்றம் தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்தது. கள்ளப்பணம் வைத்திருப்போரின் முழுப்பட்டியலை உச்ச நீதிமன்றத்திற்கு அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தியது. இதன் பிறகே 627 பெயர்களைக் கொண்ட ஒரு பட்டியலைக் கமுக்கமாக உச்சநீதிமன்றத்திற்கு ஒன்றிய பாஜக அரசு அளித்தது.

2015இல் பிரதமர் நரேந்திரர் கள்ளப்பணச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தார். இந்தச் சட்டமும் மறைந்த மூத்த வழக்கறிஞர் ராம் ஜெத்மலானி அவர்களின் தொடர் முயற்சியால் வந்ததாகும். உச்சநீதிமன்றத்தில் ராம் ஜெத்மலானி பல ஆதாரங்களையும் ஆவணங்களையும் அளித்த பிறகே இந்தப் புதிய சட்டத்தின் வாயிலாக கள்ளப் பணத்தைக் கடுமையான முறையில் நடவடிக்கை மேற் கொண்டு மீட்போம் என்று ஒன்றிய அரசு உறுதியளித்தது. இதற்கு மாறாக பல இந்திய முதலாளிகள் இந்திய வங்கிகளில் பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை கடனாகப் பெற்று வட்டியும் முதலையும் கட்டாமல் ஏமாற்றிவிட்டு வெளிநாடு களுக்கு தப்பியோடினர். இது ஒன்றிய அரசிற்குத் தெரிந்த செயல் என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின. இன்று வரை அவர்களை இந்தியாவிற்குக் கொண்டு வர ஒன்றிய பாஜக அரசு கடுமையான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால் தமிழ்நாட்டின் நித்தியானந்தா பெங்களூர் நகரில் பெரும் ஆசிரமத்தை அமைத்து வெளிநாட்டிலிருந்து பல ஆயிரம் கோடி ரூபாயை நன்கொடையாகப் பெற்றார். பல பெண்

களைப் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தினார் என்று கடும் குற்றசாட்டுகள் எழுந்த போது அவரும் வெளிநாட்டிற்குப் பெண் சீடர்கள் புடைசூழ தப்பியோடினார். கைலாசா நாடு என்று ஒரு தனிநாட்டை அறிவித்துவிட்டு அடிக்கடி இணையத்தில் வலம் வருகிறார். ஒன்றிய அரசு உண்மையிலேயே தனது அதிகாரத்தை முழுமையாகச் செலுத்தி இருந்தால் நித்தியானந்தாவைக் கைது செய்து இந்தியாவிற்குக் கொண்டு வந்து இருக்க முடியும். காவிகளுக்கு ஒரு நீதி; எதிர்கட்சிகளுக்கு ஒரு நீதி என்பதே ஒன்றிய பாஜக அரசின் அறிவிக்கப்படாத தேசியக் கொள்கையாக உள்ளது. எங்கும் ஊழல். எதிலும் ஊழல் என்பதே காவி ஆட்சியின் இலட்சியமாக உள்ளது என்பதை அண்மைக்கால புள்ளிவிவரங்களும் வெளிநாட்டு ஆய்வு அறிக்கைகளும் சுட்டுகின்றன.

நரேந்திரரின் ஆட்சியில் ஊழல்கள் செய்வதில் பல புதிய புதிய அணுகுமுறைகள் பின்பற்றப்படுகின்றன. சட்டத்தின் வழியாக ஊழல் செய்வது, சட்டத்தை மீறி ஊழல் செய்வது என்ற இருவகை ஊழல்களைச் செய்து உலக அளவில் ஊழலுக்கென்று புதிய இலக்கணம் வகுத்துள்ளார் நரேந்திரர்.

2016ஆம் ஆண்டு ரூ.500 ரூ.1000 பணத்தாள் மதிப்பிழப்பு நடவடிக்கையை ஒன்றிய பாஜக அரசு இரவோடு இரவாக அறிவித்தது. தனது அமைச்சரவையைக் கலந்து ஆலோசிக்கவில்லை. குடியரசுத் தலைவராக இருந்த நிதி ஆளுமைமிக்க பிரணாப் முகர்ஜி தனது நூலில் பணமதிப்பிழப்பு அறிவிப்பு வந்தபின்னரே தன்னை நரேந்திரர் சந்தித்தார் என்று குறிப்பிட்டுள்ளார். இத்தகைய அதிரடி அறிவிப்பின் வழியாக, பல ஆயிரம் கோடி கள்ளப்பணம் நல்லப் பணமாக மாறிவிடும் என்று ஒரு மாயத்தோற்றத்தை உருவாக்கினார் நரேந்திரர். இந்த நடவடிக்கையிலும் பெரும் ஊழலை சங்கிகள் செய்தனர். சான்றாக குஜராத்தில் அமித்ஷா இயக்குநராக இருந்த அகமதாபாத் கூட்டுறவு வங்கியில் 5 நாட்களில் 745 கோடி ரூபாய் மாற்றப்பட்டது. அதே போன்று குஜராத்திலுள்ள 11 வங்கிகளில் 3115 கோடி ரூபாய் பணம் மாற்றப்பட்டது. இந்த இரு செய்திகளும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் வழியாகப் பெறப்பட்டன.

அதேநேரத்தில் ஏழை நடுத்தர வருமானப் பிரிவினர் உழைத்து சிறுகச் சிறுக சேமித்து வைத்திருந்த நல்லப் பணத்தை வங்கிகளில் சென்று கணக்குக் காட்டி மீண்டும் பெறுவதற்கு முயற்சி செய்த போது நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் வரிசையில் நின்று வங்கிகளின் வாசலிலேயே மடிந்தனர். இச்செயல் ஏழை நடுத்தர மக்களின் வாழ்வாதாரத்தைச் சிதைத்த ஒரு கொடுந்தாக்குதலாகும். ஆனால் பணக்காரர்களோ சங்கிகளின் துணைகொண்டு இந்தியா முழுவதும் தங்களது செல்வாக்கினால் கள்ளப்பணத்தை ரூ.2000 பணத்தாள்களாக மாற்றிக்கொண்டனர். பல செய்தி ஏடுகள் இதை வெளியிட்டன.


சான்றாக பணமதிப்பிழப்பு அறிவிக்கப்பட்டு ரூபாய் 2000 பணத்தாள் வெளியிடப்பட்ட சில நாட்களிலேயே மணல் ஒப்பந்தக்காரர் சேகர் ரெட்டி இல்லத்தில் கட்டுக்கட்டாக ரூ.2000 பணத்தாள் கட்டுகள் கைப்பற்றப்பட்டன. ஒன்றிய அரசின் புலனாய்வுத் துறை வழக்குப் பதிந்தது. பிறகு போதிய ஆதாரங்கள் இல்லை என்று கூறி வழக்கைத் திரும்பப் பெற்றது. ரெட்டி திருப்பதி கோயிலின் அறங்காவலர் குழுவின் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டார்.

ரூ.500, ரூ.1000 பணத்தாள்கள் செல்லாது என்று பிரதமர் நரேந்திரர் அறிவித்து காணொலி வழியாக நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். ஆனால் இன்றோ நரேந்திரர்



தனது முகம் காட்டாமல் மறைந்துகொண்டு ரூ.2000 பணத்தாளை இந்திய ரிசர்வ் வங்கி வழியாக மதிப்பிழக்கச் செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டார். ரூ.2000 பணத்தாள்கள் மெல்ல மெல்ல திரும்பப் பெறப்பட்டு வருகின்றன. இந்திய பொருளாதாரமோ பின்னிறக்கத்தில் உள்ளது. பணச்சுழற்சியோ தடுமாறிக் கொண்டிருக்கிறது. இந்தப் பணமதிப்பிழப்பு நடவடிக்கைகளை ஆய்வு செய்தால் இவற்றிலும் புதைந்திருக்கும் ஊழல்களும் வெளிப்படும்.

2017ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட தேர்தல் பணப்பத்திரம் (Electoral Bond) ஊழலை ஊக்குவிக்கும் பத்திரமாக மாறிவிட்டது. இந்தப் பணப்பத்திரம் வழியாக நன்கொடை பெறும் நடைமுறை வருவதற்கு முன்பு பல கட்டுப்பாடுகள் பழையச் சட்டத்தில் இருந்தன. அவை : 1. எந்த வெளிநாட்டு நிறுவனமும் அரசியல் கட்சிக்கு நன்கொடை அளிக்க முடியாது. 2.உள்நாட்டு முதலாளித்துவக் குழுமங்கள் அரசியல் கட்சிகளுக்குத் தேர்தல் நிதி அளிக்க விரும்பினால் 1956ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் 182ஆம் விதியின்படி (Companies Act. 1956 (Sec.182)) மூன்று வருட நிகர இலாபத்தில் உச்சபட்சமாக 7.5 விழுக்காடு மட்டுமே நிதியாகவோ அல்லது பத்திரங்கள் வழியாகவோ அளிக்க முடியும். மேலும் அரசியல் கட்சிக்கு வழங்கப்பட்ட நன்கொடை விவரங்களைக் குழுமங்களின் ஆண்டறிக்கைகளில் வெளியிட வேண்டும். இத்தகைய கட்டுப்பாடுகள் இருந்த காலத்திலும்




பல வழிகளில் தேர்தல் நிதி என்கிற பெயரில் பெரு முதலாளிகள் கணக்கில் வராத பணத்தை ஆளும் கட்சி உட்பட பல கட்சிகளுக்கும் கமுக்கமாக நன்கொடையாக அளித்து வந்தனர். நன்கொடை அளித்த முதலாளிகளுக்கு அரசின் சலுகைகள் வாரி வழங்கப்பட்டன. நேர்மையாகத் தொழில் செய்த பல முதலாளிகள் முடங்கிப் போயினர்.

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் சுட்டப்படுகிற சந்தைப் போட்டிக்கு (Market Competition) சாவு மணி அடிக்கப்பட்டது. அதானி, அம்பானி போன்ற குஜராத் முதலாளிகள் அரசின் வரிச்சலுகைகளைப் பெருமளவில் பெற்றனர். ஒன்றிய அரசின் கட்டுபாட்டில் உள்ள பொதுத் துறை நிறுவனங்கான துறைமுகங்கள், வானூர்தி நிலை யங்கள் போன்றவற்றை ஒப்பந்த அடிப்படையில் மேலாண்மை செய்யும் உரிமையை ஒன்றிய அரசு அதானி அம்பானி களுக்கு வழங்கியுள்ளது.

இதன் காரணமாக, பொது மக்கள் முதலீட்டாளர்களின் நம்பிக்கைகளைப் பெற்று, கடந்த பத்தாண்டுகளில் பங்குச் சந்தையில் அதானி, அம்பானி குழுமங்களின் பங்கு மதிப்பு பன்மடங்காக உயர்ந்தது. இதன் காரணமாக பல இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு அவர்கள் சொத்து மதிப்பு உயர்ந்தது. மெல்ல மெல்ல இவ்வகை முறைகேடான செயல்களில் ஈடுபட்டு அதானி உலகப் பணக்காரர்கள் பட்டியலில் முதல் வரிசைக்குச் சென்றார். ஒன்றிய அரசின் சலுகைகளைப் பெற்றதனால் இந்தியாவின் முற்றுரிமை முதலாளிகளாக (monopoly capitalists) அதானிகளும் அம்பானிகளும் மாறினர்.

நிதி மோசடி, பொய்க் கணக்கைக் காட்டுதல் போன்ற வற்றை பின்பற்றிதான் அதானி உலக முதலாளி ஆனார் என்று பல ஆதாரங்களையும் ஆவணங்களையும் சுட்டிக் காட்டி ஹிண்டன்பர்க் நிறுவனம் பல நூறு பக்க அறிக் கையை வெளியிட்டது. ஊழலை ஒழிப்பேன்; வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கணக்கில் வராத பணத்தைக் கண்டுபிடித்து இந்தியாவிற்குக் கொண்டு வருவேன் என்று 2014ஆம் ஆண்டு தேர்தலில் முழங்கிய நரேந்திரர் தேர்தல் நிதி பெறுவதிலிருந்த கட்டுப்பாடு விதிகளை அகற்றி, வெளிநாடுகளில் கணக்கில் வராத பணத்தை வைத்து மோசடியான நிறுவனங்களை உருவாக்கி ஹவாலா பணப்பரிமாற்றத்தைப் பெருக்கிய நிறுவனங்களும் தற்போது தேர்தல் பத்திரமாக அளிக்க முடியும் என்ற சட்டத்திருத்தத்தை (2017) ஒன்றிய பாஜக அரசு கொண்டு வந்தது.

அப்போது ஒன்றிய அரசு இந்திய ரிசர்வ் வங்கியிடமும் தேர்தல் ஆணையத்திடமும் இச்சட்டத்திருத்தம் தொடர்பாகக் கருத்துகளைக் கேட்டது. இந்திய ரிசர்வ் வங்கி நரேந்திரர் கொண்டுவரும் சட்டம் முறைகேடான பணப் பரிமாற்றங் களுக்கு வழிவகுத்துவிடும் என்றும் வெளிநாட்டு நிறுவனங் களிடம் இருந்து தேர்தல் நிதிக்காகப் பணப்பத்திரம் வழியாக நன்கொடை பெறுவது பெரும் ஊழலை ஊக்குவிக்கும் என்றும் கருத்து தெரிவித்தது. அதேபோன்று ஒன்றிய அரசின் தேர்தல் ஆணையமும் பல பண முறைகேடுகளுக்கு இச்சட்டத் திருத்தம் வழிவகுத்துவிடும் என்று தனது கருத்தைத் தெரிவித்தது. ஆனால் பிரதமர் நரேந்திரர் இதைப் பற்றி எல்லாம் சிறிதும் அச்சமின்றி புறந்தள்ளி 2017இல் சட்டத்திருத்தத்தின் வழியாகச் சட்டப்படியாகப் பெரும் ஊழல் பணத்தை தேர்தல் நிதியாக அரசியல் கட்சிகள் நன்கொடைப் பெறுவதற்குப் பாதை அமைத்துக் கொடுத்தார்.

இந்திய நாடாளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளின் கருத்துகளையும் புறந்தள்ளி புதிய தேர்தல் பணப்பத்திரச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. கடந்த நான்காண்டுகளில் வெளிநாட்டு உள்நாட்டு முதலாளித்துவ பண முதலைகளிட மிருந்து தேர்தல் பத்திரம் வழியாக அரசியல் கட்சிகள் நிதி திரட்டியுள்ளன. அதில் 57 விழுக்காட்டிற்கு மேல் பாஜக விற்கும் மற்ற கட்சிகளுக்கு 43 விழுக்காடும் தேர்தல் நன்கொடையாக அளிக்கப்பட்டுள்ளது. நேர்மை புறக்கணிக் கப்பட்டது. வெளிப்படைத்தன்மை அடியோடு குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது. ஊழல் உச்சத்தைத் தொட்டுள்ளது. இதுதான் நரேந்திரர் கொண்டுவந்த சட்டத்திருத்தத்தின் சாதனை ஆகும். சட்டப்படியான ஊழல் செய்வதற்கு மற்றொரு அமைப்பை பிரதமரின் பெயரால் 2020ஆம் ஆண்டில் ஒன்றிய பாஜக அரசு பிரதமரின் நலத்திட்ட நிதி (PM Cares Fund) என்ற ஒரு புதிய அமைப்பை உருவாக்கியது.

ஊழல் செய்வதற்கு தகுந்த நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த காவி கும்பலுக்கு உலகம் முழுவதும் பரவிய கொரோனா தொற்று நோய் ஒரு புதிய வாய்ப்பை அளித்தது. அமெரிக்கா, சீனா, ஐரோப்பிய நாடுகள் இந்தக் கொடும் நோயை எதிர்கொள்வதற்கு வெளிப்படைத் தன்மையோடு சிகிச்சைக்கான நிதியைப் பெறுவதற்குப் பல நிருவாக அமைப்புகளை உருவாக்கின. எந்த நாட்டிலும் எந்த தலைவரும் இந்தக் கொடும் நோய்க் காலத்தில் ஊழலை ஊக்குவிக்கவும் தனிநபர் விளம்பரம் தேடுவதற்கும் முயற்சி செய்யவே இல்லை. ஆனால் இந்தியப் பிரதமர் இக்காலக்

கட்டத்தில்தான் மேற்குறிப்பிட்ட புதிய நிதியத்தை உருவாக்கி பல ஆயிரம் கோடி அளவிற்கு நிதியைப் பெற்றார். பிரதமரின் பெயரில் உள்ள நிதியத்திற்கு (Prime Minister Care Fund) நன்கொடையாளர்கள் அளிக்கும் நிதி பற்றிய விவரங்களைத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி பல சமூக செயல்பாட்டாளர்கள் கேட்டபோது பிரதமர் அலுவலகம் இதன் தொடர்பான விவரங்களை அளிக்க மறுத்துவிட்டது. இத்த கையச் செயல் இந்திய அரசமைப்புச் சட்ட விதிகளுக்கு எதிரானதாகும்.

இந்திய அரசமைப்புச் சட்டப்பிரிவு 266(2)இல் வரி வருவாய், கட்டண வருவாய், கடன் வழியாகப் பெறப்படும் நிதியைத் தவிர்த்து பிற நிதியை இந்தியப் பொதுக் கணக்கு நிதியத்தில் அளித்துவிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் நரேந்திரர் ஆட்சியில் 2020இல் பிரதமர் பொதுநல நிதியம் (Public Account) என்ற பெயரில் ஒன்றிய அரசில் இயங்கி வரும் இந்த நிதியம் அரசமைப்பு விதிகளுக்கு எதிராகவே வெளிப்படைத் தன்மை இல்லாமல் செயல்பட்டு நிதியைத் திரட்டி வருகிறது. கொரானா பெருந்தொற்றுக் காலத்தில் பெரும் இடர்கள் ஏற்பட்டால் துயர் துடைப்புப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டு நன்கொடைகள் பெருமளவில் பெறப்பட்டன. இந்நிதியம் தொடங்கிய முதல் வாரத்திலேயே பெருமுதலாளிகளிட மிருந்தும் முதலாளித்துவக் குழுமங்களிடமிருந்தும் ரூபாய் 6500 கோடி பெற்றது. மேலும் 10000 கோடி ரூபாய்க்கு மேல் இந்நிதியத்திற்கான பணம் பெறப்பட்டது என்றும் தகவல் வெளிவந்தது.

மாநிலங்களின் வரி உரிமைகளைப் பறித்துச் சரக்கு சேவை வரி விதிப்பு முறையை 2017இல் பாஜக அரசு நடைமுறைப்படுத்தியது. இந்த வரி விதிப்பு சிறுகுறு நடுத்தர உற்பத்தி நிறுவனங்களை வீழ்ச்சியடைச் செய்தது. மேலும் ஏழை, நடுத்தர மக்களின் மீது தாங்க முடியாத அளவிற்கு வரிச்சுமை ஏற்றப்பட்டது. அவர்களின் சிறிய அளவிலான குடும்பச் சேமிப்பு மீது கூட வரி விதிக்கப்பட்டது. இந்திய மக்கள் அனைவரும் வங்கிக் கணக்குகள் தொடங்க வேண்டும் என்று பிரதமர் பல முறை வேண்டுகோள் விடுத்தார். அரசின் பல நலத்திட்டங்கள் இந்த வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதை நம்பி பல இலட்சம் ஏழை மக்கள் வங்கிக் கணக்குகளைத் தொடங்கினர். ஆனால் குறைந்த அளவு இருப்புத் தொகை இந்த ஏழை மக்களின் வங்கிக் கணக்குகளில் இல்லாத காரணத்தால் கடந்த நிதியாண்டில் ஏழை எளியோர்க்கு தண்டமாக 21000 கோடி ரூபாயை விதித்தது. பொதுத்துறை, தனியார் துறை வங்கிகள் இந்த மக்களின் பணத்தைச் சூறையாடியுள்ளன. அதேநேரத்தில் பொதுத் துறை வங்கிகளிடமிருந்து பெருமுத லாளிகள் கடனாகப் பெற்ற ரூபாய் 10 இலட்சம் கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த 75 ஆண்டுகளாக நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தியில் குடும்ப சேமிப்பு 20 விழுக்காடாக இருந்து தற்போது 7 விழுக்காடாகக் குறைந் துள்ளது. ஏழை, நடுத்தர மக்களின் குடும்பப் பொருளா தாரத்தின்மீது நரேந்திரரின் துல்லியமான தாக்குதலின் ஒரு கொடுமையான அடையாளமாக இச்செயல் பல பொருளியல் வல்லுநர்களால் சுட்டப்பட்டுள்ளது.

இந்த வரி விதிப்பு முறையின் வழியாக வரி ஏய்ப்பைத் தடுப்போம் என்று கூறியது ஒன்றிய அரசு. ஆனால் இந்த வரிவிதிப்பில் உள்ள நடைமுறை விதிகளைத் தவறாகப் பயன்படுத்தி, போலியான பல நிறுவனங்களை உருவாக்கி, அந்த நிறுவனங்களில் இருந்து மூலப்பொருட்களைப் பெற்றதாகக் கணக்குக் காட்டி, பல முதலாளிகள் பல ஆயிரம் கோடி ரூபாய் வரி ஏய்ப்பு செய்துள்ளனர். 2023இல் ஒன்றிய அரசின் மறைமுக வரி வாரியம் மேற்கொண்ட ஆய்வில் இந்தச் சரக்கு சேவை வரியால் மோசடி செய்த தொகையின் மதிப்பு 15,000 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 17000 போலிக் கணக்குகள் கண்டறியப்பட்டுள்ளன. இதுவும் ஒரு வகை சட்டப் பூர்வமான ஊழலுக்கு வழிவகுத்த வரி விதிப்பு முறையாகும்.

சில மாதங்களுக்கு முன்பு அமெரிக்காவின் ஹிண்டன் பர்க் நிறுவனம் பங்குச் சந்தையில் மோசடி செய்தும் பொய்யான கணக்குக் காட்டியும் வரிச் சட்டங்களை மீறியும் அதானி குழுமம் பல இலட்சம் கோடி ரூபாயைச் சூறையாடி உள்ளது என்று குறிப்பிட்டது. இவ்வகை மோசடிகளால்தான் அதானி உலகப் பணக்காரர்களின் முதல் வரிசையில் இடம் பெற்றார் என்று பல ஆதாரங்களை அள்ளி வழங்கியது இந்நிறுவனம். இராகுல் காந்தி சென்ற ஆண்டு நாடாளு மன்றத்தில் ஹிண்டன்பர்க் அறிக்கையைப் படித்து அதானிக்கும் நரேந்திரருக்கும் உள்ள தொடர்பு பற்றி நாடு அறிந்து கொள்ள விரும்புகிறது என்று கேள்வி கேட்டவுடன் ஜனநாயகத்தின் அடித்தளத்தையே பிளக்கும்வண்ணம் அவசர அவசரமாக இராகுலின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பறித்தனர். உச்சநீதிமன்ற தலையீட்டால் குஜராத் நீதிமன்றத்தின் தீர்ப்பு நிறுத்தப்பட்டது. மீண்டும் நாடாளு மன்றத்திற்கு இராகுல் காந்தி சென்றார். ஊழல் பயம் உலுக்கியதால் எதிர்க்கட்சியினரை நாடாளுமன்றத்தில் எதிர்கொள்வதற்கு அச்சப்பட்டு நரேந்திரர் ஓடியதை இந்த நிகழ்வு வெளிப்படுத்தியது.

இச்சூழலில்தான் 2023ஆம் ஆண்டு இந்தியத் தலைமைக் கணக்கு உயர் அலுவலரின் அறிக்கை தேசிய நெடுஞ்சாலை களைக் கட்டமைக்கும் பணிகளில் நடைபெற்ற பெரும் ஊழலை வெளிப்படுத்தியது. பாரத்மாலா திட்டத்தின்கீழ் துவாரகா விரைவு நெடுஞ்சாலை அமைக்கும் பணிக்கான செலவு ஒரு கிலோ மீட்டருக்கு ரூபாய் 18 கோடி என்று கணக்கிடப்பட்டுத் திட்டம் தொடங்கியது. ஆனால் ஒரு கிலோ மீட்டர் சாலை அமைக்கும் பணிக்கு 250 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது. ஒரு கிலோ மீட்டர் சாலையில் மட்டும் 232 கோடி

ரூபாய் மக்களின் வரிப் பணம் சூறையாடப்பட்டுள்ளது. ஹிண்டன்பர்க் அறிக்கை அளித்த அதானி ஊழலை விஞ்சியது பாரத்மாலா திட்டத்தில் நடைபெற்ற மாபெரும் ஊழல்.

பிரதமரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் நடைபெற்ற மோசடியும் ஊழலும் இதுவரை இந்தியா கண்டிராதது. 7,50,000 நபர்கள் ஒரேயொரு அலைபேசி எண்ணில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான இறந்தவர்களை உயிரோடு இருந்து இந்தக் காப்பீட்டுத் திட்டத்தின் வழியாக மருத்துவச் சிகிச்சை பெற்றுப் பயன் பெற்றார்கள் என்று போலிக் கணக்குக் காட்டிப் பெரும் பணம் கையாடல் செய்யப் பட்டுள்ளது. 88,760 நோயாளிகள் சிகிச்சை பெற்றார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராமனை வைத்துதான் பாஜக தேர்ப் பயணம் நடத்தியது. இதனை முன்னின்று நடத்தி இன்று காணாமல் போன பட்டியலில் இடம்பெற்றுள்ள அத்வானி தலைமையில் சங்கிகள் பாபர் மசூதியை இடித்தனர். இந்த மத அரசியலைத் தூண்டி பல வட மாநிலங்களில் பாஜக தனது செல்வாக்கை வளர்த்துக் கொண்டது. மக்களை மூடநம்பிக்கையில் ஆழ்த்தி எல்லாம் இராமன் செயலே என்று கூறியவர்கள் இன்று இராமன் தலையிலேயே ஊழல் கையை வைத்துள்ளனர். அயோத்தி இராமன் கோயில் கட்டுவதில் நிலம் வாங்குவதில் சங்கிகளின் ஊழல் கைகள் நீண்டதாக தலைமைக் கணக்கு உயர் அலுவலரின் அறிக்கைச் சுட்டுகிறது.

ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தேசிய நெடுஞ் சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள சுங்கச் சாவடிகளில் வாகன ஓட்டிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட கட்டணங்களில் பெரும் மோசடிகள் நடைபெற்றுள்ளன என்பதையும் ஒன்றிய அரசின் தலைமைக் கணக்கு உயர் அலுவலரின் அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. சான்றாக செங்கல்பட்டு-பரனூர் சுங்கச்சாவடியை 2019-2020இல் கடந்த வாகனங்களின் 1.17 கோடி எண்ணிக்கையில் 63 இலட்சம் வாகனங்கள் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டதாகப் போலிக் கணக்குக் காட்டிப் பெரும் ஊழல் நடைபெற்றுள்ளது. இவ்வாறு ஒன்றிய அரசின் தலைமைக் கணக்கு உயர் அலுவலர் அளித்த அறிக்கையின்படி 7 இலட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடைபெற்றுள்ளது என்பது வெளிவந்துவிட்டது. தலைமைக் கணக்கு உயர் அலுவலரின் அறிக்கை ஒன்றிய அரசின் எல்லாத் துறை களிலும் செய்யப்படும் பொதுச் செலவை ஆய்ந்து அறிக்கை வெளியிடுவதில்லை. மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில துறைகளில் (Selected Departments of samplingMethod) செய்யப்பட்ட பொதுச் செலவை மட்டும் ஆய்ந்து தனது ஆய்வறிக்கையை ஆண்டுதோறும் அளிக்கிறது. ஒட்டுமொத்த ஒன்றிய அரசின் துறைகளை முழுமையாக ஆய்வு செய்தால் பாஜக அரசின் ஊழலின் அளவு பல இலட்சம் கோடிகளைத் தாண்டும் என்பதில் ஐயமில்லை.

பொதுத் துறை வங்கிகளில் கடன் பெற்ற பெரு முதலாளி களுக்கு 10 இலட்சம் கோடி ரூபாய் தள்ளுபடி. துறை முகங்கள், விமான நிலையங்கள் அதானிக்குத் தாரை வார்ப்பதில் அளிக்கப்பட்ட சலுகைகள். இரபேல் விமானங் களை வாங்குவதற்கு அம்பானிக்குக் கிடைத்த தரகுத் தொகையைக் கணக்கிட்டால் பல இலட்சம் கோடி ரூபாய் ஊழல்கள் வெடித்துக் கிளம்பும். எனவே இதை எல்லாம் மறைப்பதற்காகத்தான் எதிர்க்கட்சிகளின்மீது ஒன்றிய அரசின் அமைப்புகளான அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, புலனாய்வுத் துறைகளை ஏவிவிடுகிறது ஒன்றிய பாஜக அரசு. வெடித்துக் கிளம்பும் மகா ஊழல்களைப் பற்றிச் செய்திகளை வெளியிடாமல் ஒளி ஒலி ஊடகங்கள் விவாதங் களுக்கு உட்படுத்தாமல் வேடிக்கை பார்க்கின்றன முதலாளித்துவ ஊடகங்கள். ஆனால் இதையும் மீறி வெளிநாட்டு அமைப்பு கள் பல அதிர்ச்சியான ஊழல் பற்றிய உண்மைத் தகவல் களை வெளியிட்டு வருகின்றன. அமைப்புரீதியான ஊழல் குற்றங்கள் பற்றிய ஆய்வு நிறுவனம் (Organised Crime and Corruption Reporting Project) கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக உலக அளவிலான பல ஊழல்களை ஆவணத்தோடு அம்பலப்படுத்தி ஊழல் செய்தோர் மீது நடவடிக்கைகளை எடுக்கும்படி வலியுறுத்தி வருகிறது. பனாமா கள்ளப்பணம் ஆவணம், பெகாசிஸ் உளவு நிறுவனம் செய்த தவறுகள் ஆகியவற்றையும் இந்த அமைப்பு தான் வெளிக்கொணர்ந்தது.

இந்நிறுவனம் தற்போது இந்தியாவில் அரங்கேறிவரும் ஊழல்களைப் பற்றி வெளியிட்ட ஆய்வு அறிக்கை குறிப்பாக அதானி குழுமங்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டை அம்பலப்படுத்தியுள்ளது. இந்த அறிக்கையை கார்டியன் (The Guardian and Fiancial Times) போன்ற வெளிநாட்டு ஏடுகளும் தமிழ்நாட்டில் ஆங்கில இந்து ஏடும் 23 ஆகஸ்ட் 2023இல் வெளியிட்டன. அவ்வறிக்கையில் ஒன்றிய அரசின் பல துறைகளின் உதவியோடு அதானி குழுமம் செய்த மோசடிகளை உருவாக்கிய போலி நிதி நிறுவனங் களை அவற்றின் வழியாக செய்யப்பட்ட மோசடியான பணப் பரிமாற்றங்களையும் சுட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்தியப் பங்குச் சந்தையில் இத்தகைய மோசடிப் பணம் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளதையும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கெல்லாம் எப்போது நீதி கிடைக்கும் என்ற கேள்வி இன்று மக்கள் மன்றத்தில் எழுப்பப்படுகிறது. முதலாளித்துவ பாசிச மதவாத பாஜகவை ஒன்றிய அரசிலிருந்து தூக்கி எறிந்தால்தான் மேலும் பல உண்மைகள் வெளிவரும். 2024ஆம் ஆண்டு நாடாளு மன்றத் தேர்தலில் பாஜகவை ஒவ்வொரு மாநிலக் கட்சியும் மற்ற கட்சிகளும் இந்தியாவாக ஒன்றிணைந்து தோற் கடிப்பதே இந்திய நாட்டிற்கும் மக்களுக்கும் விடியலாகவும் தீர்வாகவும் அமையும். ❖

# பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு சட்டம்
# புதைந்திருக்கும் புதிர்கள்



- க. முகிலன்

கிழக்கிந்திய கம்பெனியிடம் இருந்த இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை 1858இல் பிரித்தானியப் பேரரசு தன் நேரடி ஆட்சியின்கீழ் கொண்டு வந்தது. இந்தியத் துணைக் கண்டத்தில் இருந்த பல்வேறு மத, சமூகப் பிரிவினரும் ஆட்சி அதிகாரத்தில் தமக்குரிய பங்கைப் பெற முயன்றனர்.

இத்தன்மையில், 1906இல் தொடங்கப்பட்ட முசுலீம் லீக் 1909இல் இடஒதுக்கீடு பெற்றது. 1916-இல் தொடங்கப்பட்ட நீதிக்கட்சி டி.எம். நாயரின் தலைமையிலான குழுவினரின் பெருமுயற்சியால் 1919இல் மண்டேகு-செம்சுபோர்டு சீர்திருத் தத்தின் மூலம் 1920இல் சென்னை மாகாணத்தில் நடந்த முதலாவது தேர்தலில் பார்ப்பனர் அல்லாதாருக்கான இட ஒதுக்கீடு பெற்று, ஆட்சியை அமைத்தது.


தலித்துகள் இந்துக்கள் அல்லர்; அதனால் அரசியல் உரிமை பெறுவதில் தலித்துகளைத் தனிப்பிரிவினராகக் கருதவேண்டும் என்று புரட்சியாளர் அம்பேத்கர் 1918 முதலே வலியுறுத்தி வந்தார். 1931இல் இலண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் காந்தியாரைக் கடுமையாக எதிர்த்து இக்கருத்தை நிலைநாட்டினார். தலித்துகளுக்குத் தனி வாக்காளர் தொகுதியைப் பிரித் தானிய அரசு அறிவித்தது. இதை எதிர்த்து காந்தியார் சாகும் வரை உண்ணாநிலைப் போராட்டத்தை மேற் கொண்டார், சமரச முயற்சியாக புனா ஒப்பந்தம் மூலம் தற்போது மக்களவையிலும் மாநிலச் சட்டமன்றங்களிலும் நடப்பில் உள்ள தலித்துகளுக்கான தனித் தொகுதி இட ஒதுக்கீடு முறை உருவானது. பட்டியல் பழங்குடியினருக் கான தனித்தொகுதி 1950இல் நடப்புக்கு வந்த அரசமைப்புச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டது.

மக்கள் தொகையில் சரி பாதியாக உள்ள பெண்கள் உலக அளவில் மதக்கட்டளை என்கிற பெயரால் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக ஒடுக்கப்பட்டு வந்தனர். 'அரசு' என்கிற ஆட்சிமுறை ஏற்படுவதற்கு முன்பே, சொத்துரிமை மறுக்கப்பட்டதன் மூலம் பெண்கள் அடிமைகளாக்கப்பட்டனர். நவீன காலத்தில் சனநாயக ஆட்சி முறை ஏற்பட்ட பிறகு பெண்கள் கல்வி, வேலை வாய்ப்பு பெற்று பல துறைகளில் இடம்பெற்று வருகின்றனர். இந்தியாவில் பெண்களின் முன்னேற்றம் மிகவும் பின்தங்கியுள்ளது.

சட்டம் இயற்றும் அதிகாரம் படைத்த நாடாளுமன்றத் திலும் மாநில சட்டமன்றங்களிலும் பெண்களுக்கு இடஒதுக்கீடு வேண்டும் என்று 1980-களின் இறுதி வரையில் கூட பெண்ணுரிமை அமைப்புகளோ, அரசியல் கட்சிகளோ கோரிக்கை வைக்கவில்லை. தற்போது மக்களவையில் மொத்தம் உள்ள 543 உறுப்பினர்களில் 82 பேர் பெண்கள். இது 15 விழுக்காடாகும். ஆனால் உலகளவில் நாடாளு மன்றங்களில் சராசரியாக 26 விழுக்காடு அளவில் பெண்கள் இடம்பெற்றுள்ளார். இதில் உலகில் 193 நாடுகளில் இந்தியா 141ஆவது இடத்தில் உள்ளது. பாக்கித்தான், தென்னாப் பிரிக்கா, கென்யா போன்ற நாடுகளில் பெண்கள் பிரதி நிதித்துவம் இந்தியாவைவிட அதிகமாக இருக்கிறது. இந்தியா வில் சட்டமன்றங்களில் பெண்கள் பத்து விழுக்காடு அளவில் உள்ளனர்.




1989இல் இராசிவ் காந்தி தலைமையமைச்சராக இருந்த போது ஊரக மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு அளிப்பதற்கான சட்டத்தைக் கொண்டு வந்தார். இச்சட்டம் மக்களவையில் நிறைவேறியது. மாநிலங்கள் அவையில் ஏழு வாக்குகள் வேறுபாட்டில் தோல்வியடைந்தது. 1993இல் காங்கிரசு ஆட்சியில் பி.வி. நரசிம்மராவ் தலைமையமைச்சராக இருந்த போது, ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் 73ஆவது அரசமைப்புச் சட்டத்திருத்தமும், நகர உள்ளாட்சி அமைப்புகளில் 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் 74ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தமும் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேறின. இச்சட்டங்கள் மூலம் அய்ந்தாண்டுகளுக்கு ஒருமுறை கட்டாயம் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்த வேண்டும் என்கிற நிலை ஏற்பட்டது. தற்போது இருபதுக்கும் மேற்பட்ட மாநிலங்களில் பெண்களுக்கான இடஒதுக்கீடு 50 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.




இதன் பிறகே நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றது. 1996இல் அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் தேவகவுடா தலைமை அமைச்சராக இருந்த போது இதற்கான சட்டம் முன்மொழியப்பட்டது. ஆனால் நிறைவேறவில்லை. பா.ச.க. தலைமையிலான ஆட்சியில் வாஜ்பாய் தலைமையமைச்சராக இருந்த காலத்தில் 1998, 1999, 2002, 2003ஆம் ஆண்டுகளில் இச்சட்டம் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் நிறைவேறவில்லை. 2010இல் மன்மோகன் சிங் ஆட்சியில் இச்சட்டம் மாநிலங்கள் அவையில் நிறைவேறியது. மக்களவையில் வாக்கெடுப்பிற்கே எடுத்துக்கொள்ளப்படவில்லை. பெண்களுக்கு 33 விழுக்காடு அளிப்பதற்கான சட்டமுன்வரைவு 1996இல் அறிமுகப்படுத்தப்பட்டது முதலே சமாஜ்வாதி கட்சியும் இராஷ்டிரிய ஜனதா தளக் கட்சியும் பெண்களுக்கான ஒதுக்கீட்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்புப் பெண்களுக்கு உள்ஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன. காங்கிரசுக் கட்சியும் பா.ச.க.வும் இதை ஏற்க மறுத்தன.

பா.ச.க.வின் 2014 மற்றும் 2019 நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு அளிப்போம் என்று வாக்குறுதி தரப்பட்டுள்ளது. 9½ ஆண்டுகளாக இதைக் கிடப்பில் போட்டிருந்த நரேந்திர மோடி திடீரென நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத் தொடரைக் (செப்டம்பர் 18-22) கூட்டி, பெண்களுக்கு மக்களவையிலும் சட்டமன்றங்களிலும் 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்குவதற்கான 128ஆவது அரசமைப்புச் சட்டத்திருத்தத்தை இரு அவைகளிலும் நிறைவேற்றியுள்ளார். இச்சட்டத் திருத்தத்திற்கு ‘நாரிசக்தி வந்தன் அதினியம்’ (பெண் சக்திக்கு வணக்கம்) என்று பெயரிடப்பட்டுள்ளது. பெண்ணடிமைத் தனத்தை இன்றளவும் போற்றுகின்ற ஆர்.எஸ்.எஸ்.-இன் அரசியல் கட்சியான பா.ச.க. பெண் சக்திக்கு வணக்கம் என்று பெயரிட்டிருப்பது 2024 தேர்தலில் பெண் வாக்காளர்களை ஈர்ப்பதற்கேயாகும்.

மாநிலங்களவையில் எங்களுக்குப் பெரும்பான்மை இல்லை; அதனால் எதிர்க்கட்சியில் மனமுவந்து இதை ஆதரிக்க வேண்டும் என்று மோடி வேண்டுகோள் விடுத்தார். அவ்வாறே எதிர்கட்சியினர் அனைவரும் ஆதரித்தனர். மக்களவையில் ஓவைசி உள்ளிட்ட இருவர் எதிர்த்து வாக்களித்தனர். காங்கிரசுக் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இந்த இடஒதுக்கீட்டை 2024 தேர்தலிலேயே நடைமுறைப்படுத்த வேண்டும்; பிற்படுத்தப்பட்ட வகுப்புப் பெண்களுக்கு உள் ஒதுக்கீடு அளிக்க வேண்டும்; சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று வலியுறுத்தின. மோடி ஆட்சி இதை ஏற்கவில்லை. புதிய நாடாளுமன்றத்தில், பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்கும் முதலாவது சட்டம் நிறைவேற்றப்பட்டது வரலாற்றுப் பெருமையாகும் என்று மோடி கூறுகிறார். “இந்தியப் பெண்களுக்கு அதிகாரம் அளிக்க கடவுள் என்னைத் தேர்ந்தெடுத்தார் என்று கருதுகிறேன்” என்று நரேந்திர மோடி நாடாளுமன்றத்தில் சொன்னார். அப்படியானால் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு அதிகாரம் வழங்க இராசிவ் காந்தியைக் கடவுள் தேர்ந்தெடுத்தாரா?

இச்சட்டம் நிறைவேற்றப்பட்டதற்கு தான் மட்டுமே காரணம் என்கிற பரப்புரையை மோடி தொடங்கிவிட்டார். வரும் திசம்பர் மாதம் சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள மத்தியப்பிரதேசத்தின் தலைநகரான போபாலில் பெண்கள் அதிக எண்ணிக்கையில் கலந்துகொண்ட பா.ச.க. செயல் வீரர்கள் கூட்டத்தில் 25.9.2023 அன்று பேசிய மோடி, “முப்பது ஆண்டுகளாகக் கிடப்பில் இருந்த மகளிர் இடஒதுக்கீட்டுச் சட்டத்தை நிறைவேற்றினேன். காங்கிரசுக் கட்சி ஆட்சியில் இருந்த போது இதை ஏன் நிறைவேற்றவில்லை. இப்போதுகூட காங்கிரசுக் கட்சி வேறு வழியில்லாமல் கட்டாயத்தின் பேரில் இச்சட்டத்தை ஆதரித்தது” என்று கூறினார். வரலாற்று உண்மையைத் திரிக்கும் பித்தலாட்டப் பேச்சல்லவா இது!

பெண்களுக்கு இடஒதுக்கீட்டின் மூலம் அதிகாரமளிப்பதில் இவ்வளவு தீவிரம் காட்டும் மோடி, இச்சட்டத்தை 2014 நாடாளுமன்றத் தேர்தலிலேயே நடைமுறைக்கு ஏன் கொண்டுவரவில்லை? 2014 தேர்தலில் நடைமுறைப்படுத்த முடியாத ஒரு சட்டத்தை நிறைவேற்ற-எதற்காகக் கூட்டப்படுகிறது என்றும் தெரிவிக்காமல் நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டியது ஏன்? குளிர்கால நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் பெண்கள் இடஒதுக்கீடு சட்டத்தை நிறைவேற்றியிருக்கலாமே! மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான், தெலுங்கானா, சத்தீஸ்கர், மிசோரம் ஆகிய மாநிலங்களின் சட்டப் பேரவைகளுக்குத் திசம்பர் மாதத்திற்குள் நடைபெறும் தேர்தலில் பரப்புரைக்கான ஆயுதமாக இச்சட்டத்தைப் பயன்படுத்துவதே பா.ச.க.வின் நோக்கம்.

நிறைவேற்றப்பட்ட 128ஆவது அரசமைப்புச் சட்டத்தில் பெண்களுக்கான 33 விழுக்காடு இடஒதுக்கீடு, அடுத்து நடைபெறவுள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் நாடாளுமன்றத் தொகுதிகள் மறுவரையறை செய்த பின்பே நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பா.ச.க.வுக்கு உள்ளார்ந்த விருப்பம் இருந்திருந்தால் 2014 தேர்தலிலேயே செயல்பாட்டுக்குக் கொண்டு வந்திருக்க முடியும்.

இந்தியாவில் 1881 முதல் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை மக்கள் தொகைக் கணக்கு எடுக்கப்பட்டு வருகிறது. அதன்படி 2021ஆம் ஆண்டு இதை எடுத்திருக்க வேண்டும். 2020

ஆம் ஆண்டு கொரோனா பெருந்தொற்று ஏற்பட்டு 2021 முடிய நீடித்ததால் இப்பணி ஒன்றிய அரசால் தள்ளிவைக் கப்பட்டது. கொரோனா தொற்று முடிவுக்கு வந்து நீண்டகால மாகியும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு எப்போது நடத்தப்படும் என்பது தெரியவில்லை. ஜி-20 நாடுகளில் இந்தியா மட்டுமே மக்கள் தொகைக் கணக்கு எடுக்கவில்லை. பெண்களுக்கான இடஒதுக்கீடு சட்ட விவாதத்தின் போது நாடாளுமன்றத்தில் அமித்ஷா, 2024 தேர்தலுக்குப்பின் கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று தெரிவித்தார். எப்போது என்று திட்டவட்டமாகக் கூறவில்லை. எனவே மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முடிந்த பிறகே தொகுதிகள் மறுவரை யறை செய்யும் பணிகள் தொடங்கும்.

கடைசியாக தொகுதி வரையறை, 1971ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் 1973ஆம் ஆண்டு நடைபெற்றது. மக்கள் தொகை அடிப்படையில் தொகுதிகள் எண்ணிக்கை அமைகிறது. மக்களவைத் தொகுதி பத்து இலக்கம் வாக்காளர்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். 1973 தொகுதி வரையறையின்படி தமிழ்நாட்டு மக்களவை உறுப்பினர் எண்ணிக்கை 42-லிருந்து 39 ஆகக் குறைந்தது. தமிழ்நாடு மக்கள் தொகையைக் கட்டுப் படுத்த குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கைகளைத் தீவிரமாகச் செயல்படுத்தியதால் மக்கள் தொகை குறைந்தது. அதே சமயம் வடமாநிலங்களில் மக்கள் தொகை அதிகமானதால் அவர்களுக்கு மக்களவை உறுப்பினர் எண்ணிக்கை உயர்ந்தது. குடும்பக் கட்டுப்பாட்டைத் தீவிரமாகச் செயல் படுத்திய தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களும் மற்றும் சில மாநிலங்களுக்கும் மக்களை உறுப்பினர் எண்ணிக்கை குறைப்பு நடைமுறைக்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்தன.

அதனால் 1976ஆம் ஆண்டு ஒன்றிய அரசு 42ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் வழியாக 2021ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கு எடுக்கப்படும் வரை தொகுதி மறுவரையறை செய்யும் பணியை நிறுத்தி வைப்ப தாக முடிவு செய்தது. அதற்குள் வடக்கு-தெற்கு மாநிலங்களுக் கிடையிலான மக்கள் தொகைப் பெருக்க விகிதத்தில் உள்ள ஏற்றத்தாழ்வு நீங்கி சமநிலை அடையும் என்று எதிர்பார்க் கப்பட்டது. எதிர்பார்த்த அளவில் இதில் முன்னேற்றம் இல்லாத தால் 2002ஆம் ஆண்டு 82ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் 2026 வரையில் தொகுதி மறுவரையறை செய்யும் பணியை நிறுத்தி வைப்பது என்பது நீட்டிக்கப்பட்டது.

இதன்படி, 2026க்குப் பின் எடுக்கப்படும் மக்களை தொகைக் கணக்கின் அடிப்படையில்தான் தொகுதிகள் வரையறை செய்ய முடியும். தொகுதிகள் வரையறை செய்யும் பணி முடிய மூன்று நான்கு ஆண்டுகளாகும். அதனால் 2029இல் நடைபெறும் மக்களவைத் தேர்தலின்போதுகூட பெண்களுக் கான 33 விழுக்காடு இடஒதுக்கீடு செயல்பாட்டுக்கு வராது என்பது திண்ணம். மேலும் காலமுறைப்படி 2031இல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தி, அதன்பின் தொகுதி வரை யறை செய்தால்கூட 2034இல் நடைபெறும் மக்களவைத் தேர்தலில் கூட பெண்களுக்கான இடஒதுக்கீடு நடைமுறைக்கு வருமா என்பது அய்யமே! மேலும் தொகுதி வரையறை செய்வதில், தொகுதி எண்ணிக்கையை அளவிடலில் ஏற்படக் கூடிய சிக்கல்கள் காரணமாக இச்சட்டம் எப்போது நடை முறைக்கு வரும் என்பதை அறுதியிட்டு எவராலும் கூறமுடியாது. ஆயினும் இந்த உண்மை நிலையை மறைத்து, பா.ச.க. திசம்பரில் நடைபெறும் 5 மாநிலங்களின் சட்டமன்றத் தேர்த லிலும், 2024 ஏப்பிரல்-மே மாதம் நடைபெறும் நாடாளு மன்றத் தேர்தலிலும் பெண்களின் வாக்குகுளை ஈர்க்க பெண்கள் இடஒதுக்கீட்டுச் சட்டத்தைத் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தும்.


2026க்குப்பின், மக்கள் தொகை அடிப்படையில் நாடாளுமன்றத் தொகுதிகள் வரையறை செய்யப்படும் போது உறுப்பினர் எண்ணிக்கை உயரும் என்பதால்தான் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் மக்களவையில் 800 பேர் அமரும் வகையில் கட்டப்பட்டுள்ளது. எனவே, தொகுதிகள் வரையறை செய்யும் பணிகள் தொடங்குவதற்கு முன்பாக மக்கள் தொகையைச் சிறப்பாகக் கட்டுப்படுத்தியுள்ள மாநிலங் கள் எதிர்கொள்ளும் சிக்கலுக்குத் தீர்வு காணவேண்டும். தற்போது மக்களவையில் உள்ள 543 உறுப்பினர்களில் தமிழ்நாட்டுக்கு 39 உறுப்பினர்கள் என்றுள்ள விகிதம் - அதாவது 14 விழுக்காடு என்பது எதிர்காலத்திலும் அப்படியே நீடிக்கும் வகையில் தொகுதி வரையறை இருக்க வேண்டும். இது ஒவ்வொரு மாநிலத்தின் அரசியல் உரிமையாகும். இதுவே கூட்டாட்சிக் கோட்பாட்டின் முறையுமாகும்.

1937 முதல் தலித்துகளுக்கு இடஒதுக்கீடு அளிக்கப்பட்டு வருகிறது. ஆயினும் அவர்கள் இந்திய அரசியலில் தீர்மானிக்கக் கூடிய ஆற்றலாக வளர முடியவில்லை. இதற்குக் காரணம் வருணாசிரம சாதியக் கட்டமைப்பே ஆகும். அதேபோல் பெண்கள் 33 விழுக்காடு அளவிற்குச் சட்டமன்றங்களிலும் மக்களவையிலும் உறுப்பினர்களாக இடம்பெற்றாலும் அமைச்சர்களானாலும் அரசியலில் திசைவழியைத் தீர்மானிப் பவர்களாக உயர்நிலைப் பெறுவார்களா? மனு ஸ்மிருதியில், ஒரு பெண் இளமையில் தந்தைக்கும், திருமணத்திற்குப்பின் கணவனுக்கும், கணவன் இறந்தால் மகனுக்கும் கட்டுப்பட்ட வளாக இருக்க வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளதே இந்திய சமூகத்தின் வாழ்வியலாக இன்றும் நீடிக்கிறது.

திருமணம், பிள்ளை வளர்ப்பு, குடும்பப் பொறுப்பு, மதம்-சாதி-பண்பாடு சார்ந்த சடங்குகளைச் செய்தல் முதலானவை பெண்கள் சுதந்திரமாக ஆண்களைப் போல் செயல்படுவதற்குத் தடையாக உள்ளன. இப்பொறுப்புகளை ஆண்கள் விருப்பமுடன் பகிர்ந்து கொள்ளும் நிலை ஏற்படும் போதுதான், பெண்கள் அரசியலில் ஈடுபட முன்வருவார்கள். பா.ச.க. தொலைநோக்குடன் 2007 முதலே 18-35 அகவையில் உள்ள பெண்களுக்கு அரசியல் பயிற்சி அளித்து வருகிறது.

பெண்களுக்கு இடஒதுக்கீடு அளிக்கும் சட்டம் நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். விரைவில் செயல்படுத்த மக்கள் குரல் கொடுக்க வேண்டும். 2024 தேர்தலுக்குப் பின் ஒன்றிய அரசில் யார் ஆட்சி அமைத்தாலும் பிற்பட்ட வகுப்பு பெண்களுக்கு உள்ஒதுக்கீடு வழங்க வேண்டும். பெண்கள் இடஒதுக்கீட்டுக்கு முழு உரிமை கொண்டாடும் பா.ச.க.வின் போலித்தனத்தை மக்களிடையே அம்பலப்படுத்த வேண்டும். ❖

# பெரியாரின் 50 ஆண்டு காலப் போராட்டக் களங்கள்



- சா.குப்பன்

இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் உள்ள உழைக்கும் கீழ்ச்சாதி மக்கள் அனைவரின் அனைத்துத்துறை அடிமைத் தளங்களில் இருந்து விடுதலை பெற்றுத் தருவதை நோக்க மாகக் கொண்டதாகப் பெரியார் முன்னெடுத்தக் கிளர்ச்சிகள் அமைந்தன. பெரியாரின் 145ஆம் பிறந்த நாளில் அவரின் கிளர்ச்சிகள் பற்றி அறிவது இன்றைய மானுட உரிமைப் போராட்டங்களுக்கு வழிகாட்டியாகத் திகழும்.

பெரியார் 1879ஆம் செப்டம்பர் 17-இல் பிறந்து 1973 திசம்பர் 24 வரை நீண்டகாலம் வாழ்ந்தவர் மட்டுமா? அவர் சிறுவனாக இருந்த போதே மனிதர்கள் சமமாக நடத்தப்படா தவர்களாகவும் மனிதர்களுக்குள் சமஉரிமை இன்மைப் பற்றிய உணர்வு ஓங்கி இருந்தது. மனிதர்கள், சக மனிதர் களை இழிவாக நடத்தப்படுவதையும் அந்த இழிதகை மைக்கு உள்ளாவோர் 'தாம் இழிவாக நடத்தப்படுகிறோமே' என்ற உணர்வு சிறிதுமின்றி உள்ள சமூகத்தின் போக்கைக் கூர்ந்துநோக்கும் சிந்தனையும் அத்தகு உரிமை மறுப்பு, சமத்துவமின்மை களையப்பட வேண்டும் என்பதைப் பற்றி கவலையோடு சிந்திக்கின்ற இயல்புமிக்கவராகவும் விளங்கினார் என்பதை அவரது வாழ்க்கை நிகழ்வுகளைக் கொண்டு அறிகிறோம்.

1912, தம் அகவை 33இல் ஈரோடு வட்ட நாட்டாண்மைக் கழக (Taluk Board) உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1914இல் கோயமுத்தூர் காங்கிரசு மாநாட்டுக்கு ஒரு செயலாளராகப் பணியாற்றினார். 1914 திசம்பர் 28, 29, 30 மூன்று நாள்கள் சென்னையில் நடந்த காங்கிரசு அனைத் திந்திய மாநாட்டில் ஒரு பிரதிநிதி (delegate) பங்கேற்றார். 03.04.1917இல் ஈரோடு நகர்மன்றத் தலைவராகவும் 03.05.1917இல் கோயமுத்தூர் மாவட்ட நாட்டாண்மைக் குழு (District Board) உறுப்பினராகவும் ஆனார்.



1919இல் திருச்சியில் நடந்த காங்கிரசு 25ஆம் மாகாண அரசியல் மாநாட்டில் பங்கேற்றார். மாநாடு நடந்த அதே கொட்டகையில் நாவலர் ச.சோமசுந்தர பாரதியார் தலை மையில் தனிக்கூட்டம் நடத்தி வகுப்புரிமையை வலியுறுத்திட வேண்டித் தீர்மானமெடுக்கப்பட்டது. 1919இல் அமிர்தசரசிலும், 1920இல் கல்கத்தாவிலும், 1922இல் கயாவிலும், 1923இல் காக்கிநாடாவிலும் 1924இல் பெல்காமிலும் நடந்த அனைத் திந்திய காங்கிரசு மாநாடுகளில் பங்கேற்றார். 25.12.1924 பெல்காமில் மாலை 4 மணிக்கு 'அகில இந்திய பிராமணர் அல்லாதார்' தனி மாநாடு பெரியார் தலைமையில் நடந்தது. 02.12.1923 இல் திருச்சியில் நடந்த தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டியின் ஆண்டுக் கூட்டத்தில் ஈ.வெ.இரா.த.நா.காங்கிரசுக் கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**பெரியாரின் முதல் கிளர்ச்சி - முதல் சிறைத் தண்டனை**

காங்கிரசில் இருந்த போது கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டதற்காக பெரியார் ஈ.வெ.இரா. உள்ளிட்ட நூறு பேர் 15.11.1921 அன்று ஒரு மாதம் வெறுங்காவல் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டனர். இதுவே பெரியார் சிறைக்குச் சென்ற முதல் நிகழ்வு ஆகும். இதனைப் பாராட்டி காந்தியார் 'யங் இந்தியா' 22.12.1921 இதழில் எழுதினார்.

**வைக்கம் கிளர்ச்சியில் பெரியார் ஏற்றிருந்த பங்கு**

கேரளத்தில் கோட்டயம் மாவட்டம், வைக்கத்தில் அமைந்துள்ள மகாதேவர் கோவிலைச் சுற்றி நாற்புறத்திலும் உள்ள சாலைகளில் ஈழவர், பறையர், புலையர், தீயர், மலை அரிறயர், மலை பண்டாரம், அயித்தகாரர், ஆசாரி, வாணியர், நெசவாளர் என 18 சாதிகளைச் சார்ந்த மக்கள் தீண்டத் தகாதவர் என நடக்கவும் புழங்கவும் தடைசெய்யப் பட்டிருந்தது. இந்தத் தீண்டாமை - உரிமை மறுப்பை எதிர்த்து காங்கிரசுக் கட்சியின் கேரளத் தலைவர்கள் 30.03.1924இல் சத்தியாக்கிரகக் கிளர்ச்சியைத் தொடங்கினர். கிளர்ச்சித் தொடங்கிய 3-4 நாள்களில் முக்கியத் தலைவர்கள் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டனர். இதனால் கிளர்ச்சித் தோல்வியுறும் நிலை ஏற்பட்டது. தீண்டாமை போன்ற அநீதிக்கு எதிராகப் போராடும் உறுதிமிக்கவர் ஈ.வெ.இரா. என்பதால் கேரளத் தலைவரான குரூர் கே. நீலகண்ட நம்பூதிரி ஈ.வெ.இரா.வுக்கு 04.04.1924 அன்று தந்தி வழியாக கிளர்ச்சியை மேற்கொண்டு நடத்திட வருமாறு வேண்டினார்; ஜார்ஜ் ஜோசப் அவர்களிடமிருந்து 06.04.1924 அன்று மடல் வந்தது. வைக்கத்திலும் சுற்றுவட்டாரங்களிலும் கூட்டங்களில் பெரியார், மக்களை சத்தியாக்கிரகத்தில் ஈடுபடு

மாறும் ஆதரவு அளிக்குமாறும் உணர்ச்சியைத் தூண்டும் உரைகள் நிகழ்த்தினார். 19.4.1924 அன்று ஆலப்புழைச் சிறையில் இருந்த சத்தியாக்கிரகிகளைப் பார்க்கச் சென்றார். அப்போது சிறைவாயிலில் திரண்ட 3000 மக்களிடையே ஈ.வெ.இரா. 3 மணிநேரம் உரை நிகழ்த்தினார்.

28.04.1924 அன்று திருவனந்தபுரத்தில் நடந்த கூட்டத்தில் ஈ.வெ.இரா. ஆற்றிய உரை, திருவாங்கூர் குற்றவியல் சட்டம் 181ஆம் பிரிவின்படி குற்றம் என்று கூறப்பட்டு, 21.05.1924 அன்று வைக்கம் மேஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. பெரியாருக்கு 1 மாதம் வெறுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. 22.05.1924 முதல் 28.05.1924 வரை திருவனந்தபுரம் சிறையிலும் 29.05.1924 முதல் 21.06.1924 வரை அருவிகுத்தி சிறையிலும் வைக்கப்பட்டு 21.06.1924 அன்று விடுதலைச் செய்யப்பட்டார்.

அடுத்த நாளான 22.06.1924 முதல் கூட்டங்களில் சத்தியாகிரகப் போராட்டம் தொடர்ந்து நடைபெற ஆதரவு திரட்டுவதற்காக ஈ.வெ.இரா. உரைகள் ஆற்றினார். ஈ.வெ.இரா. கோட்டயம் மற்றும் கொல்லம் மாவட்டங்களில் 2 மாதங்களுக்கு பேசக்கூடாது என 23.06.1924 அன்று அரசு தடை ஆணை பிறப்பித்தது. 25.06.1924 அன்று பெரியார் அவ்வாணைக்குப் பணிய முடியாது என்று அறிவித்தார்.

இதனால் ஈ.வெ.இரா. மீது வழக்குத் தொடரப்பட்டது. வழக்கில் 17.07.1924 அன்று 4 மாதங்கள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

ஈ.வெ.இரா. சிறையில் கால்களில் விலங்குப் பூட்டப்பட்டு, தனிமைச் சிறையில் வைக்கப்பட்டார் என்று சி. இராச கோபாலாச்சாரியார் அறிக்கை 28.8.1924 நாளிட்ட சுதேச மித்திரன் ஏட்டில் வெளியானது. பெரியாருடைய மனைவி நாகம்மையும் தங்கை கண்ணம்மாவும் வைக்கத்தில் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டனர். இதனால் நாகம்மை 8 நாள்கள் (ரிமாண்டு) சிறை வைக்கப்பட்டார். சத்தியாகிரகப் போராட்டம் தொடர் மழையிலும் கழுத்தளவு நீர்த் தேங்கி யிருந்த போதும் கூட தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது.

திருவாங்கூர் மன்னர் அரண்மனையில் ‘சத்ரு சம்மார யாகம்’ நடத்தப்பட்டிருந்த நிலையில் 07.08.1924 அன்று மன்னர் இறந்துவிட்டார். அதை அடுத்து மகாராணி சேது லட்சுமிபாய் பட்டத்திற்கு வந்தார். இதனால் சிறையில் இருந்த ஈ.வெ.இரா. உள்ளிட்ட கிளர்ச்சியில் ஈடுபட்டத் தலைவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

பின்னர் காந்தியார் வைக்கம் வரவழைக்கப்பட்டு 12.03.1925 அன்று இராணியைச் சந்தித்துப் பேசியதில் சாலைகளில் அனைத்து சாதி மக்களும் நடக்கலாம் என்பதை இராணியின் அரசு ஆணை எண்.5/06.08.1925-இன்படி அதுவரை இருந்தத் தடை நீக்கப்பட்டது. இந்தக் கிளர்ச்சித் தொடங்கியது முதல் இறுதியாக தடை அகற்ற ஆணை வரை 16 மாதங்கள் ஆயின. இந்தக் கிளர்ச்சியில் பெரியார் ஈ.வெ.இரா. முதல் முறை 31 நாட்களும் இரண்டாம் முறை 37 நாட்களுமாக 68 நாட்கள் சிறைவாசம் அனுபவித்தார். அப்போது வைக்கம் கிளர்ச்சியைப் பற்றி எழுதிய திரு.வி.க. பெரியாரரை ‘வைக்கம் வீரர்’ என்று பாராட்டினார்.

**1938 இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி**

மாகாணங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்ட 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்படி சென்னை மாகாணத்தில் நடத்தப்பட்டத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி அதிக இடங்களைப் பெற்று சி.இராசகோபாலாச்சாரி தலை மையில் 14.03.1937 இல் ஆட்சியில் அமர்ந்தது. பாகிஸ்தானை உள்ளடக்கிய அப்போதைய இந்தியாவில் 11 மாகாணங்கள் இருந்தன. அவற்றுள் 9 மாகாணங்களில் காங்கிரசு ஆட்சி அமைந்தன. பிரதமரான (Premier) இராசகோபாலாச்சாரி சென்னை மாகாணத்தில் மட்டும் 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை 125 பள்ளிகளில் இந்தி மொழிப் பாடம் தேர்ச்சிக்குரிய கட்டாயப் பாடமாக 21.04.1938 இல் ஆணை பிறப்பித்தார். 2200 தொடக்கப் பள்ளிகளை மூடிவிடவும் ஆணை பிறப்பித்தார்.




இந்தி மொழி தமிழர்கள் மீது புகுத்தப்பட உள்ளக் கேட்டினை அறிந்து 1929 முதலே பெரியார் எதிர்த்து வந்தார் (குடிஅரசு, 20.01.1929). மறைமலை அடிகள், நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் உள்ளிட்டத் தமிழ் அறிஞர்களும் பெரியாரும் இராசகோபாலாச்சாரியின் இந்தி கட்டாயப் பாடம் என்பதைக் கடுமையாக எதிர்த்தனர்.

12.11.1938இல் சென்னையில் நீலாம்பிகைத் தலைமை யில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில், பெரியார் ‘இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டு சிறைபுகுமாறு பெண்களைத் தூண்டி னார்’ என்று பெரியார் மீது குற்றம் சாற்றப்பட்டது. 05, 06.12.1938 நாள்களில் சென்னை நீதிமன்றத்தில் வழக்கை விசாரித்து, பெரியாருக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை யும் உரு.2,000/- தண்டமும் விதிக்கப்பட்டது.

பெரியார் 06.12.1938 முதல் 22.05.1939 வரை சென்னை, பெல்லாரி, கோவை சிறைகளில் சிறை வைக்கப் பட்டார். 168 நாள்கள் சிறைவாசத்திற்குப்பின் 22.05.1939

அன்று இரவு 12 மணிக்கு கோவை சிறையிலிருந்து நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டார். சிறை புகும் போது 190 பவுண்டு (86 கிலோ) எடை இருந்த பெரியார் விடுதலையான போது 166 பவுண்டு (75 கிலோ) அதாவது 11 கிலோ எடை குறைந்து இருந்தார். இந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்ட 32 குழந்தைகள், 73 மகளிர் உள்ளிட்ட 1271 பேர் சிறைத் தண்டனை அனுபவித்தனர். சிறையில் உடலநலம் குன்றி சென்னை தோழர் நடராசன் 15.01.1939 அன்று ஈகியானார். கும்பகோணத்தைச் சேர்ந்த தோழர் தாலமுத்து 13.03.1939 அன்று ஈகியானார். இவர் இறக்கும் போது அகவை 24.

இந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சித் தொடங்குவதற்கு முன் இந்தி மொழித் திணிப்பால் விளையக் கூடிய தீங்குகள் பற்றி மக்களிடையே பரப்புரை செய்வதற்காக அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரி தலைமையில் 01.08.1938 அன்று திருச்சியில் இருந்து நடைபயணமாகப் புறப்பட்ட படை 42 நாள்கள் பரப்புரைக்குப்பின் 11.09.1938 அன்று சென்னை வந்தடைந்தது. அந்தப் படையினருக்கு வரவேற்பு அளிக்கும் முகத்தான் அன்றிரவு சென்னை, திருவல்லிக்கேணி கடற்கரையில் மறைமலையடிகள் தலைமையில் நடந்த மிகப்பெரிய மக்கள்திரள் கூட்டத்தில் உரையாற்றிய பெரியார் ‘‘தமிழ்நாடு தமிழருக்கே’’ என முழங்கினார் என்பது வரலாறு.

03.09.1939-இல் இரண்டாம் உலகப் போர் மூண்டது. காங்கிரசுக் கட்சியைக் கலந்தாலோசிக்காமல் பிரித்தானிய அரசு இந்தியாவைப் போரில் ஈடுபடுத்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து காங்கிரசு மாகாண அரசுகள் பதவி விலகின. இதனால் இராசகோபாலாச்சாரி தலைமையிலான சென்னை மாகாண அரசு 09.10.1939இல் பதவி விலகியது. 31.10.1939 முதல் 29.03.1946 முடிய சென்னை மாகாணத்தில் ஆளுநர் ஆட்சி நடந்தது. ஆளுநராக இருந்த ஜான் எர்ஸ்கின் 21.02.1940இல் இந்தி கட்டாயப் பாடம் என்ற உத்தரவை விலக்கினார். இந்தி அப்போது ஒழிந்தது. தமிழ்ப் புலவர் சாமி சிதம்பரனார் பெரியார் வாழ்க்கை வரலாற்றை எழுதி, ‘‘தமிழர் தலைவர்’’ என்ற பெயரில் நூலாக குத்தூசி குருசாமி 1939 செப்டம் பரில் வெளியிட்டார். அப்போது முதல் பெரியாரை ‘தமிழர் தலைவர்’ என்று மக்கள் அழைக்கலாயினர்.

**கணபதி உருவ பொம்மை உடைப்பு**

பெரியார் பிள்ளையார் பொம்பை உடைப்பது பற்றி பின்வருமாறு கூறியுள்ளார். பிரித்தானியர் ஆட்சி ஒழிந்து ‘ஜனநாயக ஆட்சி’ - பார்ப்பன ஆதிக்கம் ஏற்பட்டதிலிருந்து ஒவ்வொரு மாத்திரை (நொடி) நேரமும் வருணாசிரம தர்ம ஆட்சி வளர்ந்து வளம் பெற்றுவருகிறது. இந்த ஏகபோக ‘ஜனநாயக’ ஆட்சி மூலம் பல துறைகளில், பல கொடுமை யான முறைகளைக் கையாண்டு மனு காலச் சூத்திராக்கத் திட்டம் கொண்டு உத்தியோகத் துறையிலும் கல்வித் துறையிலும் திட்டம் வகுத்துச் செயலில் இறங்கிவிட்டது.

பார்ப்பன நலனுக்கும் சர்வ ஆதிக்க நலனுக்கும் வருண தர்ம புதுப்பிப்புக்காகவே (Reviving-க்காகவே) இந்த ‘ஜனநாயக ஆட்சி’. சவுண்டிப் பார்ப்பனர் முதல் சங்கராச் சாரியார் பார்ப்பனர் வரை சர்வ பார்ப்பனர்களும் வருணா சிரம, வேத, சாஸ்திர, புராண, இதிகாசங்களைப் பிரச்சாரம் செய்து வருவதென்றால்... வருணாசிரம வியாதியை ஒழிக்க 27.05.1953 அன்று நாடெங்கும் புத்தர் விழா கொண்டாடி, மாலை 6 மணிக்குப் பொதுக் கூட்டத்தில் வருணாசிரம வாதிகள் மூலதேவன்-தெய்வம் என்று கருதப்படும் செயற்கை உருவ அறிகுறியை உள்ளத்தில் அழித்துவிட வேண்டும். ‘பிள்ளையார் அல்லது கணபதி’ என்பதை - மண்ணால் செய்த பொம்மை உருவத்தை கழகக் காரியாலயத்தில் அல்லது அவரவர்கள் வீட்டில் உடைத்து மகிழ்ச்சி கொண் டாடுங்கள். நரகாசூரனைக் கொன்றதாகப் பார்ப்பனர்களும் பார்ப்பன அடிமைகளும் எப்படிக் கொண்டாடுகிறார்களோ அதேபோல், உருவத்தை உடைத்துக் கொண்டாடுங்கள்.

‘‘ஏன் உடைக்கச் சொன்னேன்; பிள்ளையார் கடவுள் அல்ல; அதன் பிறவிக் கதைகள் காட்டுமிராண்டிக் கற்பனை என்பது விளக்கப்படவே ஆகும். நமக்குக் கடவுள் என்பதெல் லாம், நம் நடத்தையில் - சத்தியம், நாணயம், தயவு, உபகாரஞ் செய்தல், துரோகம் செய்யாதிருத்தல் ஆகியவை யாகும்’’ என்று பெரியார் 7.5.1963 ‘விடுதலை’ தலையங் கத்தில் விளக்கப்படுத்தினார்.

பெரியாரும் மற்ற தோழர்கள் சிலரும் சில முக்கிய நகரங்களில் மேற்கொண்ட பிள்ளையார் பொம்மை உடைப்புக் கிளர்ச்சிக்கு ஆச்சாரியார் ஆட்சி எந்த நடவடிக் கையும் எடுக்கவில்லை.

**குலக்கல்வித் திட்ட எதிர்ப்பு**

1947இல் இந்திய விடுதலைக்குப்பின், 1950 சனவரி 26இல் புதிய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்து, அதன்படி 1952இல் சென்னை மாகாண சட்டமன்றத்திற்கு முதலாவதுத் தேர்தல் நடந்தது. அதில் அதிக இடங்களைப் பெற்ற காங்கிரசுக் கட்சி ச.இராசகோபாலாச்சாரியார் தலை மையில் 10.4.1952இல் ஆட்சியமைத்தது. இராசகோபாலாச் சாரியார் 15.08.1947 முதல் 21.06.1948 வரை மேற்கு வங்க ஆளுநராகவும், 21.06.1948 முதல் 26.01.1950 வரை இந்தியாவின் கவர்னர் ஜெனரலாகவும், 17.12.1950 முதல் 05.11.1951 வரை நேரு தலைமையிலான இடைக்கால அரசில் உள்துறை அமைச்சராகவும் பதவிகளில் இருந்தவர் ஆவார்.

முதலமைச்சரான இராசகோபாலாச்சாரியார் மாகாண அரசின் கல்விச் செலவைக் குறைப்பதற்காக 6000 கிராமப்புறப் பள்ளிகளை மூடினார். மேலும் முதல் கட்டமாக 1953-54 கல்வியாண்டு முதல் 155 பள்ளிகளில் 3 மணிநேரம் பள்ளியில் கற்றபின் மீதி நேரம் அவரவர் குடும்பத்தில் தந்தை செய்யும் தொழிலில் பயிற்சி பெற



வேண்டும் என ஆணை பிறப்பித்தார். இதனைக் 'குலக் கல்வி' என எதிர்க்கட்சியினரும் பெரியாரும் கடுமையாக எதிர்த்தனர்.

பெரியார் 24.01.1954 அன்று ஈரோட்டில் ஆச்சாரியார் கல்வித் திட்ட எதிர்ப்பு மாநாடு நடத்தினார். ''உழைக்கிற நமது மக்கள் படிக்கக் கூடாது; பாடுபடாத சோம்பேறிக் கூட்டம் தான் படிக்க வேண்டும்; உத்தியோகம் பார்க்க வேண்டும் என்றால் என்ன நியாயம்? இதை எப்படிச் சகித்துக் கொண்டி ருப்பது? சாஸ்திரத்திலே, புராணத்திலே, இன்னும் மதம், கடவுள் ஆதாரங்கள் எல்லாவற்றிலும் அக்கிரமமான முறையில் எங்களை அடக்கி ஒழிப்பதையே இலட்சியமாக வைத்திருப்பது போதாமல்...'' கல்வி கற்பதற்கும் முட்டுக் கட்டையா?

''எங்கள் நாட்டில் பார்ப்பானுக்குச் சமமாக வாழ எங்களுக்குத் தகுதி இல்லை, திறமை இல்லை என்கிறார்கள். இந்த எதிர்ப்புப் போராட்டத்தை எங்கள் ஜீவாதாரமான, உயிர்நிலைப் போராட்டமாகக் கருதுகிறோம். இந்தக் கல்வித் திட்டம் எடுபட்டால் மட்டுமே போதாது; நம்முடைய மக்களுக்கு உத்தியோகம், கல்வி எல்லாவற்றிலும் சரியானபடியான விகிதாசாரம் பார்ப்பானுக்கு 100க்கு 3, நம்மவர்களுக்கு 97 என்கிற மாதிரி வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டாக வேண்டும், இந்த இரண்டும் திராவிட மக்களின் ஜீவாதார மான - உரிமையானப் பிரச்சினைகள்'' எனப் பலவாறாகப் பெரியார் அரசுக்குக் கோரிக்கையும் மக்களுக்கு விழிப்பும் ஊட்டினார். (பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் (1974) பக்.1828-32).

பெரியாரின் கடுமையான எதிர்ப்புடன் தி.மு.க. உள்ளிட்ட மற்ற கட்சியினர், பொது மக்கள் குலக்கல்வியை எதிர்த்தனர். ஆயினும் இராசகோபாலாச்சாரியார் தமது முடிவில் பின் வாங்கப் போவதில்லை என்று உறுதியாக இருந்தார். சட்ட மன்றத்தில் இக்கல்வித் திட்டத்திற்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவந்ததில் மிகச்சிலர் எதிர்த்தும் மிகப்பெரும்பான்மை ஆதரவாகவும் வாக்களித்தனர். இதனால் இராசகோபாலாச் சாரியார் 13.04.1954 அன்று பதவியில் இருந்து விலகினார். பெரியாருடைய ஆதரவுடன் கு. காமராசர் முதலமைச்சர் ஆனார். ஆச்சாரியாரின் கல்வித் திட்டம் கைவிடப்பட்டது. இது பெரியார் இயக்கத்திற்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாக அனைவராலும் பாராட்டப்பட்டது.

### தேசியக் கொடி கொளுத்தும் கிளர்ச்சி

17.7.1955-இல் திருச்சியில் இந்தியை எதிர்ப்பதற்காக தேசியக் கொடியை 01.08.1955 அன்று எரிப்பது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. முதலமைச்சர் கு.காமராசர் இந்தி கட்டாயமாகக் கற்பிக்கப்படாது என அரசு சார்பில் வாக்குறுதி அளித்ததால் அப்போராட்டம் ஒத்திவைக்கப்பட்ட தாகப் பெரியார் அறிவித்தார்.

### இராமன் பட எரிப்புக் கிளர்ச்சி

பெரியார், 21.12.1922-இல் திருப்பூரில் நடந்த காங்கிரசு மாநாட்டில் தீண்டாமை, கோயில் நுழைவு பற்றிக் கொண்டு வந்த தீர்மானம் அனுமதிக்கப்படவில்லை. அன்று மாலை திருப்பூரில் நடந்தப் பொதுக் கூட்டத்தில் ''வருணத்தையும் தீண்டாமையையும் காப்பாற்றும் இராமாயணத்தையும் மனுநீதியையும் எரிக்க வேண்டும்'' என்று பெரியார் கடுஞ்சினத்துடன் உரையாற்றினார்.

''இராமன் கடவுள் அல்லன்; அவன் ஒரு வீரன்'' என்று இராசகோபாலாச்சாரியார் கட்டுரையில் எழுதியிருக்கிறார். சங்கராச்சாரியும் 'இராமன் கடவுள் அல்லன்; ஓர் ஆதர்ஷ புருஷன்' என்று கூறி இருக்கிறார். மறைமலை அடிகள், டி.கே.சி., திரு.வி.க., வி.பி. சுப்பிரமணியப் பிள்ளை, பி. சிதம்பரம் பிள்ளை முதலிய புலவர்கள், ஆராய்ச்சியாளர்கள் 'இராமன் கடவுள் அல்லன்; இராமாயணம் கடவுள் கதை அல்ல' என்று கூறி இருக்கிறார்கள். வால்மீகி தனது இராமாயண இலக்கியத்தில் 'இராமன் பெண்ணைக் கொன்றவன்; பெண்ணை மானபங்கப்படுத்தியவன்; துரோகக் காரியங் களுக்கு உடந்தையாக இருந்தவன்' என்றெல்லாம் கூறியிருக்கிறார். ஆகவே அப்படிப்பட்ட ஒருவனை மக்கள் கடவுளாக, பிரார்த்தனை, பக்தி செலுத்தத் தக்கவனாகக் கருதக்கூடாது; இராமனைக் கொளுத்துங்கள்'' என்றேன்.

''இன்றும் மதுரை முதலிய இடங்களில் சமணர்கள் கழுவேற்றப்பட்ட உற்சவம் ஆண்டுக்கு ஒருமுறை நடக்கின்றது; சூரசம்மாரம் நடைபெறுகின்றன. இராமன் படம் அச்சிட்ட காகிதத்தை, பொம்மையைக் கொளுத்தினால் யாரோ சிலர் மனம் புண்படும் என்று எரிப்பதைத் தடைசெய்வது கூடாது. எனவேதான் சர்க்கார் தடை உத்தரவை மீற நேரிட்டது'' எனப் பெரியார் விளக்கியுள்ளார். பெரியார் 01.08.1956 அன்று கைது செய்து அன்று மாலையே விடுவித்துவிட்டார்கள்.

### நால்வருணத்தைக் காக்கும் அரசமைப்புச் சட்ட விதிகள் எரிப்பு கிளர்ச்சி

03.11.1957 அன்று தஞ்சையில் கூடிய திராவிடர் கழகச் சிறப்பு மாநாட்டில் நால்வருணத்தைக் காக்கும் அரசமைப்புச்

சட்ட விதிகளை நீக்கக்கோரி, அப்பிரிவுகளை அச்சிட்டு 26.11.1957 அன்று எரித்திடும் கிளர்ச்சி நடத்திடத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"சாதி காப்பாற்றப்படும் சட்டம் எங்களுக்கு வேண்டாம்; சாதியை ஒழிக்க இயலாத சட்டம் எங்களுக்கு வேண்டாம்; அதைத் திருத்து; சாதி ஒழிக்கப்பட வசதி செய்து கொடு என்பதற்கு அறிகுறியாக, சாதியைப் பாதுகாக்க வசதியுள்ள பாகத்தை (பிரிவுகளை) குறித்த ஒரு துண்டு காகிதத்தை, அறிக்கைக் கொடுத்துக் கொளுத்துவதன் மூலம் வலியுறுத்து கிறோம்" என்று பெரியார் இந்தக் கிளர்ச்சியின் நோக்கத்தை அறிவித்தார்.

தேசியக்கொடி எரிப்புப் போன்ற கிளர்ச்சிகளில் ஈடுபடு வோரைத் தண்டிக்க அப்போது வரை சட்டத்தில் இடமில்லாத தால் 11.11.1957 அன்று சென்னை மாநிலச் சட்டமன்றத்தில் தேசிய அவமதிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டப்படி கிளர்ச்சியில் ஈடுபடுவோருக்கு 6 மாதங்கள் முதல் 3 அண்டு கள் வரை சிறைத் தண்டனை விதிக்க வகை செய்யப்பட்டது.

இப்படி ஒரு சட்டம் கொண்டுவந்த பின்னரும் தமிழ் நாட்டில் சுமார் 10,000 திராவிடர் கழகத் தொண்டர்கள் 26.11.1957 அன்று சாதியைப் பாதுகாக்கும் அரசமைப்புச் சட்டத்தின் 13, 25, 372 ஆகிய பிரிவுகள் அச்சிட்டத் தாளை எரித்தனர். எரித்தவர்களுள் 2997 பேர் 6 மாதங்கள் முதல் 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர். திருச்சி நடுவண் சிறையில் சிறைக் கொடுமையால் நோயுற்று பட்டுக்கோட்டை இராமசாமி 09.03.1958 அன்றும் மணல் மேடு வெள்ளைச்சாமி 10.03.1958 அன்றும் மறைந்தனர்.

பெரியார் சட்ட எரிப்புக் கிளர்ச்சியை முன்னிட்டு வேறு ஒரு வழக்கில் 25.11.1957 அன்று முன்கூட்டியே கைது செய்யப் பட்டார். இதனால் 26.11.1957 சட்ட எரிப்பில் பங்கேற்க இயல வில்லை. பெரியார் 05.10.1957 அன்று குளித்தலைக் கூட்டத்திலும் 13.10.1957 அன்று பசுபதிபாளையம் கூட்டத்திலும் 28.11.1957 அன்று திருச்சி கூட்டத்திலும் பார்ப்பனரைக் கண்டித்துப் பேசியதற்காகவும் சட்ட எரிப்புக் கிளர்ச்சியைத் தூண்டியதற் காகவும் பெரியாருக்கு 14.12.1957 அன்று திருச்சி மாவட்ட நீதிமன்றம் 3 குற்றங்களுக்கு 3 ஆறு மாதங்கள் சிறைத் தண்டனையை ஒரே நேரத்தில் அதாவது 6 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. இதனால் பெரியார் 14.12.1957 முதல் சிறைவாசி ஆனார்.

இந்திய அரசமைப்புச் சட்டம் இயற்றிட பின்பற்றப்பட்ட நடைமுறைகள் ஏற்கத்தக்கவையா என்பது பற்றி பெரியார் கூறியுள்ள மிகவும் முக்கியமான கருத்துகளைக் காண்போம்.

1. 1946இல் நடைபெற்றத் தேர்தலின் மூலம் தேர்ந் தெடுக்கப்பட்ட மாகாண சட்டசபை அங்கத்தினர்களால் ஓட்டு செய்து அரசியல் நிர்ணய சபையைத் தேர்ந்தெடுத்தார்கள். (இந்தியா - பாகிஸ்தான் என) நாடு இரண்டாகப் பிரிந்த பிற்பாடு எஞ்சியிருந்த 235 மெம்பர்களும் சமஸ்தானங்களில் (மன்னர்கள் ஆட்சிப் பகுதிகளில்) இருந்து 72 பேர்களுமாக மொத்தம் 307 பேர் அப்போது இருந்தார்கள். அப்போது ஓட்டுப் பெற்றிருந்தவர்கள் இன்றைய (1957) வாக்காளர்களில் 12% பேர். இது எப்படி மக்கள் பிரதிநிதிகளால் உருவாக்கப் பட்டதாகும்?

நாடு சுதந்திரம் அடையாத காலத்தில் நடந்த எலக்ஷன் பிரதிநிதிகளால் - காங்கிரசுப் பார்ப்பனப் பிரதிநிதிகளால் ஏற்படுத்தப்பட்ட இந்தச் சட்டம் நம்மை எப்படிக் கட்டுப்படுத்த முடியும்?

அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டம் 09.12.1946 இல் நடந்தது.

2. அரசமைப்புச் சட்ட வரைவுக்குழுவில் இடம் பெற்றி ருந்த 6 பேர்களில் 4 பேர் பார்ப்பனர்கள்.

1. அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், 2. டி.டி. கிருஷ்ண மாச்சாரி, 3. கோபால்சாமி அய்யங்கார், 4. கே.எம். முன்ஷி. மற்ற இருவர் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர், முகமது சாதுல்லா.

**மற்ற கிளர்ச்சிகள்**

1924 வைக்கம் கிளர்ச்சி, 1938 இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி, 1953 கணபதி பொம்மை உடைப்பு, 1953-54 குலக்கல்வித் திட்ட எதிர்ப்பு, 1955 தேசியக் கொடி எரிப்பு, இராமன் பட எரிப்பு, நால்வருணம் காக்கும் அரசமைப்புச் சட்ட விதிகள் எரிப்புக் கிளர்ச்சி ஆகிய 7 கிளர்ச்சிகள் பற்றி மிகச் சுருக்கமாக மேலே கூறப்பட்டுள்ளன.

பிராமணாள் பெயர் நீக்கம் (1957, 58), காந்திப் பட எரிப்பு (13.8.1957), இராமாயண எரிப்பு (10.04.1965), தமிழ்நாடு நீங்கலாக இந்தியப் பட எரிப்பு (5.6.1960), இழிவு நீக்கக் கிளர்ச்சி ஆகியவையும் பெரியாரால் நடத்தப் பட்டன.

1948-இல் நடத்தப்பட்ட இந்தி எதிர்ப்பு, 2ஆம் இந்தி எதிர்ப்புப் போர் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. மிகப் பெரிய அளவில் மறியல் போராட்டங்கள் நடத்தப்பட்டு பலர் கைது செய்யப்பட்டனர். அதன்பிறகு 1952 முதல் தொடர் வண்டி நிலையப் பலகைகளில் உள்ள இந்தி எழுத்துகளை அழிக்கும் போராட்டத்தை நடத்தினார். ஏனெனில் அதுவரை தொடர்வண்டி நிலையப் பலகைகளில் இந்தி இடம்பெற்றிருக்கவில்லை. இந்தி அகற்றப்படும் வரை ஒவ்வொரு ஆண்டு ஆகஸ்டு முதல் நாள் இந்தக் கிளர்ச்சி தொடர்ந்து நடத்தப்பட்டது. 1954இல் தள்ளி வைக்கப்பட்டு 8.8.1954 அன்று இந்தி எழுத்துகள் அழிக்கப்பட்டன.

உணவு விடுதிப் பெயர்ப் பலகைகளில் 'பிராமணாள்' என எழுதப்பட்டன. அவ்வாறு எழுதப்பட்டிருப்பது மற்ற வர்கள் 'சூத்திரர்கள்' என்று கூறுவதாகும் என்று 'பிராமணாள்' என்பதை நீக்கக் கோரி 27.04.1957 முதல் 30.08.1958 வரைத் தொடர் கிளர்ச்சி நடத்தப்பட்டது. அக்கிளர்ச்சி வெற்றி ஈட்டியது. ❖


## சு.திலீப்குமார்-இல.சந்தியா துணை ஏற்பு விழா

சோளிங்கபுரம் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சித் தோழர் வெ.சுப்பிரமணி-பானுமதி இணையரின் மகன் சு.திலீப் குமார்-இல.சந்தியா வாழ்க்கைத் துணை ஏற்பு விழா 08.09.2023 அன்று சோளிங்கபுரத்தில் நிகழ்ந்தது. நிகழ்வின் மகிழ்வாக புதிய சிந்தனையாளனுக்கு ரூ.500/- அளிக்கப்பெற்றது.

## சாதிய சனாதனப் பார்ப்பனியத்தை வீழ்த்துவோம் தமிழ்நாடு தமிழருக்கே என்று முழங்குவோம் பெரியாரின் முழக்கக் கூட்டம்




தமிழக மக்கள் முன்னணி சார்பில் சென்னை மேடவாக்கம் தமிழ்க்களத்தில் 29.09.2023 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு சாதிய சனாதனப் பார்ப்பனியத்தை வீழ்த்துவோம் என்ற பெரியாரின் முழக்கக் கூட்டத்திற்கு தம்பி மண்டேலா அவர்கள் தலைமைத் தாங்கினார். மா.பிறைநுதல், மகிழினி, வாலாசா வல்லவன், பொழிலன் ஆகியோர் உரையாற்றினர்.



**"கடைசியாக, சீர்திருத்தங்கள் மக்களுக்கு ஒழுக்கங்கள் கற்பிக்கவும், அறிவை விசாலப்படுத்தவும், ஜீவன்களிடத்தில் அன்பும் இரக்கமும் காட்டவும், எல்லா மக்களிடமும் சமத்துவத்தையும் சுயமரியாதை உணர்ச்சியையும் அதிகப்படுத்தவுமே வேண்டும்."**

*- சென்னையில் 26.11.1928இல் நடைபெற்ற தென்னிந்திய சீர்திருத்தக்காரர்கள் மாநாட்டுக்குத் தலைமையேற்று பெரியார் ஆற்றிய உரையில்*

## காஞ்சிபுரத்தில் பெரியார் 145ஆம் பிறந்த நாள்





மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் 23.09.2023 அன்று காஞ்சிபுரத்தில் பொதுக் கூட்டம் நடந்தது. காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர் சி.நடராசன் தலைமையேற்றார். காஞ்சி மாவட்ட துணைச் செயலாளர் தீ. கோபாலகிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார்.

திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் செறிந்த கருத்துப் பொழிவாற்றினார்.

புதிய சிந்தனையாளன் ஆசிரியர்-மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் வாலாசா வல்லவன், மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் தி. துரை சித்தார்த்தன், மா.பெ.பொ.க. வேலூர் சா. குப்பன், தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் செயலாளர் காஞ்சி அமுதன், வி.சி.க. காஞ்சி மாநகர மா.செ. மதி ஆதவன், காஞ்சி மக்கள் மன்ற வழக்குரைஞர் மகா, மக்கள் தமிழகம் கட்சியின் பொ.செ. நா. செவ்வேள், திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் மதனகவி, இராணிப்பேட்டை மாவட்டச் செயலாளர் க.குப்புசாமி முதலானோர் கருத்துரையாற்றினர்.

மழைப்பொழிவிலும் கூட்டத்தில் உரையாற்றிய அனைவரும் செறிவான கருத்துகளைப் பொழிந்தனர். இறுதியில் தோழர் இரா. நாராயணமூர்த்தி நன்றி நவிலலுடன் கூட்டம் நிறைவடைந்தது.

மழையிலும் கூட்டத்தில் பங்கேற்றுச் சிறப்பித்த தி.வி.க. சென்னை மா.செ. உமாபதி மற்றும் தோழர்கள், இராணிப்பேட்டை, வேலூர், வாணியம்பாடி தோழர்களுக்கு நன்றி.

# உழைக்கும் மக்களுக்கு எதிரான

# சனாதனம்!



- வாலாசா வல்லவன்

**ச**னாதன தர்மத்தை நிலைக்கச் செய்ய வேண்டும் என்று தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர்.என். இரவி அடிக்கடி கூறி வருகிறார். சனாதன தருமம் என்றால் நிலையான தருமம் என்றைக்கும் மறையாத, அழிவுறாத தருமம் என்று தான் பொருள்படும்.

இன்றைய இந்து மதத்தின் பழைய பெயர்களே சனாதன மதம், வைதீக மதம், ஆரிய மதம் என்பவை ஆகும். ஆங்கிலேயர்கள் இந்து மதம் என்ற பெயரைக் கொடுத்தனர்.

காசி இந்துக் கல்லூரி பண்டிதர்கள் ஒன்றுகூடி சனாதன தர்மம் என்றால் என்ன என்பதை விளக்கிக் கூறும் வகையில் மாணவர்களுக்குப் பாடநூலாக 1903-இல் “Sanatana Dharma an Advanced Text Book of Hindu Religion and Ethics” என்ற பெயரில் ஆங்கிலத்தில் வெளியிட்டனர். 1905ஆம் ஆண்டில் நாராயண அய்யர் மொழிப்பெயர்ப்பில் தமிழில் வெளியிட்டனர்.

அந்த நூலில் விரிவாக சனாதன தருமம் என்பதற்கான விளக்கங்களை அளித்துள்ளனர். அதில் அவர்கள் கூறியுள்ள தாவது :

‘‘நான்கு வேதங்களை-ரிக், யசூர், சாமம், அதர்வணம்’’ ஆகியவற்றை வாழ்வியல் அடிப்படையாகக் கொண்டு வாழவேண்டும்.

ஸ்மிருதிகள் மநு, நாரதர், யக்ஞவல்கியர், பராசரர் எழுதிய இந்த நான்கு ஸ்மிருதிகளைத் தரும சாத்திர சட்ட நூல்களாக ஏற்றுக்கொண்டு அதில் விதிக்கப்பட்ட தருமங் களைக் (கட்டளைகளை) செயல்படுத்த வேண்டும்.

இராமாயணம், மகாபாரதம், உள்ளிட்ட இதிகாசங்களைக் கற்று அதன்படி வாழ்வியலை அமைத்துக் கொள்ள வேண்டும்.


பதினெட்டு புராணங்களையும் படித்து அதில் கூறப் பட்டுள்ள கருத்துகளை ஏற்றுக்கொண்டு வாழ்வதுடன் அக்கருத்துகளை மக்களிடையே பரப்ப வேண்டும். வேதத்தை என்றும் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும். இந்த தரும நெறிமுறைகளை என்றும் அழியாமல் தலைமுறை, தலைமுறையாகப் பாதுகாத்து வரவேண்டும்.

வேதத்தில் கூறப்பட்டுள்ள யாகத்தைச் செய்வது, அதாவது விலங்குகளைத் தீயிலிட்டுக் கொன்று இந்திரனுக்குப் படைத்ததாகக் கருதி உண்பது. சோமபானம் என்ற மது வகையை இறைவனுக்குப் படைத்துவிட்டு குடிப்பது. இது தான் வேதகால வாழ்வியல் முறையாகும்.

ரிக் வேதத்திலேயே பத்தாவது மண்டலத்தில் புருஷசூக்தா என்ற தலைப்பில் நால்வருணத்தை நிலைநாட்டிவிட்டனர். அதை நிலைநிறுத்துவதற்காகவே ஸ்மிருதிகளை இயற்றினர். இவையே சட்ட நூல்களாகக் கருதப்பட்டன.

ஆரியப் பார்ப்பனர்களின் உயிர்பலி யாகத்திற்கு எதிராகவும், நால்வருண பாகுபாட்டு முறைக்கு எதிராகவும் தான் புத்தர் தன் கருத்துகளை மக்களிடையே பரப்பி ஒரு புதிய சமூகத்தைப் படைத்தார். அசோகர் பவுத்த மதத்தை நாடு முழுவதும் பரப்பினார்.

அசோகனின் கொள்ளு பெயரன் பிருகரத்தரனை அவன் படையில் பணியாற்றி வந்த படைத்தலைவன் புஷ்யமித்தர சுங்கன் என்கிற பார்ப்பான் அரசனைக் கொன்றுவிட்டு தானே அரசன் என்று அறிவித்துக் கொண்டான். அவன் தான் கி.மு.185இல் முதன்முதலாக மநுநீதியைச் சட்ட



நூலாக நடைமுறைப்படுத்தியவன் என்று டாக்டர் அம்பேத்கர் எழுதியுள்ளார்.

புத்த பிக்குகளின் தலைகளை வெட்டிக் கொண்டு வருபவர்களுக்கு நூறு பொற்காசுகள் அளிக்கப்படும் என்று நாடு முழுவதும் அறிவித்தான். இப்படி வன்முறையின் மூலமாகத்தான் இந்தியாவில் புத்த மதம் வீழ்த்தப்பட்டது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆதிசங்கரர் இந்தியா முழுவதும் சென்று இந்து அரசர்களைக் கண்டு பேசி மீண்டும் சனாதன தருமத்தை நிலைநாட்டச் செய்தார். அவர் நிறுவிய சங்கர மடங்கள் அப்பணியை இன்றும் செய்து வருகின்றன.

நால்வருண தரும முறை என்னவென்றால் பிராமணன் உயர்ந்தவன்; வேதத்தை ஓதலும் ஓதுவித்தலும் அவன் தொழில் என்றும் சத்திரியன் அரசனாக இருப்பதும் நாட்டைக் காப்பதும், பார்ப்பனர்களை காப்பதும் அவன் கடமை என்பதும் வைசியன் செல்வத்தை உற்பத்தி செய்து பார்ப்பனர்களுக்குத் தானமாக அளிக்க வேண்டியது என்றும் நான்காவது வருணத்தைச் சேர்ந்த சூத்திரன் மேலே உள்ள மூன்று வருணத்தாருக்கும் சேவை செய்ய வேண்டும் என்பதற் காகவே படைக்கப்பட்டவன் என்று கூறி அவர்களை கடுமை யாக உழைக்கச் செய்தனர்.

இந்த மநு நீதியை இராமாயணம், மகாபாரதம், பகவத் கீதை உள்ளிட்ட ஆரியர்களின் புனித நூல்களின் வழியே பரப்பி வருகின்றனர்.

சனாதன தரும சாத்திரங்களின்படி சூத்திரர்களுக்கும் பெண்களுக்கும் கல்வி கற்கும் உரிமை மறுக்கப்பட்டது. ஆண்களைவிட பெண்கள் கீழானவர்கள். ஆண்களுக்குக் கட்டுப்பட்டு வாழவேண்டியவர்கள் என்று சாத்திரங்களின் மூலம் நிலைநாட்டினர்.

மநுநீதி சூத்திரர்களுக்கும், பெண்களுக்கும் எந்த உரிமை யையும் வழங்கவில்லை. வருணக் கலப்பு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக பெண்களுக்கு எட்டு வயதிற்குள் திருமணம் செய்ய வேண்டும் என மநு நீதி கட்டளை விதிக்கிறது. இதை மீறுபவர்களுக்குத் தண்டனைகளையும் அரசர்கள் மநுநீதியின்படி வழங்கியுள்ளனர்.

கணவனை இழந்த கைம்பெண்களுக்கு மறுமண உரிமை மறுக்கப்பட்டது. கணவன் இறந்தால் அவன் உடலை எரிக்கும் தீயில் மனைவியை தள்ளி சாகடிக்கச் செய்த ‘உடன்கட்டை ஏறல்’ என்ற வழக்கம் இந்தச் சனாதன தர்மத்தில், நீண்டகாலம் இருந்தது.

ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் சட்டங்களின் மூலம் இவற்றை ஒவ்வொன்றாக தடுத்து நிறுத்தினர். அனைவருக்குமான பொதுக் கல்வி முறையை 1835இல் கொண்டு வந்தனர்.

மெக்காலே சட்ட ஆணையத்தின் தலைவரான பிறகு 1860இல் இந்தியக் குற்றவியல் சட்டத்தையும் 1861இல் இந்தியத் தண்டனைச் சட்டத்தையும் உருவாக்கினார். அதுவரை மநுநீதியே நீதிமன்றங்களில் சட்ட நூலாக நடைமுறையில் இருந்து வந்தது.

1860இல் தான் பார்ப்பான் கொலையே செய்தாலும் அவனுக்கு மரண தண்டனை விதிக்கக்கூடாது என்ற மநுதர்மச் சட்டம் ஒழிக்கப்பட்டது.

ஒரு குலத்துக்கு ஒரு நீதியை வகுத்த மநு தர்மத்தை எரிக்க வேண்டும் என பெரியார் காங்கிரசு கட்சியில் இருக்கும்போதே 1922இல் பேசியுள்ளார். தொடர்ந்து மநுநீதியின் மோசடிகளை விளக்கிப் பேசி மக்களிடையே இருந்த உயர்வு தாழ்வுகளைக் களைந்து சமத்துவம் ஏற்பட தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார். சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படை இலட்சியம் மனிதரில் உயர்வு தாழ்வு இல்லை என்பதும் ஆணுக்கு உள்ள உரிமைகள் அனைத்தும் பெண்ணுக்கும் உண்டு என்பதுமாகும்.

இந்து சமூகத்தில் பட்டியல் சாதி மக்களைத் தீண்டாமை என்னும் சமூகக் கொடுமைக்கு ஆளாக்கி அம்மக்களை ஊருக்கு வெளியே குடியிருக்கச் செய்து மனித தன்மையற்ற முறையில் நடத்தப்படுவதற்கு காரணமாக இருந்தது இந்த மநு தர்மமே என்பதால் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் 1927 திசம்பர் 25ஆம் நாள் மகத் குளப் போராட்ட மாநாட்டில் சுமார் மூவாயிரம் பேர் முன்னிலையில் மநு நீதியை தீயிட்டு எரிக்கச் செய்தார். மனித சமத்துவத்துக்கு எதிரானதே சனாதன தருமம் அதை ஒழிக்க வேண்டும் என்று அண்ணல் அம்பேத்கர் அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார். இறுதியில் இந்து மதத்தை விட்டே இலட்சக்கணக்கான மக்களுடன் பௌத்த மதத்தில் இணைந்தார்.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் செப்டம்பர் இரண்டாம் நாள் சென்னை காமராசர் அரங்கில் சனாதன ஒழிப்பு மாநாடு நடத்தியது. அம்மாநாட்டில் உரையாற்றிய தமிழ்நாட்டரசின் இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி பேசும் போது,

“கணவனை இழந்த பெண்களை நெருப்பில் தள்ளி உடன்கட்டை ஏறவைத்தது. கைம்பெண்களுக்கு மொட்டை அடித்து வெள்ளைப் புடவை உடுத்தச் சொன்னது. குழந்தைத் திருமணங்களை நடத்தி வைத்தது. இதைத் தானே பெண் களுக்கு சனாதனம் செய்தது” என்று சரியாகவே கேட்டார்.

மலேரியா, டெங்கு, கொரோனா பரவலை ஏற்படுத்தும் கொசுக்களை ஒழிப்பதுபோல் சனாதன தர்மத்தை ஒழிக்க வேண்டும் என்றார்.

உதயநிதி பேசாததைப் பேசியதாக பா.ச.க. இணையப் பரப்புரைப் பிரிவு தலைவர் அமித் மால்வியா “மக்கள் தொகையில் 80 விழுக்காடு இருக்கக் கூடிய சனாதனிகளை இனப்படுகொலை செய்வதற்கான அழைப்பு” என்று அப்பட்ட மாக வன்முறையை உருவாக்கும் வகையில் உண்மைக்கு மாறாக ட்விட்டரில் பதிவிட்டிருந்தார்.

சனாதனத்தை இழிவுபடுத்துவதே 'இந்தியா' கூட்டணியின் பணி என்று பா.ச.க. தலைவர் ஜெ.பி. நட்டா பரப்புரை செய்து வருகிறார். தலைமை அமைச்சர் நரேந்திர மோடியே கூட சனாதனத்தை ஒழிக்கும் முயற்சியில் எதிர்க்கட்சிகளின் ''இந்தியா'' - கூட்டணி ஈடுபட்டுள்ளதாகப் பரப்புரைச் செய்து வருகிறார்.

அயோத்தி சாமியார் பரமான்ஸ் தாஸ் உதயநிதி தலையை வெட்டிக் கொண்டு வந்தால் ரூ.10 கோடி அளிக்கப்படும் என்று வெளிப்படையாக அறிவித்தார். இப்போது தொகையை ரூ.25 கோடியாக உயர்த்தி அறிவித்து உள்ளார். தமிழ் நாட்டினர் தவிர வேறு எவரும் சாமியாருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாட்டு அமைச்சர் உதயநிதி மீதும், சேகர் பாபு மீதும் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

சனாதன ஒழிப்பு மாநாடு நடத்திய தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினர் மீதும் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

பெரியாரைப் போல் சனாதனத்தின் கேடுகளை விளக்கிக் காட்டிட உச்சநீதிமன்றத்தை மேடையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மனித சமத்துவத்துக்கு, ஜனநாயகத்திற்கு உழைக்கும் மக்களுக்கு எதிரானப் பழமைவாத போக்குக் கொண்ட சனாதன தர்மத்தை வீழ்த்துவதற்கு மிகப்பெரிய அளவில் கலாச்சாரப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும். ❖

# பொது சிவில் சட்டம் தேவையா? கருத்தரங்கம்



பொது சிவில் சட்டம் தேவையா? என்ற தலைப்பில் கருத்தரங்கம் 18.8.2023 அன்று சென்னை, இராயப் பேட்டை, ஜானிஜான்கான் தெருவில் உள்ள மீட் அரங்கில் நடைபெற்றது. சுவடு சா. அகமது மன்சூர் தலைமைத் தாங்கினார். நல்லு. இரா. லிங்கம் முன்னிலை வகித்தார். பவாசமத்துவன் வரவேற்புரையாற்றினார். ராஜா முகமத் தொகுப்புரை ஆற்றினார். வாலாசா வல்லவன், தியாகு, நீதிபதி அரிபரந்தாமன் ஆகியோர் உரையாற்றினர். பீட்டர் பால்ராஜ் நன்றியுரையாற்றினார். சுவடு இணைய இதழ் மற்றும் இந்திய சமூக நீதி ஊடக மய்யமும் இணைந்து இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்தனர்.

# வேலூரில் பெரியார் 245ஆம் பிறந்தநாள்



17.9.23 அன்று வேலூரில் மா.பெ.பொ.க. தோழர்களும் ம.க.இ.க. தோழர்களும் இணைந்து தோழர் இராவணன் தலைமையில் பெரியாரின் சமத்துவம் மற்றும் வருணாசிரம-சனாதன- சாதி ஒழிப்பு முழக்கங்களுடன் அண்ணா கலையரங்கம் அருகில் இருந்து பெரியார் சிலை வரை ஊர்வலமாகச் சென்று பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர். பின்னர் சில தோழர்கள் 'இன்றையச் சூழலில் பெரியார் கொள்கை களின் தேவை பற்றியும் பெரியாரின் கொள்கைகளை வென்றெடுக்கப் பாடுபடவேண்டும் என்பது பற்றியும் மிகச் சுருக்கமாக உரையாற்றினர்.


# அம்பத்தூரில் பெரியார் படத்திறப்பு



அம்பத்தூரில் 17.9.2023 அன்று காலை 9 மணிக்கு இல.குமார் அவர்களின் இல்லத்தின் முன்பு பெரியார் படத்தை அ.வெ. நடராசன் திறந்து வைத்தார். வாலாசா வல்லவன், பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து சிறப்புரையாற்றி னார். செள.சுந்தரமூர்த்தி நிகழ்வை ஒருங்கிணைத்தார். அய்ம்பதுக்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

# நாங்குநேரி தலித் மாணவர் மீது கொடுந்தாக்குதல்

# சாதி ஒழிப்பே தீண்டாமைக்குத் தீர்வு!



**க. முகிலன்**

“கல்வியும் அதிகாரமும் மறுக்கப்பட்டமையே ஒடுக்கப் பட்ட வகுப்பினரின் அடிமை நிலைக்குக் காரணம்” என்று புரட்சியாளர் அம்பேத்கர் கூறினார். அரசமைப்புச் சட்டத்தால் சனநாயகக் குடியரசு என்று அறிவிக்கப்பட்டுள்ள சுதந்திர இந்தியாவில் ஒடுக்கப்பட்ட வகுப்பினர்-குறிப்பாக தீண்டத் தகாதவர்கள் என்று சாதி இந்துக்களால் கருதப்படும் தலித்துகள் தங்கள் அடிமை நிலையிலிருந்து எந்த அளவுக்கு விடுதலை பெற்றுள்ளனர் என்பது வினாக் குறியாகவே நிற்கிறது.

தீண்டாமையின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று அம்பேத்கர்-சாதி அமைப்பு குறித்த ஈடுஇணையற்ற ஆய்வாளர் என்ற முறையில் 1945இல் “காந்தியும் காங்கிரசும் தீண்டப் படாத வகுப்பு மக்களுக்குச் செய்தது என்ன?” என்ற நூலில் பின்வருமாறு பதிவு செய்துள்ளார் :

“தீண்டாமை மறைந்து போய்க் கொண்டிருக்கிறது என்ற வாதத்தை முன்வைக்கிறார்கள். இந்த வாதம் ஒரு வாதமே அல்ல. ‘என்னைத் தொடாதே’ என்ற முறையிலான தீண்டாமைக்கும் சமூகப் பாகுபாட்டில் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் மனப்போக்கு என்ற முறையிலான தீண்டா மைக்கும் இடையில் இவர்கள் வேறுபடுத்திப் பார்ப்பதாகத் தெரியவில்லை. இரண்டும் அறவே வெவ்வேறானவை. ‘என்னைத் தொடாதே’ என்ற முறையிலான தீண்டாமை நகரங்களில் பையப்பைய மறைந்து கொண்டிருக்கலாம் என்றாலும் குறிப்பிடத்தக்க அளவுக்கு இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா என்பது எனக்கு அய்யமே! ஆனால் தீண்டப்படாத மக்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்ட வேண்டும் என்ற அளவில் இந்துக்களிடம் ஒரு மனப்போக்காக இருக் கின்ற தீண்டாமையானது கற்பனைக்கு எட்டக்கூடிய காலத்திற்குள் நகரங்களிலோ கிராமங்களிலோ மறைந்து போகாது என்று நான் உறுதியாகக் கருதுகிறேன்.”

அம்பேத்கர் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருப்பதுபோல், சுதந்தரம் பெற்று 75 ஆண்டுகளுக்குப் பின்னும் - நரேந்திர மோடியின் சொற்களில் கூறுவதானால் ‘அமிர்த காலத்தில்’, தலித்துகளிடம் பாகுபாடு காட்டும் மனப்போக்கு சாதி இந்துக் களிடம் நீடித்து நிற்கிறது. இதனால்தான் நாள்தோறும் இந்தியா முழுவதும் தலித்துகள் மீதான தாக்குதல்கள் பல்வேறு வடிவங்களில் நடந்து கொண்டிருக்கின்றன.

பள்ளிகள் முதல் பல்கலைக்கழகங்கள் வரை தலித் மாணவர்கள் ஆசிரியர்களாலும் உடன் பயிலும் மாணவர் களாலும் துன்புறுத்தல்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் ஆளாக்கப்படுகின்றனர், அய்தராபாத்தில் மத்திய பல்கலைக் கழகத்தில் தலித் வகுப்பைச் சார்ந்த முனைவர் பட்ட ஆய்வு மாணவரான ரோகித் வெமுலா ஆர்.எஸ்.எஸ்.இன் மாணவர் அமைப்பான அகில பாரதிய வித்தியார்த்தி பரிசத் மாணவர் களை எதிர்த்தார் என்பதற்காக பல்கலைக்கழக நிருவாகத்தால் பல தொல்லைகளுக்குள்ளாக்கப்பட்டதால் 2016 சனவரியில் தற்கொலை செய்துகொண்டார். தீண்டாமை அடிப்படையில் தலித் மாணவர்கள் மீது நிகழ்த்தப்படும் வன்கொடுமைகள் தொடர்ந்து நடக்கின்றன.



இத்தன்மையில் திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரியில் கடந்த ஆகத்து 9ஆம் நாள் இரவு பதினொன்றாம் வகுப்பு படிக்கும் சின்னதுரை என்கிற தலித் மாணவர் உடன் படிக்கும் தேவர் சாதியைச் சார்ந்த மூன்று மாணவர்களால் அரிவாளால் கடுமையாகத் தாக்கப்பட்டார். தடுக்க முயன்ற சின்னதுரையின் தங்கை செல்வியும் தாக்கப்பட்டார். செல்வி அதே பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படிக்கிறார்.

நாங்குனேரியில் அரசு மேனிலைப் பள்ளி உள்ளது. சில ஆண்டுகளுக்கு முன் இப்பள்ளியில் 1500 மாணவர்கள் படித்தனர். சாதிப் பகையாலும் பிற காரணங்களாலும் தற்போது 114 மாணவர்களே பயில்கின்றனர். இவர்களில் 94 பேர் பிற்படுத்தப்பட்ட சீர் மரபினர்; 3 பேர் தலித்துகள். இப்பள்ளியில் படித்த மாணவர்கள் நாங்குனேரியைச் சுற்றியுள்ள ஊர்களில் இருக்கும் பள்ளிகளில் சேர்ந்தனர். சின்னதுரையின் தாய் கணவனால் கைவிடப்பட்டவர். அங்கன்வாடியில் அன்றாடக் கூலிக்கு வேலை செய்கிறார். நான்கு ஆண்டுகளுக்குமுன் தன் மகனையும் மகளையும் நான்குனேரியிலிருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ள வள்ளியூரில் அரசு உதவி பெறும் மேனிலைப் பள்ளியில் சேர்த்தார். சின்னதுரையைத் தாக்கிய

மாணவர்களும் இதே பள்ளியில் படிக்கின்றனர். நாங்கு னேரியிலிருந்து பேருந்தில் ஒன்றாகவே பயணம் செய்கின்றனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக சின்னதுரையை, தேவர் சாதியைச் சார்ந்த இம்மூன்று மாணவர்கள் பேருந்திலும், பள்ளியிலும் இழிவாக நடத்தி வந்துள்ளனர். சின்னதுரையை சிகரெட், தின்பண்டங்கள் முதலானவற்றைக் கடையில் வாங்கி வருமாறு கட்டாயப்படுத்தி உள்ளனர். மறுத்த போது அச்சுறுத்தி அடித்துள்ளனர். இதனால் பெரும் மனஉளைச் சலுக்கு உள்ளான சின்னதுரை பள்ளிக்குச் செல்லாமல் நின்றுவிட்டான்.

சின்னதுரை நல்லொழுக்கமும் படிப்பில் ஆர்வமும் உடையவன். அதனால் தலைமை ஆசிரியர் சின்னதுரை பள்ளிக்கு ஏன் வரவில்லை என்று அவன் தாய்க்குத் தகவல் அனுப்பினார். சின்னதுரையை அழைத்துக் கொண்டு அவன் தாய் தலைமை ஆசிரியரிடம் சென்றார். மேல்சாதி மாணவர் மூவரின் துன்புறுத்தலே பள்ளிக்கு வர அஞ்சுவதற்குக் காரணம் என்று தலைமை ஆசிரியரிடம் சின்னதுரை கூறினான். தலைமை ஆசிரியர் அம்மூன்று மாணவர்களைக் கண்டித்தார். அன்று மாலை பள்ளி முடிந்ததும் அம்மூன்று மாணவர்கள் சின்னதுரையிடம் தங்களைப் பற்றி தலைமை ஆசிரியரிடம் கூறியதற்கான விளைவைச் சந்திப்பாய் என்ற மிரட்டினர்.

அன்றிரவு அம்மூன்று மாணவர்கள் தங்கள் அகவை ஒத்த மூன்று பேருடன் (இந்த 6 பேரும் 18 அகவைக்குக் கீழானவர்கள்) இருசக்கர வாகனத்தில் தலித்துகள் குடியிருக்கும் தெருவுக்குச் சென்றனர். சின்னதுரையின் வீட்டிற்குள் நுழைந்து அரிவாளால் தாக்கினர். தன் கழுத்துக்கு வைக்கப்பட்ட குறியை சின்னதுரை கைகளால் தடுத்ததால் உயிர் பிழைத்தான். தாய் வீட்டில் இல்லாத நிலையில் தங்கை தடுக்க வந்ததால் அவளையும் அரிவாளால் தாக்கினர். அண்ணன் தங்கையின் அலறல் ஓசை கேட்டு அக்கம்பக்கத்தினர் ஓடிவருவதைக் கண்ட அம்மூன்று மாணவர்கள் வாகனத்தில் தெருவில் காத்துக்கொண்டிருந்த தன் கூட்டாளிகளுடன் தப்பி ஓடினர். சின்னதுரையும் செல்வியும் குருதி வெள்ளத்தில் மயங்கிக் கிடந்தனர். அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சின்னதுரையின் உள்ளங்கை கடுமையாகக் கிழிக்கப்பட்டுள்ளது.

சாதி வெறியால் நிகழ்த்தப்பட்ட இக்கொடிய செயல் ஊடகங்களில் முதன்மை செய்தியானது. அமைச்சர்கள் மருத்துவமனையில் சின்னதுரையையும் செல்வியையும் சந்தித்து ஆறுதல் கூறினர். முதலமைச்சர் சின்னதுரையின் தாயிடம் தொலைபேசியில் பேசினார். உரிய மருத்துவமும் பாதுகாப்பும் அளிக்கப்படும் என்று உறுதி கூறினார். தாக்கிய மாணவர்கள் மூவரும் அவர்களுக்குத் துணை செய்த மற்ற மூவரும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் ஆறு பேரும் நாங்குனேரியிலிருந்து தப்பிச் செல்ல உதவி செய்த இருபது அகவை இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டார். இவர்கள் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் உள்ளிட்ட பல பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.



தென் மாவட்டங்களில் பள்ளிகளில் சாதிப் பகைமையும், மோதலும் கடந்த சில ஆண்டுகளாகத் தொடர் நிகழ்வாக இருக்கின்றன, நாங்குனேரி கொடுஞ் செயலையொட்டி, தமிழ்நாட்டு அரசு ஓய்வுபெற்ற உயர்நீதிமன்றத்தின் நீதிபதி சந்துரு தலைமையில் ஒரு நபர் குழுவை அமைத்துள்ளது. பள்ளிகளில் மாணவர்களிடையே சாதி உணர்வு வளர் வதையும், மோதல்கள் நிகழ்வதையும் தடுப்பதற்கான வழிமுறைகளைக் கூறுமாறு நீதிபதி சந்துரு குழுவிடம் தமிழ்நாட்டு அரசு கேட்டுள்ளது.

**தலித் மாணவர் சின்னதுரையைத் தாக்கிய அம் மூன்று மாணவர்களின் சாதிவெறி மனப்போக்கிற்கு அவர்களை மட்டுமே பொறுப்பாக்க முடியுமா? அம் மாணவர்களின் பெற்றோர், உறவினர், பிறந்த சாதி - ஒட்டுமொத்த சாதியக் கட்டமைப்பும் இக்கொடுஞ் செயலுக்குப் பொறுப்பேற்க வேண்டுமல்லவா!**

சாதி என்பது தன்னளவில் ஒரு மூடிய சமூகமாகவே இருக்கிறது (A caste is an enclosed class) என்றும் பிறப்பின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வைக் கற்பித்து அதையே அலகாகக் கொண்டு ஏணிப்படிகள் போல் மேல்-கீழ் என்கிற வரிசையில் (graded inequality) சாதிகள் அடுக்கமைக் கப்பட்டுள்ளன என்றும் மேதை அம்பேத்கர் கூறியிருப்பதை எந்தவொரு சாதிச் சிக்கலையும் ஆராய்வதற்கு அளவுகோலாகக் கொள்ள வேண்டும்.

1920 முதல் 1937 வரை நீடித்த நீதிக்கட்சி ஆட்சியில் பார்ப்பனர் அல்லாத மக்களுக்குக் கிடைத்த கல்வி வாய்ப்பு, அரசு வேலையில் இடஒதுக்கீடு - அய்ம்பது ஆண்டுகளுக்கு

மேலாக தந்தை பெரியார் சாதி அமைப்புக்கும், பார்ப்பன ஆதிக்கத்திற்கும் சாத்திர, இதிகாச, புராணங்களுக்கும் மூடநம்பிக்கைகளுக்கும் எதிராக மேற்கொண்ட தீவிரப் பிரச்சாரம், நடத்திய போராட்டங்கள் - தி.மு.க. 1967 வரை பரந்துபட்ட வெகுமக்களிடையே பரப்பிய பகுத்தறிவுக் கருத்துகள் முதலானவற்றால் தமிழ்நாட்டில் அரசியலில் பார்ப்பனர் ஆதிக்கம் அடியோடு வீழ்ந்தது; தம் பெயருக்குப் பின்னால் சாதிப் பட்டத்தைச் சேர்க்கும் வழக்கம் ஒழிந்தது; கல்லூரிகளில் உடன் பயிலும் மாணவர்களின் சாதி என்னவென்றே தெரியாமல் பழகி, பட்டம் பெறும் சமத்துவ நிலை ஏற்பட்டது.

ஆனால் கடந்த முப்பது, நாற்பது ஆண்டுகளில் வெளிப் படையாக சாதி பாராட்டாத - சமத்துவத்தை நோக்கிய வளர்ச்சிப் போக்கில் தொடர்ந்து பின்னடைவு ஏற்பட்டு வருகிறது. இதற்கு பல்வேறு சமூக, அரசியல், பொருளியல் காரணிகள் உள்ளன.

தி.மு.க. ஆட்சிக்கு வந்தபின் பிற்படுத்தப்பட்டவர்களுக் கான இடஒதுக்கீடு 25 விழுக்காட்டிலிருந்து 31 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. 1980இல் எம்.ஜி.ஆர். இதை 50 விழுக்காடாக உயர்த்தினார். 1967 தேர்தலில் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த சாதியினர் பெருமளவில் அரசியல் அதிகாரத்திற்கு வந்தனர். இத்தகைய சமூக-அரசியல் பின்னணியில் தத்தம் சாதிக்கு அதிக இடஒதுக்கீடு பெறுவது என்கிற கோரிக்கையை முன்வைத்து புதிய புதிய சாதிச் சங்கங்கள் தோன்றின. அதற்கு முன்னிருந்த சாதிச் சங்கங்கள் மேலும் தம்மை வலிமைப்படுத்திக் கொண்டன. சாதிச் சங்கங்கள் மாவட்ட மாநாடுகள், மாநில மாநாடுகள் நடத்தின. தம் சாதியினரிடம் நிதி திரட்டின; சாதி மாநாடுகளுக்குத் தம் சாதியினரை அணி திரட்டினர். இதனால் தன் சாதி - தன்னுடைய சாதிக்காரன் என்கிற உணர்வும் பற்றும் மேலோங்கியது. சில சாதிச் சங்கங்கள் தமக்கென தனியாக அரசியல் கட்சியைத் தொடங்கின. இதனால் சாதிகளுக்கிடையே நல்லிணக்கம் குலைந்தது; வெறுப்பும் பகையும் வளர்ந்தது.

1980 முதல் ஆர்.எஸ்.எஸ்.இன் சங் பரிவாரங்களும் பா.ச.க.வும் அயோத்தியில் பாபர் மசூதி உள்ள இடத்தில் இராமர் கோயில் கட்ட வேண்டும் என்பதை முன்னிறுத்தி இந்தியா முழுவதும் பல்வேறு வழிகளில் இந்துமத வெறியை எரிதழலாய் மூட்டின. இசுலாமியர்களை இந்நாட்டின் பகை வர்களாகக் காட்டின. மதச்சார்பற்ற மனப்போக்கு மங்கி, இந்துமத சனாதனப் பழைமை வாதம் மேலோங்கியது. இதனால் பொது இடங்களில் பிள்ளையார் சிலைகளை வைத்து, ஆரவாரமாக ஊர்வலம் நடத்துவது, கோயில் திருவிழாக்களை ஆடம்பரமாக நடத்துவது போன்ற செயல்பாடுகள் மிகுந்தன. இந்து மதப் பழமை வாதம் சாதிகளிடையிலான முரண்பாடுகளை மேலும் கூர்மைப் படுத்தியது. மூடநம்பிக்கைகள் முட்புதராய் வளர்ந்தன.

மதநம்பிக்கையைக் குறிக்கும் தன்மையில் கைகளில் வண்ணக் கயிறுகள் கட்டும் பழக்கம் 1990க்குப்பின் தமிழ் நாட்டில் பரவியது. அ.தி.மு.க.வின் தலைவர்கள் பா.ச.க. தலைவர்களைவிட நெற்றியில் பலவகையான பொட்டு களுடனும் கைகளில் வண்ணவண்ணக் கயிறுகளுடனும் உலாவந்து கொண்டிருக்கின்றனர். தென் மாவட்டங்களில் சமயக் கயிறு சாதியின் அடையாளக் கயிறாக மாறியது. அகவையில் மூத்தோரிடம் இருந்த சாதிப் பற்றும், சாதிப் பெருமிதமும் இப்போது இளைஞர்களிடையே குடியேறி யுள்ளது. தன் சொந்த சாதியில் செல்வாக்கு பெற்றால்தான் குறுகிய காலத்தில் நல்ல வருவாய் வழங்கும் தொழிலாக உருவெடுத்துள்ள அரசியலில் ஊராட்சி மன்ற உறுப்பினர் முதல் சட்டமன்ற உறுப்பினர் வரையிலான பதவிகளை அடைய முடியும். அடியாட்கள் படையும் ஊழல் செய்து குவித்த பெருஞ் செல்வமும் இல்லாமல் அரசியலில் நிலைத்து நிற்க முடியாது. அதனால் சாதி வன்முறையும் அரசியல் வன் முறையும் பின்னிப்பிணைந்து நிற்கின்றன.

**"சாதி அமைப்பை அழிக்காமல் தீண்டாமையை ஒழித்துவிடலாம் என்று நம்புவது வீணானது. சாதியும் தீண்டாமையும் வெவ்வேறானவை என்ற கருதுவது முற்றிலும் தவறானது. ஒன்றைவிட்டு மற்றொன்றைப் பிரிக்க முடியாது. சாதி அமைப்பின் நீட்சியே தீண்டாமை. சாதியும் தீண்டாமையும் பிரிந்து நிற்காது. இரண்டும் இணைந்தே நிற்கும்; இணைந்தே வீழும்" என்று அம்பேத்கர் சாதிக்கும் தீண்டாமைக்குமான பிணைப்பைத் தெளிவுபடுத்தியுள்ளார்.**

நாங்குனேரியில் தலித் மாணவர் சின்னதுரை கொடு மையாகத் தாக்கப்பட்டமை, வேங்கைவயலில் தலித்துகளுக் கான குடிநீர்த் தொட்டியில் மலம் கலந்தமை போன்ற தலித்துகளுக்கு எதிரான வன்கொடுமைகள் நிகழும் போது மட்டும் பலரும் கண்டிக்கின்றனர். இக்கொடுஞ் செயல்களுக்கு ஆதாரமாக விளங்கும் சாதியக் கட்டமைப்பை ஒழிக்க வேண்டும் என்று பெரியார் இயக்கத்தினர் தவிர மற்றவர்கள் பேசுவதில்லை. இடதுசாரிகள்கூட தீண்டாமை ஒழிப்பில் காட்டும் முனைப்பைச் சாதி ஒழிப்பில் காட்டுவதில்லை. தலித் இளைஞர்கள் இளவரசன், கோகுல்ராஜ், சங்கர் போன்ற வர்கள் ஆணவப் படுகொலை செய்யப்பட்ட போது தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய திராவிட அரசியல் கட்சிகள் இக்கொலை களை வெறும் குற்றச் செயல்களாக மட்டுமே பார்த்தன. சாதி ஒழிப்பு குறித்து எதுவும் பேசவில்லை.

தீரன் சின்னமலை பேரவைத் தலைவர் இளைஞர் யுவராஜ் தன் சாதி இளைஞர்களை ஆணோ, பெண்ணோ வேறு சாதியினரைக் காதலிக்கவோ, திருமணம் செய்து கொள்ளவோ கூடாது என்று தீவிரமாக பரப்புரை செய்து கொண்டு இருந்தார். இந்த யுவராஜ் தன் சாதி இளைஞர் களுடன் சேர்ந்து 2005இல் கோகுல்ராஜ் என்கிற தலித் இளைஞரை ஆணவப் படுகொலை செய்தார். காவல் துறையால் தேடப்படும் குற்றவாளியாக இருந்த நிலையிலும் ஒரு இளவரசன் போல் தன் சாதியினரின் பாதுகாப்பில் உலா வந்து கொண்டு, வலையொளிகளில் நேர்காணல் கொடுத்துக்

கொண்டிருந்தார். முற்போக்குச் சிந்தனை கொண்ட வழக்கு ரைஞர்கள், நீதிபதிகள் காட்டிய தனி அக்கறை காரணமாக நீண்ட சட்டப் போராட்டத்திற்குப்பின் யுவராசுக்கு வாழ்நாள் தண்டனை விதிக்கப்பட்டது.

தீரன் சின்னமலை போன்று ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டு வீரச்சாவு அடைந்தவர்களை அவர்கள் பிறந்த சாதிச் சிமிழுக்குள் அடைக்க முயலும் போக்கு வளர்ந்து வருகிறது. வ.உ.சி., திரு.வி.க., பாரதிதாசன் போன்றவர்களும் சாதித் தலைவர்களாகக் கொண்டாடப்படுகின்றனர். இப்போக்கு சாதிகளுக்கு இடையிலான பிளவை மேலும் விரிவுபடுத்து கிறது. அமைச்சர்கள் சாதிச் சங்க மாநாடுகளில் கலந்து கொள்ளும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

தீண்டாமையைக் கடைப்பிடிப்பது தண்டனைக்குரிய குற்றம் என்று அரசமைப்புச் சட்டத்தில் எழுதப்பட்டுள்ளது. வன்கொடுமைத் தடுப்புச் சட்டமும் இயற்றப்பட்டுள்ளது. ஆயினும் தலித்துகள் மீதான கொடுமைகள் இந்தியா முழுவதும் நடந்துகொண்டே இருக்கின்றன. அம்பேத்கர் குறிப்பிடுவது போல தீண்டாமைக் காரணமாகப் பாகுபாடு காட்டும் சாதி இந்துக்களின் மனநிலையில் - எண்ணத்தில் மாற்றம் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

**வாக்கு அரசியலைக் கடந்து முற்போக்கு இயக்கங் கள் மக்களிடையே தீவிரமாகப் பரப்புரையும், செயல் பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும். அகமண முறை நீடிக்கின்ற வரையில் சாதி அமைப்பும் தீண்டா மையும் இருக்கும். ஆண், பெண் அனைவருக்கும் நல்ல கல்வியும், வேலை வாய்ப்பும், வாழ்வாதார உறுதிப் பாடும் ஏற்படும் போது சாதி மறுப்பு திருமணங்கள் இயல்பான முறையில் அதிகமாகும். பள்ளி, கல்லூரி களில் சாதி குறித்த வரலாற்று வழிப்பட்ட அறிவியல் பார்வையை மாணவர்கள் பெறும் வகையில் பாடங்கள் இருக்க வேண்டும் என்பது முதன்மையாகும். கிட்டத் தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளாக இருந்துவரும் சாதி அமைப்பைத் தகர்க்காமல் இந்தியாவில் உண் மையான சனநாயகமோ, சமத்துவமோ, சகோதரத்து வமோ, சமஉரிமையோ ஏற்படாது.**

“எந்தப் பக்கம் திரும்பினாலும் உங்கள் பாதையின் குறுக்கே சாதி எனும் பூதம் வழி மறித்துக் குறுக்கே நிற்கும். நீங்கள் அதைக் கொல்லாத வரையில் அரசியல் சீர்திருத் தத்தையோ, பொருளியல் சீர்திருத்தத்தையோ அடைய முடியாது.” - டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்

“தீண்டாமையை ஒழிக்க வேண்டியது பிராமணரல் லாதாருக்கு மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் தீண்டாதாரின் முன்னேற்றந்தான் பிராமணரல்லாதாரின் முன்னேற்றமாகும். தீண்டாதாரின் துன்பந்தான் பிராமண ரல்லாதாரின் துன்பமாகும். தீண்டாமை ஒழிவதன் மூலமாய்த் தான் பிராமணரல்லாதார் கடைத்தேற முடியும்” (1925 நவம்பரில் காஞ்சிபுரத்தில் நடந்த காங்கிரசு மாநாட்டில் பெரியார் ஈ.வெ.ரா.) ❖

# வாழ்வுரிமைக் கருத்தரங்கம்



பகிர்வு புலனக் குழு சென்ற மூன்றாண்டுகளாக வாரந்தோறும் நூல் விமரிசனக் கூட்டங்களை இணைய வழியில் நடத்திக்கொண்டிருக்கிறது. இக்குழுவின் சார்பில் நமது மானுடக் கடமைகளை நினைவுபடுத்தும் நோக்கில் 30.09.2023 அன்று சேலம் ஆத்தூர் காட்டுக் கொட்டாய் பகுதியில் முனைவர் மு.முருகேசன் இல்லத்தில் வாழ்வுரிமை கருத்தரங்கு நடைபெற்றது. இதில் மாணவர்களும் ஆசிரியர் களும் தோழர்களும் ஆர்வளர்களும் பங்கேற்றுப் பயனடைந் தனர்.

இக்கருத்தரங்கினை நல்லாசிரியர் முத்துக்குமரன் தலைமை ஏற்று நடத்தினார்.

பகிர்வுத் தோழமையின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் லோ.தீனா எழிலரசி வரவேற்புரையாற்றினார்.

மனித வாழ்வியலுக்குத் தேவை சனாதனமா? சனநாயகமா? என்ற பொருண்மையில் தோழர் வாலாசா வல்லவன் ஆசிரியர் புதிய சிந்தனையாளன் இதழ் கருத்துரையாற்றினார். அவருடைய உரை சனாதனம் குறித்த அடிப்படைப் புரிதலை விளக்குவதாக அமைந்தது. மணிப்பூரில் நடப்பது என்ன என்னும் பொருண்மையில் தாய்த்தமிழ் மன்றத் தலைவர் பழ. ராஜேந்திரபிரசாத் கருத்துரையாற்றினார்.

தோழர் காளி. தங்கதுரை தமிழ்ப் பண்பாட்டில் ஆரியத் தாக்கம் என்னும் பொருண்மையில் கருத்துரையாற்றினார்.

பகிர்வுத் தோழமையைச் சார்ந்த தமிழாசிரியர்கள் திரு தனக்கோட்டி, மு.ராமன், பெ.செல்வம் ஆகியோர் கருத்தரங்கப் பொருண்மை குறித்து உரையாற்றினர்.

முனைவர் மு.முருகேசன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

மந்திரமல்ல தந்திரமே என்ற செயல் விளக்க நிகழ்ச்சி ஆத்தூர் மகேந்திரன் அவர்களால் நடத்தப்பட்டது. நிகழ்ச்சியின் இடையிடையே விழிப்புணர்வு பாடல்கள் பாடப்பட்டன.

நிகழ்ச்சியின் இறுதியில் முனைவர் ஏ. வெங்கடேசன் நன்றியுரையாற்றினார்.

# இந்தியாவை பாரதம் என்று பெயர் மாற்றுவது இந்துத்துவச் சூழ்ச்சி!



வாலாசா வல்லவன்

அண்மையில் நடைபெற்ற ஜி.20 நாடுகள் மாநாட்டில் இந்தியாவின் குடிஅரசுத் தலைவர் என்பதை பாரதத்தின் குடிஅரசுத் தலைவர் என்று அழைப்பிதழில் ஒன்றிய அரசு அச்சிட்டிருந்தது.

இந்தியா என்கிற பெயர் அன்னியர்களால் நம் நாட்டிற்குச் சூட்டப்பட்ட பெயர்; அது நமக்கு இழிவைத் தருவது. நமது நாட்டின் பழைய கால பெயரான பாரதம் என்பதையே நம் நாட்டின் பெயராக மாற்ற வேண்டும் என்பது தீவிர இந்துத்வா உணர்வாளர்களின் கோரிக்கையாகும்.

1921இல் மறைவுற்ற சி. சுப்பிரமணிய பாரதியார் இந்த நாட்டிற்குப் பாரதம் என்ற பெயரைச் சூட்ட வேண்டும் என்று அப்போதே கூறிச் சென்றுள்ளார்.

''பாரதம் பரதன் நிலைநாட்டியது. இந்தப் பரதன் துஷ்யந்தராஜாவின் மகன், இமயமலை முதல் கன்னியா குமரி வரையிலுள்ள நமது நாட்டை இவன் ஒன்றுசேர்த்து அதன் மிசை முதலாவது சக்ராதி பத்தியம் (ஒற்றை ஆட்சி) ஏற்படுத்திய படியால் இந்த நாட்டிற்குப் பாரத தேசம் என்று பெயர் உண்டாயிற்று'' (பாரதியார் கட்டுரைகள். ப.53).

அப்படி ஒரு அரசன் எந்தக் காலத்திலும் இந்தியா முழுவதையும் ஒற்றை ஆட்சியின்கீழ் கொண்டு வந்து ஆட்சி நடத்தியதாக எந்த வரலாற்று நூலிலும் இல்லை. மகாபாரத கதையில் கூட 56 தேசங்கள் இருந்ததாகத்தான் இருந்தது.

மறைந்த காஞ்சி சங்கராச்சாரி சந்திரசேகரனின் சொற் பொழிவுகளைத் திரட்டி வானதி பதிப்பகம் ஏழு தொகுதிகளாக 'தெய்வத்தின் குரல்' என்ற பெயரில் வெளியிட்டுள்ளனர். அதில் அவர் மறந்தும்கூட இந்தியா என்கிற பெயரை பயன் படுத்தவில்லை. பாரதம் என்ற பெயரைத்தான் பயன்படுத்தி உள்ளார்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் குரு. எம்.எஸ். கோல்வால் கரின் சிந்தனைக் கொத்து (Bunch of Thoughts) என்ற நூலில் இந்தியா என்பதற்கு மாற்றாக பாரதம் என்ற பெயரைப் பயன்படுத்தி உள்ளார். இந்நாட்டிற்கு பாரத் வர்ஷ என்ற பெயரைச் சூட்ட வேண்டுகிறார்.

இந்திய அரசமைப்புச் சட்டம் எழுதுவதற்காக உருவாக் கப்பட்ட இந்திய அரசியல் நிர்ணய அவையில் இந்த நாட்டிற்கு பெயர் வைப்பது தொடர்பான விவாதங்கள் 1948ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம் நாள் நடைபெற்றது.

அரசு அமைப்புச் சட்ட முதல் வரைவில் ''இந்தியா'' என்ற பெயர் மட்டுமே இடம்பெற்றிருந்தது.

பேராசிரியர் சிப்பன்லால் சக்ஸ்சேனா என்ற உறுப்பினர் இந்தியாவிற்கு மாற்றாக ''பாரதம்'' என்ற பெயரை முன் மொழிந்தார். மேலும் அவர் பாரத நாட்டின் தேசிய கீதமாக ''வந்தே மாதரம்'' என்ற பாடல் இடம்பெறவேண்டும் என்னும் திருத்தம் கொண்டு வந்தார்.

பேராசிரியர் கே.டி. ஷா என்ற உறுப்பினர் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் முதலாவது கூறில் ஒரு திருத்தத்தை கொண்டு வந்தார்.

"India shall be a Secular, Federal Socialist Union of States"

இந்தியா மதச்சார்பற்ற கூட்டாட்சி; சோசலிச மாநிலங் களின் ஒன்றியம் என்பது அவரது திருத்தமாகும்.

மயூப் அலிபாய் சாய்ப் பகதூர் என்ற உறுப்பினர் Union என்ற சொல்லுக்கு மாற்றாக Federation என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்ற திருத்தத்தை முன்மொழிந் தார். அரசியல் அமைப்புச் சட்டத்தின் முதலாவது கூறுக்கான அனைத்து திருத்தங்களையும் டாக்டர் அம்பேத்கர் நிராகரித்தார்.

இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம் என்றே 15.11.1948 அன்று முடிவு செய்யப்பட்டது. (அரசியல் நிர்ணய அவை விவாதங்கள் தொகுதி ஏழு)

அரசமைப்பு அவையில் மீண்டும் 18.9.1949இல் இது தொடர்பான விவாதங்கள் நடைபெற்றன.

எச்.வி. காமத் என்ற உறுப்பினர் பல்வேறு உறுப்பினர் கள் கொண்டுவந்த திருத்தங்களை எடுத்துக்காட்டினார். பாரத், இந்துஸ்தான் இண்ட், பாரத் பூமி அல்லது பாரத் வர்ஷ் ஆகிய பெயர்கள் முன்மொழியப்பட்டதைக் கூறிவிட்டு துஷ்யந்தனுக்கும் சகுந்தலைக்கும் பிறந்த பரதன் என்ற அரசன் மற்ற அரசர்களை அடக்கி இந்தியாவை ஒரே



குடையின்கீழ் ஆட்சி செய்தான். அந்தக் காலம் முதலே பரதக் கண்டம் என்ற பெயர் வழங்கி வருகிறது என்று கூறினார்.

எனவே பாரத் என்ற பெயரைச் சூட்டுமாறு திருத்தம் கொண்டு வந்தார்.

சேத் கோவிந்ததாஸ் என்ற மற்றொரு உறுப்பினர் இந்தியா அதாவது பாரதம் என்பது சரியல்ல. பாரதம் என்ற பெயர் மட்டுமே சரியானது என்றார். மேலும் அவர் வேதங்கள், உபநிடதங்கள், பிராமணங்கள், மகாபாரதம் போன்ற பழைய புனித நூல்களில் பாரதம் என்ற பெயர் மட்டுமே உள்ளது. விஷ்ணு புராணத்திலும், பிரம்ம புராணத்திலும் பாரதம் என்ற பெயர் உள்ளது என்றார்.

சீனப் பயணி யுவான் சுவாங் இந்த நாட்டை குறிப்பிட பாரத் என்ற பெயரையே பயன்படுத்தியுள்ளார். மகாத்மா காந்தி அவர்கள் ‘‘பாரத் மாதாகி ஜே’’ என்ற முழக்கத்தை முன்வைத்தார் என்று கூறி எனவே பாரதம் என்ற பெயரை மட்டுமே வைக்க வேண்டும் என்றார். இவருக்கு ஆதரவாக இருந்தவரும் இவரை நீண்டநேரம் பேச அனுமதித்தவரும் அரசமைப்பு அவையின் தலைவரான இராசேந்திர பிரசாத் ஆவார்.

கமலாபதி திரிவேதி என்ற உறுப்பினர் ஆயிரம் ஆண்டுகள் அடிமைத்தனத்தில் பாரதம் தன் ஆன்மாவை இழந்துவிட்டது. எனவே அதை மீட்டெடுக்க வேண்டும் என்றார். பாரதம் என்ற பெயரையே சூட்ட வேண்டும் என்றார்.

கள்ளூர் சுப்பராவ் என்ற உறுப்பினர் பாரதம் என்ற பெயரையே ஆதரித்தார். ரிக் வேதத்தில் பாரதம் என்ற சொல் உள்ளதாக எடுத்துக்காட்டினார் (ரிக் 3, 4, 234). இந்திரனே பாரத புத்திரர்களுக்கு சந்ததியை கொடு என்ற சொற்றொடர் உள்ளதாகக் கூறினார். மேலும் வாயு புராணத்தில் இமயம் முதல் குமரி வரை பாரதத்தின் எல்லையாக வரையறுக் கப்பட்டதாகக் கூறினார்.

அடுத்துப் பேசிய மற்றொரு உறுப்பினர் பி.எம். குப்தா, பாரதம் என்ற பெயரையே ஆதரித்தார்.

பழைமைவாதிகளின் கூடாராமாகத் திகழ்ந்த இந்திய அரசியல் நிர்ணய அவையில் அண்ணல் அம்பேத்கர் அவர்களால் தனித்துப் போராடி வெற்றி பெற முடியாத சூழ்நிலையில்தான்,

‘‘இந்தியா அதாவது பாரதம் மாநிலங்களின் ஒன்றியம் ஆகும்’’ என்ற தீர்மானத்தை முன்மொழிந்தார். (அரசியல் நிர்ணய அவை விவாதங்கள் தொகுதி ஒன்பது)

தமிழ்நாட்டில் திராவிடர் இயக்கம் விழிப்பாக இருந்த காரணத்தால் நாம் பாரதம் என்ற பெயரைப் பயன்படுத்து வதில்லை. வடஇந்தியாவில் அனைத்துக் கட்சிகளும் இதை சர்வ சாதாரணமாகப் பயன்படுத்துகின்றனர். காங்கிரசுத் தலைவர் ராகுல் காந்தி கூட தன் நடைப்பயணத்திற்கு ‘பாரத் ஜடோவ்’ என்று பெயரிட்டார். இந்திய அரசின் பாரதம் என்ற அறிவிப்புக்கும் அவர் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. இந்தியா, பாரதம் இரண்டும் ஒன்றுதான் என்கிறார்.

இந்து சனாதன சாமியார்களின் சன்ஸ்தான் தயாரித்த இந்துராட்டிரத்திற்கான அரசியல் அமைப்புச் சட்டத்தின் 32 பக்க வரைவு அறிக்கையை 14.8.2022 அன்று வெளி யிட்டனர். அதில் இந்நாட்டின் பெயர் பாரத் வர்ஷ், தலை நகரம் வாரணாசி. இங்கு கிறித்தவர்களுக்கும் இசுலாமியர் களுக்கும் வாக்குரிமை இல்லை. அதுமட்டுமல்ல, பழைய யுகங்களில் இருந்த சாஸ்திரங்களே சட்டங்களாக இருக்கும் என்று அறிவித்திருந்தனர். அவர்கள் மீண்டும் நேரடியான மநுதர்ம ஆட்சி அமைக்க அறைகூவல் விடுக்கின்றனர்.

அதற்கான முன்நகர்வுகளில் ஒன்றுதான் இந்த ‘பாரத்’ என்கிற பெயர் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யாமலே மோடி அரசு வேண்டுமென்றே இந்த பெயரைப் பயன்படுத்துகிறது.

ஒன்றிய அரசின் திட்டங்களுக்கு சமற்கிருத மொழியில் பெயர் சூட்டப்படுகிறது. இந்தி பேசாத மக்களால் இப்பெயர் களை உச்சரிக்கவும் முடியாது. பாரதம் என்பது நேரடியாக இந்து மதத்துடன் தொடர்புடையது. பாரதம் என்று பெயரிட் டால் இது இந்துக்களின் நாடு என்பதாகும். இது இந்தியாவின் பன்முகத்தன்மைக்கும் சிறுபான்மை மதத்தவர்க்கும் இந்தி பேசாத பிறமொழித் தேச மக்களுக்கும் மதச்சார்பின்மைக் கோட்பாட்டிற்கும் அனைவரையும் உள்ளடக்கும் நோக்கம் கொண்ட சனநாயக நெறிக்கும் எதிரானதாகும்.

எனவே மதப்போர்வை கொண்ட பாரத்தை எதிர்ப்போம் மதச்சார்பின்மையின் குறியீட்டுச் சொல்லான இந்தியாவை உயர்த்திப் பிடிப்போம்!

## சென்னை அம்பத்தூரில்
## தமிழ்நாட்டு உரிமை மீட்புப் பொதுக் கூட்டம்




தமிழ்நாட்டு உரிமை மீட்புப் பொதுக்கூட்டம் சென்னை அம்பத்தூரில் 20.9.2023 அன்று நடைபெற்றது. அப்போது, பெரியார், மறைமலையடிகள், வ.உ. சிதம்பர னார், தமிழரசன், திலீபன், அனிதா ஆகியோரின் படங்களைத் திறந்து வைத்து மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

இல. குமார் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் சௌ. சுந்தரமூர்த்தி நோக்க உரையாற்றினார். சனாதனத்தை ஒழிப்போம். ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்ற கொள்கைகளை முன்னிறுத்தி தோழர்கள் வாலாசா வல்லவன், பொழிலன், தியாகு, பேராசிரியர் த.செயராமன் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

## வர்ணாசிரமம் வழிகாட்டும் குலத்தொழிலே

# விசுவகர்மா திட்டம்



நா. மதனகவி

2023 ஆகத்து 15 அன்று 76ஆம் விடுதலை நாளில் உரையாற்றிய இந்திய ஒன்றியத்தின் தலைமை யமைச்சர் நரேந்திர தாமோதரதாசு மோதி விசுவகர்மா என்ற திட்டத்தை அறிவித்தார். அதன்படி அவர் பிறந்த நாளான செப்டம்பர் 17 அன்று விசுவகர்மா திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கிறார்.

2023-2024 முதல் 2027-2028 வரையில் அய்ந்து நிதியாண்டுகளுக்கு விசுவகர்மா திட்டம் செயல்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்கான ரூ.13,000 கோடி நிதி ஒதுக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. 30 இலட்சம் குடும் பங்கள் பயன்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் பாரம்பரிய கைவினைஞர்கள் விசுவகர் மாக்கள் என்று குறிப்பிடப்படுகிறார்கள். கொல்லர்கள், பொற்கொல்லர்கள், குயவர்கள், தச்சர், சிற்பி, முடிதிருத்து வோர், துணி வெளுப்போர் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ள இவர்கள் குரு-சீடர்களாக தொடர்ந்து தலை முறை தலைமுறையாக இத்தொழிலைச் செய்து வருகின்றனர். அந்தக் கைவினைஞர்களின் தயாரிப்பு களை உள்நாட்டு மற்றும் பன்னாட்டளவில் சந்தை மதிப்பை உயர்த்தப் போவதாக மோதி கூறுகிறார். ஆனால் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருள் உடலு ழைப்பை மட்டுமே நம்பி வாழும் இப்பிரிவினருக்கு உதவுவது போல் காட்டி, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அவர்களின் வாக்குகளைப் பெறுவதே விசுவகர்மா திட்டத்தின் அரசியல் நோக்கமாகும்.

விசுவகர்மா திட்டத்தில் 1. தச்சர், 2. படகு உற்பத்தி யாளர், 3. கருவி செய்வோர், 4. இரும்பு கொல்லர், 5. சுத்தி மற்றும் சாதனங்கள் உற்பத்தியாளர், 6. பூட்டு, 7. சிற்பி, கல் உடைப்பவர், 8. பொற்கொல்லர், 9. குயவர், 10. மிதியடி தயாரிப்போர், 11. செங்கல் தொழிலாளர், கட்டடக்கலை மற்றும் கட்டுமானத் தொழிலாளர், 12. கூடை, பாய், துடைப்பம் மற்றும் தென்னைநார் தொழில் புரிவோர், 13. பொம்மை செய்வோர், 14. முடி திருத்துனர், 15. பூ மாலை கட்டுபவர், 16.சலவைத் தொழிலாளர்கள், 17.ஆடை வடிவமைப்பாளர்கள் மற்றும் 18. மீன்பிடி வலை உற்பத்தி யாளர்கள் என பரம்பரையாக சாதியின் அடிப்படையில் குலத்தொழில் செய் பவர்களே இத்திட்டத்தில் பயனடையத் தகுதியுடையவர்கள் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது.

விசுவகர்மா திட்டத்தின் பயனாளிகளுக்கு வழங்கப்பட வுள்ள ரூ.மூன்று இலக்கம் கடன் தொகையில், முதல் தவணையாக ரூ.1 இலக்கம் வட்டி இல்லாமலும், இரண்டாம் தவணையாக அளிக்கவுள்ள ரூ.2 இலக்கம் 5 விழுக்காடு வட்டியுடனும் அளிக்கப்படுமாம். முதல் தவணையை 18 மாதங்களில் திருப்பி செலுத்திய பிறகுதான் இரண்டாம் தவணை அளிக்கப்படும். இதை 30 மாதங்களில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

பயனாளிகள் ஒரு வாரகாலம் குலத்தொழில் பயிற்சி பெற வேண்டும். பயிற்சி பெறுபவர்களுக்கு ஒரு நாளைக்கு உரூ.500 உதவித் தொகை வழங்கப்படும். சுயதொழிலி லிருந்து ஒரு நிறுவனமாக விரிவடையும் அளவிற்குத் தொழில் முனைவோரின் குலத்தொழில் அறிவை மேம் படுத்த திறன் பயிற்சி அளிக்கப்படும் என்கிறது இந்தத் திட்டம்.




இத்திட்டத்தின் பயனாளியாகப் பதிவு செய்துகொள்ளும் நாளில் அவர் 18 வயது நிறைவடைந்தவராகவும் அவர் சார்ந்த சாதியின் தொழிலைச் செய்பவராகவும் இருக்க வேண்டும். ஊராட்சி மன்றத் தலைவர், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் நிர்வாகத் தலைவர் ஆகியோர் பயனாளி பாரம்பரியமான குலத்தொழிலில் ஈடுபட்டுள்ளார் என்பதை உறுதிசெய்து சான்றளிக்க வேண்டும்.

இது ஆர்.எஸ்.எஸ்.இன் வருணாசிரம-சாதிய அமைப்பை பாதுகாக்கும் திட்டம் தவிர வேறென்ன? பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும், பட்டியல் சாதியினரும் உயர்கல்விக் கற்ப தையும் அவர்கள் அரசு உயர் பதவிகளுக்கு வருவதையும் தடுப்பதற்கான சூதான திட்டமே இந்தத் திட்டம் ஆகும்.

1952ஆம் ஆண்டு சென்னை மாகாண முதலமைச்ச ரான இராசாசி, 6000 கிராமப்புற பள்ளிகளை மூடினார்; கிராமப்புற தொடக்கப் பள்ளிகளில் அரைநாள் படிப்பும், அரை நாள் அவரவர் சாதித் தொழிலைக் கற்க வேண்டும் என

ஆணையிட்டார். இக்குலக் கல்வி திட்டத்தை எதிர்த்து தமிழ்நாடெங்கும் பெரியாரும், தி.மு.க.வினரும் மக்களைக் கிளர்ந்தெழச் செய்ததன் விளைவாக இராசாசி பதவி விலகினார், காமராசர் முதல்வரானப் பின்பு குலக்கல்வித் திட்டம் கைவிடப்பட்டது என்பது வரலாறு.

இதையே 70 ஆண்டுகளுக்குப் பிறகு விசுவகர்மா திட்டம் என்ற பெயரில் குலக்கல்வித் திட்டத்தைப் பா.ச.க. மோடி அரசு மீண்டும் கொண்டு வந்துள்ளது.

உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையில் ஆசிரியர், ஆசிரியரல்லாத பணியிடங்களிலும் உயர் அதிகாரம் கொண்ட அரசுப் பதவிகளிலும் மிகச் சொற்ப அளவிலேயே பிற்படுத்தப்பட்ட, பட்டியல் சமூக மக்கள் இடம்பெற்றுள்ளனர். ஒன்றிய அரசின் நிர்வாகத்தில் மொத்தம் 90 செயலாளர்கள் உள்ளனர். இதில் வெறும் 3 பேர் மட்டுமே பிற்படுத்தப் பட்டவர்களாக உள்ளனர். மக்கள் தொகையில் 3 விழுக்காடு மட்டுமே உள்ள பார்ப்பனர்கள் 50 விழுக்காட்டுக்குமேல் அரசு உயர் பதவிகளில் இருப்பதும், 50 விழுக்காட்டுக் கும்மேல் உள்ள பிற்படுத்தப்பட்டவர்கள் அரசுப் பதவிகளில் வெறும் 5 விழுக்காடு அளவில் இருப்பது என்பதும் மிகவும் இரங்கத்தக்க நிலை ஆகும்.

சட்டப்படி வழங்கப்பட்டுள்ள 27 விழுக்காடு அளவையும் இன்னும் எட்டாத நிலையில்தான் கல்வியிலும் வேலையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் இருக்கின்ற இழிநிலையில் இந்த குலத்தொழில் திட்டமான விசுவகர்மா திட்டத்தைப் பா.ச.க. மோடி அரசு கொண்டு வந்துள்ளது மிகவும் கேடானது ஆகும்.

இந்தியா விடுதலையடைந்து 75 ஆண்டுகள் கடந்தும் சராசரி எழுத்தறிவு பெற்றோர் 77.7 விழுக்காடு என்ற நிலையே உள்ளது. அனைவருக்கும் கல்வி என்பது பல ஆண்டுகளாக வெற்று முழக்கமாக மட்டுமே உள்ளது. அனைவருக்கும் கல்வி கொடுக்க தவறிய, அதற்கான கட்டமைப்பை ஏற்படுத்த தவறிய, கல்வி பயின்ற அனைவருக்கும் வேலை கொடுக்கத் தவறியதற்காக கடந்த 75 ஆண்டுகளாக ஆட்சி செய்த காங்கிரசும் பாரதிய சனதா கட்சியும் வெட்கப்பட வேண்டாமா?

இந்த நிலையில்தான் இந்தியா முழுமைக்குமான ஒரே கல்விக் கொள்கையாக பா.ச.க. அரசு கொண்டு வந்துள்ளது. புதிய கல்விக் கொள்கை 2020, இயல் 4.26இல் 6 முதல் 8ஆம் வகுப்பு வரையிலான பயிலும் மாணவர்கள் உள்ளூரில் தேவைக்கு ஏற்ப அந்தந்த சமூகங்களால் அடையாளப் படுத்தப்பட்ட குலத்தொழில்களான தச்சுவேலை, மின் வேலை, உலோக வேலை, தோட்ட வேலை, மண்பாண் டங்கள் செய்தல், நுண் கலைகள், கைவினைக் கலைகள் மற்றும் இன்னபிற தொழில்களை அனுபவ பயிற்சி பாடங்களாகக் கற்றுக்கொள்வார்கள் என்று கூறுகிறது. 6 முதல் 8ஆம் வகுப்புகளுக்குத் தோதான ஒரு தொழில் பயிற்சியை அடிப்படையாகக் கொண்டதொரு பாடத் திட்டத்தை வடிவமைக்க வேண்டும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. புதிய கல்விக் கொள்கையின் ஒரு பகுதிதான் இந்த விசுவகர்மா திட்டம்.

இந்தக் கேடான புதிய தேசியக் கல்விக் கொள்கையை இந்திய அளவில் தமிழ்நாடு மட்டுமே முழுமையாக எதிர்க் கின்றது.

புதிய கல்விக் கொள்கையும் விசுவகர்மா திட்டத்தையும் ஒரேகோட்டில் இணைத்து பார்க்கலாம். குலத்தொழிலை பாதுகாக்கவே கொண்டு வந்திருக்கும் விசுவகர்மா திட்டத்தில் 12ஆம் வகுப்பு முடித்த மாணவர்களை, உயர்கல்வி பயிலும் எண்ணத்தை மழுங்கடிக்கச் செய்வது அல்லது வாய்ப்பை மறுக்கச் செய்வது என்ற நுட்பமான பார்ப்பனிய அரசியல் செயல் வடிவமே இந்த புதிய கல்விக் கொள்கையும், விசுவகர்மா திட்டமும் ஆகும்.

இந்திய அளவில் பெரும்பான்மையினராக உள்ள பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மக்கள் மற்றும் பழங்குடிகளின் அடிப்படை உரிமைகளான, கல்வி, வேலை மற்றும் அரசியல் உரிமையை அடையக் கூடாது என்பதற்காக அனைத்து நிலைகளிலும் திட்டங்களை வகுத்து 9 ஆண்டுகளாக செயல் படுத்திக் கொண்டுள்ளது இந்துத்துவ சனாதன மோதி அரசு.

மேதை அம்பேத்கர் அவர்கள் மூக்நாயக் இதழில் கூறியது போல், இந்திய விடுதலை என்பது மக்கள் தொகை யில் வெறும் 3 விழுக்காடு மக்களாக உள்ள பார்ப்பனர்களின் கைகளில் ஆட்சி அதிகாரம் மாற்றப்படுவதாக இல்லாமல், பெரும்பான்மை மக்களாக உள்ள பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மற்றும் பழங்குடி மக்களின் கைகளில் இந்திய ஆட்சி அதிகாரம் கிடைக்கும் போதுதான் இது உண்டையான விடுதலை பெற்ற நாடாக இருக்கும் என்றார். இந்த நிலையை இன்றளவிலும் நாம் அடைய முடியாமல் இருப்பது, கவலை யோடு சிந்திக்க வேண்டியது ஆகும்.

தற்போது நாம் பெற்றிருக்கும் குறைந்தபட்ச கல்வி மற்றும் அதிகார உரிமைகளையும் இல்லாமல் ஆக்குவதும், பார்ப்பனர்களே என்றென்றைக்கும் ஆதிக்கம் செய்வதை நிலைக்கச் செய்யும் புதிய கல்விக் கொள்கையும் விசுவகர்மா திட்டத்தையும் செயல்படுத்தி மீண்டும் மநுதர்மப்படி சூத்திரர் களை பழைய நிலைமைக்குக் கீழே தள்ளும் பார்ப்பனிய-கார்ப்பரேட் பாசிச பா.ச.க.-மோடி ஆட்சியைத் தூக்கிய எறியவேண்டும்.

இந்தக் கேடான விசுவகருமாத் திட்டத்தை ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து முறியடிப்போம். சமூக நீதிக்காகவும், சமத்துவத்திற்காகவும் போராடுவோம், வெற்றி பெறுவோம்.

❖

# தமிழ்நாட்டில் பாலின முரண்பாடு - மெய்மை நிலை

## (A GENDER PARADOX IN TAMILNADU)



**தமிழ்நாட்டில் பெண்கள் கல்வி கற்கும் வாய்ப்புள்ளது. ஆனாலும் பெண்கள் ஆண்களைவிடக் குறைவான ஊதியம் பெறுவதும் நடைமுறையாக உள்ளது.**

**- ஆ.கலையரசன்**

தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் மகளிரின் பங்கேற்பு ஒரு முரணானக் காட்சியைக் காட்டுகிறது. தமிழ்நாட்டில் ஒரு பெண் கல்வி கற்பதற்கும், பணிசெய்வதற்கும் பொருளாதார நவீன துறைகளில் வேலையில் அமர்வதற்கும் வாய்ப் புள்ளது. ஆனால் ஆண்களும் பெண்களும் பணியாற்று கின்ற ஒரே இடத்தில் ஆண்கள் செய்யும் அதே பணியைச் செய்திடும் பெண்ணுக்கு செயலீடுபாடு பிரிவினைச் செய்து, ஆண்களுக்கு அளிப்பதைவிட மிகவும் குறைந்த ஊதியம் அளித்திடும் நிலை உள்ளது.

மகளிர் நலனுக்கான அரசின் கொள்கையினால் பேருந்தில் மகளிருக்கு இலவயப் பயணம் போன்ற மக்கள் நலத் திட்டங்கள் மூலம் வேலை வாய்ப்பில் மகளிருக்கு உள்ள இடர்பாடுகள் களையப்பட்டுள்ளன. பெண் தொழி லாளர் தேவைப்பாட்டில் (demand) நல்ல வருவாய்த் தரும் பணிகளில் மகளிரின் பங்கு கடந்த பத்தாண்டுகளில் தமிழ்நாடு வீழ்ச்சி நோக்கித் தள்ளப்பட்டுள்ளது. மேற்கூறிய சரிவை ஈடுசெய்வதற்கு தமிழ்நாட்டரசின் திட்டங்கள் மூலம் வளர்ந்துவரும் தொழில்களுக்கு ஏற்ப மகளிருக்குத் தக்க திறன் பயிற்சி அளித்து வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டியது தேவையாகும்.

நூறாண்டாக அரசின் கொள்கைகளாலும் சமூக அணிதிரட்டல் காரணமாகவும் தமிழ்நாட்டில் தொழிலாளர் வளத்தில் மகளிரின் பங்கு அனைத்திந்திய சராசரியை விடவும் மற்ற பல மாநிலங்களை விடவும் அதிகம் ஆகும், தேசிய புள்ளியியல் அலுவலகம் வெளியிடும் காலமுறைத் தொழிலாளர்வளக் கணக்கெடுப்பு (NSSO-PLFS) 2020-21 ஆண்டிற்கான புள்ளிவிவரம் :

தமிழ்நாட்டில் மகளிர் பங்கு - 43%

அனைத்திந்திய சராசரி மகளிர் பங்கு - 32.5%

ஆயினும் பன்னாட்டு நிலைகளுடன் ஒப்பிடுகையில் தொழிலாளர்களுள் மகளிரின் பங்கு குறைவாக உள்ளது. தமிழ்நாட்டுத் தொழிலாளர் எண்ணிக்கையில் (அ) தொகையில் மகளிரின் பங்கு 1993-94இல் அதன் உச்சத்தில் 54 விழுக்காடாக இருந்தது. 2004-2005இல் 51 விழுக் காடாகக் குறைந்துவிட்டது. அதுமுதல் இறங்குமுகமாகவே உள்ளது. இந்நிலை 2017-18-இல் 34 விழுக்காடு என மிகக் குறைந்த நிலையை அடைந்தது. இது 2020-21இல் 43 விழுக்காடாக உயர்ந்தது. ஆனால் இந்த உயர்வை உண்மையான, நேர்மறை வளர்ச்சியாகக் காணக்கூடாது.



ஏனெனில் இந்த உயர்வு முக்கியமாக வேளாண்மைப் பணிகளில் ஈடுபட்டதால் ஏற்பட்டதாகும். கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் ஏற்பட்ட இடர்பாட்டினால் குடும்ப வருமானத்தை ஈடுசெய்வதற்காக அதிகப்படியான மகளிரை வேலைக்குச் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டிருக்கலாம்.

புதிய துறைகளில் மற்ற பல மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில் கணிசமான மகளிர் பணியாளர்களாக அமர்த்தப் பெற்றுள்ளனர். சேவைத் துறைகளிலும் உற்பத் தித் துறைகளிலும் 58 விழுக்காடு மகளிர் பங்கேற்றுள்ளனர். மகளிர் பங்கேற்பு குசராத்திலும் மராட்டியத்திலும் 39 விழுக் காடாகவும் அனைத்திந்திய சராசரி 37 விழுக்காடாகவும் உள்ளது. இந்திய அளவில் வேளாண்மை வேலைகள் மகளிர்மயமாகிக் கொண்டுள்ள போக்கு நிலவுகின்ற போது தமிழ்நாட்டில் வேளாண் துறையிலிருந்து மகளிர் தொழி லாளர் கணிசமாகப் பிற துறைகளுக்கு மாறியுள்ளது தனிச்சிறப்புடையதாகும்.

அனைத்திந்திய அளவில் ஒட்டுமொத்த உற்பத்தித் தொழில் துறையில் நிலையானப் பணியாளர்களாக உள்ள மகளிருள் 28 விழுக்காட்டினர் தமிழ்நாட்டில் உள்ளனர் எனக் கண்டறியப்பட்டுள்ளது. தொழில் வளர்ந்த மாநிலங்களான மராட்டியத்தில் 13 விழுக்காடாகவும் குசராத்தில் 11 விழுக் காடாகவும் உள்ளன என்பதை ஒப்பிடுகையில் தமிழ்நாட்டின்

உயர்வான நிலையை அறியலாம். ஒழுங்கமைக்கப்பட்ட உற்பத்தித் துறையில் மட்டுமே தமிழ்நாட்டு மகளிர் தொழிலாளர் பங்கு 43 விழுக்காடாக உள்ளது. இதையே வேறு வகையில் சொல்வதானால் உற்பத்தித் துறையில் பணியாற்றும் மகளிருள் பாதியளவுக்குத் தமிழ்நாட்டில் இடம்பெற்றுள்ளனர். இதேபோல் அரசு ஊழியர்களுள் மகளிர் பங்கு அனைத் திந்திய அளவில் சராசரியாக 36 விழுக்காடு என உள்ள நிலையில் தமிழ்நாட்டில் 52 விழுக்காடாக உள்ளது.

மகளிர் வேலை வாய்ப்புப் பெறுவதில் அடைந்துள்ள வெற்றியானது அவர்களுக்கு ஊதியத்தில் பாகுபாடு காட்டப் படுவதால் பெண்களை உள்ளடக்கிய வளர்ச்சி என்பது எப்போதும் உறுதி செய்யப்பட்டதாக இருப்பதில்லை. கல்வி நிலையங்களில் பெண்கள் சேர்க்கை உயர்ந்து வருவதற்கு இணையான அளவில் வேலைவாய்ப்புப் பெறுவது உயரவில்லை. ஆடவரும் மகளிரும் வேலை நாடிச் செல்லும் நிலையிலேயே வாய்ப்புகள் பெரும்பாலும் சமமாக இருப்பதில்லை. வேலை பெற்றுவிட்டாலும் வேலையில் பாகுபாடு அல்லது ஊதியத்தில் பாகுபாடு காட்டுதல் காரண மாக மகளிர் பாதிக்கப்படுகின்றனர். ஆடவர்-மகளிர் வருமான இடைவெளி அதாவது ஆடவர் வருமானத்திற்கும் மகளிர் வருமானத்திற்கும் உள்ள இடைவெளி விகிதம் இந்தியா விலேயே தமிழ்நாட்டில் மிகவும் அதிகம் ஆகும்.

சான்றாக 2020-2021-இல் நிலையானப் பணிகளில் உள்ள மகளிரின் மாத வருமானம் உரு.12,969/- ஆகவும் ஆடவரின் மாத வருமானம் உரு.17,476/- ஆகவும் இருந்தது. 2018-2021 ஆகிய 4 ஆண்டுகளின் சராசரியைக் கணக்கிட்டால், தமிழ்நாட்டில் நிலையான பணிபுரியும் மகளிர் சம்பளம் அதே தகுதி நிலையில் பணிபுரியும் ஆடவர் ஈட்டும் வருமானம் ஒரு உருபாய்க்கு 74 காசுகளாக உள்ளது. இது மராட்டியத்தில் 81 காசாகவும் குசராத்தில் 85 காசாகவும் உள்ளது. இதுவே அனைத்திந்திய சராசரியில் ஆடவர் ஈட்டும் ஒரு உருபாய்க்கு மகளிரின் வருமானம் 77 காசுகள் ஆகும்.

இந்த வருமான இடைவெளி விளக்குவது என்னவென் றால் பிற மாநிலங்கள் பலவற்றைக் காட்டிலும் தமிழ்நாட்டில் கல்வியறிவில் ஆண்-பெண் இடைவெளி மிகவும் குறைவு. ஆதலால் மனித வள முதலீட்டில் இந்த வேறுபாடுகள் வழக்கமான ஒன்று எனக் கருதிவிட முடியாது. இது தொழில் வகைப்படுத்துதலின் வெளிப்பாடு என்பது ஒரு பகுதி காரண மாக இருக்கலாம். உடலுழைப்பற்ற (அலுவலகப்) பணிகளில் மகளிர் 12 விழுக்காட்டினர் உள்ளனர். ஓரளவு செயல்திறன் தேவைப்படுகின்ற (Semi-unskilled) அல்லது செயல்திறன் தேவைப்படாத உடலுழைப்புச் சார்ந்த பணிகளிலேயே பெரும்பாலான மகளிர் பணிசெய்கின்றனர் என்பது மகளிர் ஊதியக் குறைவுக்குக் காரணமாக இருக்கலாம்.

தமிழ்நாடு மேம்பட்ட திறன்சார் அணுகுமுறையை மேற்கொண்டு தமது உத்திகளை மாற்றியமைத்திடல் வேண்டும். பள்ளிகள், கல்லூரிகள் எண்ணிக்கையை விரிவுபடுத்துவது மட்டுமே நீடித்துக் கொண்டிருக்கின்ற ஆண்-பெண் சமத்துவ மற்ற நிலையை வெற்றி கொள்ள உதவாது.

தகுதியுள்ள குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் உரு.1000/- உதவித் தொகை அளிப்பது முறைசாராத் துறைகளில் நிச்சயமற்ற வேலைகளைச் செய்து வருபவர் களின் குடும்பங்களைக் கட்டாயம் மேம்படுத்திடும். கற்றல் விளைவுகளை மேம்படுத்துதல், சேவைத் துறைப் பணிகளில் பங்கேற்பதற்கு தகுதிப்படுத்திட மகளிருக்கு திறன் மேம் பாட்டுப் பயிற்சியளித்தல் ஆகியவற்றோடு உற்பத்தித் துறைகளை வலுவூட்டுவதற்கு உரிய வழிவகைகளைக் காண்பதும் நீண்டகால உத்திகளாக இருக்க வேண்டும்.

31.07.2023, The Hindu நாளேட்டில்
வெளியான கட்டுரை; தமிழில் : **சா. குப்பன்**

*(இக்கட்டுரையாளர் முனைவர் ஆ. கலையரசன் சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தில் உதவிப் பேராசிரியர் மற்றும் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தின் தெற்காசிய நிறுவனத்தில் இணைந்துள்ள ஆய்வாளர்)*

**வேலூரில் நாங்குநேரியில் பட்டியல் மாணவர் மீது நடந்த தாக்குதல்**

## கண்டன ஆர்ப்பாட்டம்




நாங்குநேரியில் மாணவர் மீதான சாதி வெறித் தாக்குதலைக் கண்டித்து 19.8.23 அன்று வேலூரில் மே பதினேழு இயக்கம் முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தில் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் தலைமை குழு உறுப்பினர் சா.குப்பன் கண்டன உரையாற்றினார். மா.பெ.பொ.க. வேலூர் மாநகரச் செயலாளர் மீ.டில்லிபாபுவும் லோ.இரத்தினகுமாரும் பங்கேற்றனர்.

## வாலாசாபேட்டையில் நீட் தேர்வு எதிர்ப்பு மற்றும் ஆளுநர் இரவியைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

02.09.23 அன்று வாலாசாப்பேட்டையில் நீட் தேர்வு எதிர்ப்பு மற்றும் ஆளுநர் இரவியைக் கண்டித்து மே பதினேழு இயக்கத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் பல கட்சியினரும் இயக்கத்தினரும் பங்கேற்று கண்டன உரையாற்றினர். மா.பெ.பொ.க. சார்பில் சா.குப்பன் நீட் தேர்வு ஒழிக்கப்பட வேண்டும் என உரையாற்றினார்.

# சுயமரியாதைத் திருமணம் சட்டப்படிச் செல்லும் உச்சநீதிமன்றம் தீர்ப்பு!

பெரியார் அவர்கள் 1928இல் முதலாவது சுய மரியாதைத் திருமணத்தை நடத்தி வைத்தார். அதன் பின் பெரியார் கொள்கையினர் எண்ணற்றோர் சுய மரியாதைத் திருமணம் செய்து கொண்டனர். இத்திருமணங்கள் பார்ப்பனப் புரோகிதர் இல்லாமல் சமயச் சடங்குகள் இல்லாமல் நடைபெறுவனவாகும்.

இந்த வகை திருமணங்கள் சட்டப்படி செல்லாது என்று 26.8.1953 அன்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இன்றைய திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணியின் மாமனார் இராம. அழ. சிதம்பரம் - மாமியார் ரெங்கம்மாள் திருமணம். இது சாதி மறுப்பு, புரோகித மறுப்பு மற்றும் விதவை - விதவன் திருமண மாகும். 1934இல் பெரியார் இவர்கள் திருமணத்தை நடத்தி வைத்தார். சிதம்பரம் அவர்களின் முதல் மனைவியின் மகன் இறந்த நிலையில் அவருடைய மனைவி அதாவது சிதம்பரத்தின் மருமகள் தெய்வ யானை ஆச்சி என்பவர். தன் மாமனாரின் இரண்டாவது திருமணம் சுயமரியாதைத் திருமணம். அது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல; அவர்களுக்குப் பிறந்த பிள்ளைக்கு சொத்தில் பங்கு கொடுக்கக்கூடாது என்பதே இந்த வழக்கு ஆகும்.

சுயமரியாதைத் திருமணங்களைச் செல்லுபடியாக்கும் வகையில் தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன் அறிஞர் அண்ணா சுயமரியாதைத் திருமணச் சட்டத்தை இயற்றினார்.

பெரியாரின் கருத்தை அறிந்தபின் அண்ணா அவர்கள் 27.11.1967 அன்று சட்டப் பேரவையிலும் மேலவையிலும் நிறைவேற்றினார். 17.1.1968 அன்று குடிஅரசுத் தலைவர் ஒப்புதல் அளித்தார். 20.01.1968 அன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டு சுயமரியாதைத் திருமணம் சட்டமாகியது.

ஒன்றிய அரசின் 1955ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தில் (25/1955) 7ஆவது பிரிவுக்குப் பின்னர் 7-A புதியதாகச் சேர்க்கப்பட்டது.

1. உறவினர், நண்பர் அல்லது மற்றோர் முன்னி லையில் கீழ்க்கண்ட வகையில் சுயமரியாதை மணம் அல்லது சீர்திருத்த மணம் என்றோ அல்லது வெறெந்த பெயரிலோ முறையாக நிறைவேறும் திருமணத்திற்கு இப்பிரிவு பொருந்தும்.

(அ) மணமக்கள் அறிந்துள்ள மொழியில் ஒருவர் மற்றொருவரைச் சட்டப்படியான மனைவியாகவோ அல்லது கணவனாகவோ ஏற்றுக்கொள்வதாக உறுதி யளித்தல்; அல்லது


(ஆ) மணமக்கள் இருவரும் ஒருவர் மற்றொரு வருக்கு மாலை அணிவித்தல் அல்லது விரலில் மோதிரம் அணிவித்தல்; அல்லது

(இ) தாலி அணிவித்தல்.

2. இவ்வித திருமணம் இதற்கு முன்பு செய்து கொண்டவர்களுக்கும் பொருந்தும் என்றும் சட்டப் பிரிவில் 6 ஆகச் சேர்க்கப்பட்டது.

திருப்பூரில் 2014இல் வழக்குரைஞர்கள் முன்னி லையில் நடைபெற்ற சுயமரியாதைத் திருமணம் செல்லாது என சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித் தது. அதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறை யீடு செய்யப்பட்டது. நீதிபதிகள் ரவீந்திரபட், அரவிந்த குமார் இருவர் அமர்வு இவ்வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டு தமிழ்நாடு அரசு இயற்றிய சுயமரி யாதைத் திருமணச் சட்டம் 7-1 இன்படி வழக்குரைஞர் மணமக்களின் நண்பர் என்ற முறையில் அவருடைய அலுவலகத்தில் நடத்தி வைக்கப்பட்ட திருமணம் சட்டப்படி செல்லத்தக்கதே என்று தீர்ப்பளித்தது. “வயது வந்த இருவர் தாமாக முன்வந்து விருப்பப்பட்டு முடிவெடுக்கும் போது அவர்களுக்கு குடும்பத்திலிருந்து கொடுக்கப்படும் பிற அழுத்தங்களைக் கற்பனை செய்வது கடினம் அல்ல; அதனை நீதிமன்றங்கள் பரிசீலிக்காமல் விடுவது அரசமைப்புச் சட்டத்தின் 21ஆவது பிரிவு வழங்கும் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் அடிப்படை உரிமையை மீறுவதாகும்” என்றும் நீதிபதிகள் கூறியுள்ளனர். இந்தத் தீர்ப்பு தந்தை பெரியாரின் கொள்கைக்குக் கிடைத்த வெற்றி யாகும்.

## வ.உ.சி. 152ஆவது பிறந்த நாள் விழா வ.உ.சி.யும் சனாதன எதிர்ப்பும் கருத்தரங்கம்



வ.உ.சி.யின் 152ஆவது பிறந்த நாள் விழாவும் வ.உ.சி.யும் ஆரியப் பார்ப்பனிய சாதிய சனாதன எதிர்ப் பும் என்ற தலைப்பில் சென்னை செனாய் நகர் க.சீ. வாசன் இல்லத் தில் நடைபெற்றது. தெய்வமணி தலைமைத் தாங்கினார். தோழர்கள் அரங்கையா முருகன், வாலாசா வல்லவன், பொழிலன் ஆகியோர் உரையாற்றினார். மக்கள் முன்னணி இக்கருத்த ரங்கை ஏற்பாடு செய்திருந்தது.

## வெங்காயம் பதிப்பகத்தின் மூன்று நூல்கள் வெளியீட்டு விழா



16.9.2023 அன்று வெங்காயம் பதிப்பகத்தின் சார்பில் மூன்று நூல்கள் வெளியீட்டு விழா சென்னை கோட்டூர் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடை பெற்றது. பெரியாரின் இரங்கல் உரைகள், சங்கமித்ரா எழுதிய ஒரு எருதும் சில ஓநாய்களும், பெண்பக்கம் பேசுகிறேன் ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன.

பெல். இராசன் அறிமுக உரையாற்றினார். விடுதலை க. இராசேந்திரன், பேராசிரியர் சுப. வீரபாண்டியன், பேராசிரியர் கருணானந்தம் ஆகியோர் நூல்களை வெளியிட்டு சிறப்புரை ஆற்றினர்.

சங்கமித்ராவின் துணைவி ஜெயபாரதி அவர்களுக்குச் சிறப்பு செய்யப்பட்டது. வெங்காயம் பதிப்பகத்தின் உரிமையாளர் இக்லாஸ் உசேன் நன்றியுரையாற்றினார்.

நூல்களை பெறுவதற்கு :

**வெங்காயம் பதிப்பகம், செல் : 9600294284**

வேலூரில் நாங்குநேரியில் பட்டியல் மாணவர் மீது நடந்த தாக்குதல்

## கண்டன ஆர்ப்பாட்டம்



நாங்குநேரியில் பட்டியல் சாதி மாணவர் மீது கொலை வெறித்தாக்குதல் நடத்தியதைக் கண்டித்து 25.08.23 அன்று வேலூரில் மக்கள் கலை இலக்கியக் கழகம் முன்னேடுத்தது. இராவணன் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடமைக் கட்சியின் சார்பில் சா.குப்பன் கண்டன உரையாற்றினார். மா.பெ.பொ.க. தோழர்கள் மீ.டில்லிபாபுவும் லோ.இரத்தினகுமாரும் க.குப்புசாமியும் பங்கேற்றனர்.

## தந்தை பெரியாரும் தமிழின எழுச்சியும் பயிலரங்கம்



தந்தை பெரியாரும் தமிழின எழுச்சியும் என்ற தலைப்பில் பயிலரங்கத்தை 26.8.2023 அன்று சென்னை தேனாம்பேட்டை அன்பகத்தில் சென்னை மாவட்ட திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை நடத்தியது. பேரா. சுப. வீரபாண்டியன் அறிமுக உரையாற்றினார். வாலாசா வல்லவன் பயில ரங்கில் கலந்துகொண்ட தோழர்களிடையே கொள்கை விளக்க உரையாற்றினார்.

சாதி வித்தியாசமோ உயர்வு தாழ்வோ கற்பிக்கிற புஸ்தகங்களை படிக்கக்கூடாது என்று சொல்லிவிட வேண்டும். மீறிப் படிக்க ஆரம்பித்தால் அவற்றை பறிமுதல் செய்துவிட வேண்டும்.

- **பெரியார்,** 26.11.1928, சென்னை.



**நமது அரசியலமைப்பின் முதுகெலும்பை உடைத்து, நம் காலடியில் ஒரு குழியை வெட்டுவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது. சுதந்திரத்திற்குப் பிறகு நாம் மிகப்பெரிய சவாலை எதிர்கொள்கிறோம். எழுந்து நில்லுங்கள். தயவு செய்து, எழுந்து நில்லுங்கள்!**

**- அருந்ததி ராய்**

(புக்கர் பரிசு பெற்ற எழுத்தாளர்)

# தமிழ் மக்கள் உரிமைக் கூட்டியக்கம் சார்பில்

## தந்தை பெரியாரின் 145 ஆவது பிறந்த நாள்விழா





தமிழ் மக்கள் உரிமைக் கூட்டியக்கம் சார்பில் தந்தை பெரியாரின் 145 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 17-9-2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி அளவில் எர்ணாவூர்-பாரத் நகர் வட்டகம் (ரவுண்டானா) அருகே மார்க்சிய, அம்பேத்கரிய, பெரியாரிய தோழர்கள் கூடி தோழர் தாமரை (புரட்சிகர இளைஞர் முன்னணி) அவர்கள் தலைமையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாவட்டச் செயலாளர் தோழர் மாதவரம் இளங்கோவன் அவர்கள் பேரணியை தொடங்கி வைத்தார்.


தாய் தமிழ் கலைக்குழுவின் பறையிசையின் எழுச்சி யுடன் பேரணி தொடங்கி பாரத் நகரில் உள்ள அண்ணல் அம்பேத்கர் சிலைக்கு மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் தோழர் வாலாசா வல்லவன் அவர்கள் மாலை அணிவித்தார். பாரத் நகர் அம்பேத்கர் மன்றத்தில் உள்ள தந்தை பெரியார் படத்திற்கு தமிழக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் தோழர் பொழிலன் அவர்கள் மாலை அணிவித்தார். பாசிச பாஜக ஆர் எஸ் எஸ் பார்ப்பனிய சக்திகளின் முகத்திரையை கிழித்த முழக்கங்களை எழுச்சியுடன் தோழர்கள் முழங்கினர். பிறகு விம்கோ பணிமனை மெட்ரோ நிலையத்தின் எதிரில் உள்ள தாத்தா இரட்டைமலை சீனிவாசனார் சிலைக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மண்டல துணைச் செயலாளர் தோழர் முனீர் அவர்கள் மாலை அணிவித்தார். தொடர்ந்து சனாதான எதிர்ப்பு முழக்கங்களுடன் பேரணி தொடங்கி என்ஃபீல்டு தொழிற்சாலை அருகே உள்ள சென்னை மாகாணத்தை தமிழ்நாடு என்று பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணாவின் சிலைக்கு திராவிடர் விடுதலைக் கழகத்தின் தோழர் இயேசு குமார் அவர்கள் மாலை அணிவித்தார். மீண்டும் வின்னதிர பறை இசையுடன், முழக்கங்களுடனும் பேரணி தொடங்கிற்று.


நிறைவாக திருவொற்றியூர் பெரியார் நகரில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு என்ஃபீல்டு தொழிற்சங்கத்தின் மேனாள் பொதுச்செயலாளர் தோழர் ஆதித்தமிழன் அவர்கள் தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தார். தந்தை பெரியாரின் கொள்கைகளை தோழர்கள் எழுச்சியுடன் முழக்கமிட்டனர். நிறைவாக கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தை அம்பேத்கர் சிறுத்தைகள் தோழர் பாரத் குமார் அவர்கள் தலைமையேற்று நடத்தினார். சாதிய சனாதனப் பார்ப்பனிய எதிர்ப்பு கருத்துக்களை தோழர் சா. கிருஷ்ணன் (மின்வாரியம்), வடசென்னை கோபி அம்பேத்கர் பொதுவுடைமை முன்னணி, தோழர் ரவிச்சந்திரன் தந்தை பெரியார் திராவிடர் கழகம், தோழர் சிறீதர் (தமிழ் மீனவர் விடுதலை வேங்கைகள்), தோழர் கரு மாரியப்பன் (தமிழ்த் தேச இறையாண்மை), தோழர் ஜெயகிருஷ்ணன் (பெரியார் அம்பேத்கர் மக்கள் இயக்கம்) தோழர் சௌ.சுந்தரமூர்த்தி (தமிழர் விடுதலைக் கழகம்), தோழர் செந்தில் (தமிழ்த் தேச மக்கள் முன்னணி), தோழர் ஜெயராமன் மாமன்ற உறுப்பினர்-சிபிஐ (எம்), தோழர் வழக்கறிஞர் ஆனந்தன் (விடியல் களம்-விடுதலைச் சிறுத்தைகள் கட்சி) ஆகியோர் எடுத்துரைத்தனர். நிறைவாக மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமை கட்சியின் தோழர் வாலாசா வல்லவன் அவர்களும், தமிழக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் தோழர் பொழிலன் அவர்களும் பார்ப்பனிய சனாதனத்தை வீழ்த்த தொடர்ந்து நாம் களமாற்ற வேண்டும் என்று தோழர்களுக்கும், பகுதி மக்களுக்கும் எடுத்துரைத்தனர். தொழிலாளர் சீரமைப்பு இயக்கத்தின் பொதுச்செயலாளர் தோழர் சுப்பிரமணியன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது. பேரணியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி,திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக் கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம், புரட்சிகர இளைஞர் முன்னணி, அம்பேத்கர் சிறுத்தைகள், எம்ஆர்எப் டாக்டர் அம்பேத்கர் பேரவை, பெரியார் அம்பேத்கர் மக்கள் இயக்கம், அம்பேத்கர் பொதுவுடமை முன்னணி, CPI (M), CPML, (மக்கள் விடுதலை), தமிழ்த் தேச மக்கள் முன்னணி, சாதி ஒழிப்பு முன்னணி, இளந்தமிழகம், தொழிலாளர் சீரமைப்பு இயக்கம், மக்கள் தமிழகம் கட்சி, கோத்தாரி தொழிற்சங்க தலைவர் தோழர் ரமேஷ், கோரமண்டல் தொழிற்சங்கத்தின் பொதுச்செயலாளர் தோழர் ரவி, உயிர் பதிப்பகத்தின் ஆசிரியர் தோழர் சண்முகானந்தம், மற்றும் குமுக விடுதலை உணர் வாளர்கள், விடியல் களம், தமிழ் மீனவர் விடுதலை வேங்கை கள், தமிழ்நாடு அறிவியல் இயக்கம் ஆகிய இயக்கங்களின்/ கட்சிகளின் தோழர்களும், பெருவாரியாக பங்கேற்று பேரணியை மிக எழுச்சியுடன் நடத்தினர். பேரணியை மிக சிறப்பாக நடத்திட ஒத்துழைத்த, பொருளுதவி செய்த அனைத்து இயக்கங்களுக்கும் தோழர்களுக்கும் தமிழ் மக்கள் உரிமைக் கூட்டியக்கத்தின் சார்பாக நன்றி! நன்றி!! தொடர்ந்து களமாடுவோம்! பார்ப்பனிய சனாதனத்தை வீழ்த்துவோம்! பாசிச பாஜகவை தேர்தலிலும் வீழ்த்துவோம். மார்க்சிய பெரியாரிய, அம்பேத்கரிய கொள்கை களை, சிந்தனைகளை ஆயுதங்களாக கொண்டு சாதி ஒழிந்த-தமிழ் குமுக விடுதலையை வென்றெடுப்போம்! அணி திரள்வோம் தோழர்களே!

# தோழர் மதுரை எஸ்.டி.விவேகி நினைவுநாள் - 25.5.1993




எஸ்.டி.பாஷா என்ற இயற்பெயர் கொண்ட தோழர் எழுதிய "வேதமும் விஞ்ஞானமும்" என்ற நூலை படித்த பெரியார், இவரைப் பாராட்டிப் பேசினார். இந்த நூலை எழுதிய இவர் விவேகி என்று பாராட்டினார். அப்போது முதல் இவர் தன் பெயரை 'பகுத்தறிவன்' என்ற பொருள் தரும் "விவேகி" என்று வைத்துக் கொண்டார். அவரது ஒரு மகனின் பெயர் 'நெபுலா'. 26.11.1957இல் சட்டப் பிரிவுகள் எரிப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டு பெரியார் உள்ளிட்ட திராவிடர் கழகத் தோழர்கள் நிறைய பேர் சிறையில் இருந்த போது, தமிழ்நாடு முழுவதும் சுற்றிச் சுற்றிப் பொதுக் கூட்டங்களில் உரையாற்றி, இயக்கம் உயிரோட்டத்துடன் விளங்கிடக் காரணமாக இருந்தார்.

08.08.1976இல் தோழர் வே.ஆனைமுத்து அவர்களும் மற்றும் பலரும் இணைந்து மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி(1988வரை பெரியார் சமவுரிமைக் கழகம்) என இயங்கத் தொடங்கியது முதல் 10 ஆண்டுகள்- அவர் உடல் தளர்வுறும் வரை அவ்வியக்கத்தின் சொற்பொழிவாளராகத் திகழ்ந்தார். Future Shock என்ற நூல் வெளியான போது அதில் உள்ள பல செய்திகளை மக்களை ஈர்க்கும் வண்ணம் மேடைகளில் பேசியது பசுமையான நினைவுகள். அவர் தொடக்கப் பள்ளிக்கு மேல் படிக்காதவர்!

அவர் மறைந்து 30ஆண்டுகள் ஓடிவிட்டன. தோழர் எஸ்.டி.விவேகி அவர்களை நினைவு கூர்வோம்!

நூல் தேவைப்படுவோர் : தொடர்பு கொள்ள :

**டார்வின் தாசன் : 94443 37384 - கருமையப்பன் : 97883 24474**

# கலைஞர் செம்மொழி விருது தமிழறிஞர் செம்மொழி க.இராமசாமி அவர்களுக்கு வழங்கப்பெற்றது




தமிழறிஞர் க.இராமசாமி அவர்களுக்கு உயரிய விருதான கலைஞர் கருணாநிதி செம்மொழி விருது வழங்கப்பட்டது.

பேராசிரியர் செம்மொழி க.இராமசாமி அவர்களுக்கு வாழ்த்துகள்!

தகுதியானவருக்கு விருதினை அளித்த தமிழ்நாட்டு முதலமைச்சருக்குப் பாராட்டுகள்!

*- ஆசிரியர் குழு*



## புதிய சிந்தனையாளன் வளர்ச்சி நிதி செப்டம்பர்-அக்டோபர் - 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி.வி.க.விசயகுமார் | சென்னை | 5000/- | மா.முருகேசன்-அலமேலு | தீத்தாண்டப்பட்டு | 1000/- |
| சம்பந்தசிவக்குமார்-பானுமதி | காஞ்சிபுரம் | 1500/- | மா.சமத்துவமணி | மறைமலைநகர் | 1000/- |
| து.செ.நிறைமொழி | காட்டுமன்னார் கோவில் | 1000/- | சு.க.முல்லை-சே.சா.வினீத் | நாராயணன், திருவள்ளூர் | 500/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளியிடுபவர் மற்றும் ஆசிரியர் : **வாலாசா வல்லவன்**
எண்.2/12, சி.என்.கே.சந்து, சேப்பாக்கம், சென்னை - 600 005. கைப்பேசி : 8668109047
அச்சிட்டோர் : **பாவை பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்,**
16, (142), ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014. பேசி : 044-2848 2441